# அம்மா மண்டபம்

இதைவிட உற்சாகமான சந்தோஷமான தினம் இருக்க முடியுமா? திகட்டியது பரமேஸ்வரிக்கு. டூரிஸ்ட் பஸ்ஸில்தான் எத்தனை குதூகலம்! வாத்தியக் கோஷ்டி, இளமை கலாட்டா, உள்ளத்தை, நெஞ்சத்தை வலிக்காமல் பற்ற வைத்ததுபோல், ஐஸ் வைத்து ஜ்வாலைகள் அமைத்ததுபோல். அல்லது கடல் காற்றில் மைசூர் பாக்கு செய்ததுபோல், கிறுக்குப் பிடித்த கன்றுக்குட்டி சந்தோஷங்கள்... இத்தனைக்கும் இருநூறு இருநூறு மைலாகத் தினசரிப் பிரயாணம். களைப்பைத் தரவேண்டாமா? ஊஹூம்!

காரணம் விடுதலை! பங்களூரின் அவஸ்தைகளிலிருந்து விடுதலை. காலை எழுந்தால் கணவனுக்கு டிபன் பண்ணி வைத்து விட்டு, பால்காய்ச்சி 'டிகாஷன் டிகாஷன்' என்று வாரம் பூராவும் இறக்கி இறக்கி, சமைத்து, காய்கறி நறுக்கி, இஸ்திரிப் பெட்டியும் இட்லி அரைக்கும் மிஷினுமாக நழுவவிட்ட நாட்களிலிருந்து ஒரு திடீர் விடுதலை.

என்ன என்னவோ ஊர்கள், எங்கெங்கோ சாப்பாடு. அடுத்த ராத்திரி எங்கே தூக்கம் என்று நிச்சயமில்லாத தனத்தில், எதிர்பார்ப்பில் துடிப்பு. எல்லாவற்றையும்விட முக்கியம், அந்தக் குறையைப் பற்றிச் சிந்திக்க அவகாசமே இல்லாத அவசர அவசரம்.

இப்போது ஸ்ரீரங்கம் ஊரைப் பார்த்ததுமே பிடித்துப்போய் விட்டது. காரணமில்லாத பிடிப்பு! என்னவோ இந்த ஊரில் ஏதோ ஆச்சரியம் நிரம்பிய ஒரு இன்பத் திடுக்கிடல் நிகழப்போகிறது என்று அவளுக்கு உள் உணர்வில் சஞ்சலித்தது. என்ன? அதுதான். அதுதான். அந்த ரிஷி சொன்னபடி வருகிறது! அந்தக் கடிதத்தின் வாசகங்கள் அவள் மனதில் அப்படியே பதிந்து வரிக்கு வரி நினைவிருந்தது.

'அன்புள்ள குழந்தாய்!

அரங்கன் உனக்கு சகல சௌபாக்கியங்களும் அளிக்கட்டும். உன் ஜாதகத்தையும் உன் பர்த்தாவின் ஜாதகத்தையும் பார்த்ததில் தோஷம் அவரிடத்தில்தான் இருப்பது தெள்ளெனத் தெரிகிறது. அதற்கான பரிகாரம் எளிதானது. இரண்டு பேரும் தம்பதி சமேதராய் திருவரங்கம் வந்து, அம்மா மண்டபத்தில் குளித்து, ரங்கனைச் சேவித்து, உன் புருஷனின் சார்பாக வாதங்களுக்கெல்லாம் அவனிடம் நீ மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் அந்தத் தினமே ஸ்ரீரங்கத்திலேயே நீ கர்ப்பவதியாவது திண்ணம். பிறக்கும் ஆண் மகவுக்கு ரங்கன் என்று பெயர் வை.'

கடிதத்தைப் பற்றிக் கணவனிடம் சொல்லவில்லை. மனத்தில் எழுதிக்கொண்டு கிழித்துப்போட்டுவிட்டாள். கடவுள் பற்றிச் சொன்னாலே "உங்க ரங்கனுக்கு எத்தனை பெண்டாட்டி?" என்று பரிகசிப்பான். தப்பான புராணங்களைப் படித்து வைத்துக்கொண்டு "ரங்கநாதர் எதுக்கடி வருஷாவருஷம் துலுக்க நாச்சியாரைப் பார்க்க உறையூர் போகிறார்?" என்பான். இவள் பிரபந்தத்தைப் படித்தால் அவன் கார்ல் மார்க்ஸ்! தீவிர கம்யூனிஸ்ட்டு. தீவிர நாஸ்திகன். அவனை எப்படியோ அப்பா தாயே என்று அழுது, அடம் பிடித்து, ஸ்ரீரங்கம்வரை அழைத்துக்கொண்டு வந்தாகிவிட்டது, "இதபார், சாமி கும்படற பிஸினஸ் எல்லாம் நம்மகிட்ட வெச்சுக்காதே! நீ வேணும்னா உள்ள போய்க் கும்பிட்டுட்டு வா! நான் பாட்டுக்கு வெளிலே நின்னுட்டு போற வர குடுமியெல்லாம் பாத்துண்டு இருக்கேன்."

"காவேரில குளிப்பீங்க இல்லை?"

“அதுக்கென்ன! மார்க்ஸ் குளிக்காதேன்னு சொல்லலை. பால்ல குளிக்காதேன்னுதான் சொல்றார்.” குளிக்கும்வரை கொண்டு வந்தாகிவிட்டது. இதோ பழுப்புச் சுழல்களாக ஓடிக்கொண்டிருக்கும் காவேரியில் குளித்துக்கொண்டிருக்கிறான்.

எப்படியாவது அவனை நைஸ் பண்ணி சன்னதிவரை அழைத்துக் கொண்டு சென்றுவிடவேண்டும்! பார்க்கலாம், உள்ளே–கோபிகா ஸ்திரீகள் வஸ்திராபகரணம் பண்ணப்பட்ட சிலைகள் நிறைய இருக்கின்றன என்று ஆசை காட்டி அழைத்துச் சென்றுவிட வேண்டும். இப்போது குளியல் நடக்கட்டும். நல்லவேளை மார்க்ஸ் ஸ்ரீரங்கம் கோயில் படித்துறையில் ஸ்நானம் பண்ணாதே என்று எங்கேயும் எழுதவில்லை. ரிஸ்ட் வாட்ச், பணப்பை எல்லாவற்றையும் அவளிடம் கழற்றிக் கொடுத்துவிட்டு, உற்சாகமாக அலைந்துகொண்டிருந்தான். அவன் குளித்து முடித்து, தான் குளிக்கக் கரையில் காத்திருந்தாள்.

நகைகளைக் கழற்றி ஒரு கர்ச்சிப்பில் முடிந்து வைத்துத் தயாராக இருந்தாள். டூரிஸ்ட் பார்ட்டியில் இருந்த இன்னும் சில பேர் தத்தம் பைகளை அவளிடம் ஒப்படைத்துவிட்டு சற்றுத் தள்ளினாற் போல் குளிக்கப் போயிருந்தார்கள். எல்லாவற்றையும் இன்பச்சுமையாக ஏற்றுக்கொண்டு, கணவன் குளிப்பதை ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். எச்சரிக்கைக் கரம் ஒன்று எப்போதும் மூட்டையில் படிந்திருக்க ‘இதோ வருகிறேன் ரங்கநாதனே! எப்படியாவது என் கணவனை உன்பால் இழுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன். சத்தியம்! அதற்காக அழுகிறேன். சின்னக்குழந்தைபோல் தரையில் கால்களைத் தேய்த்துக்கொண்டு அடம் பிடிக்கிறேன். எப்படியாவது... பாரேன்!’

“ஹாய் பரமேஸ்வரி” என்று கூப்பிட்டான், தலையைச் சிலிர்த்தான்.

வெள்ளித் துளிகளை இரைத்தான். “நீயும் வா. ஐஸ் மாதிரி இருக்கு தண்ணி!”

“நீங்க சீக்கிரம் குளிச்சுட்டு வாங்கோ. எல்லோரும் என்கிட்ட ஒப்படைச்சுட்டு போய்ட்டா!”

“இதபார், நான் டைவ் அடிச்சுக் காட்டட்டுமா?”

“வேண்டாம். வேண்டாம்! வெள்ளம் ஜாஸ்தியா இருக்கு.”

‘தொபளக்’ என்று குட்டிக்கரணம் அடித்துத் தண்ணீரில் மறைந்து ஒரு கணம் வயிற்றில் பயத்தை நிரப்பிவிட்டு, திடீர் என்று பிறந்தான்.

“வாங்கோ, வாங்கோ!”

கையில் ஏதோ குறுகுறுக்க திரும்பிப் பார்த்தால் அந்தப் பையன் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தான். எதற்காக இப்படி எதிர்ப் பக்கத்தில் ஓடுகிறான்? யாராவது துரத்துகிறார்களா என்ன என்று திரும்பிப் பார்த்தாள். ஒருவரும் இல்லை. சின்னப்பசங்கள் என்று சிரித்துக்கொண்டு, கணவன் பக்கம் சொட்டச் சொட்ட புன்னகையுடன் பார்த்தாள்.

“உங்களைப் பார்த்தா கம்யூனிஸ்ட்ன்னு யாரும் சொல்ல மாட்டா?”

“ஏன்?” என்று துண்டுக்குள்ளிருந்து முகம் கேட்டது.

“முதலாளி வர்க்கம் மாதிரித்தான் பெருத்து, தொந்தி போட்டிருக்கிங்க!”

www.writersujatha.com

“ஒல்லியா முதலாளியும் இருக்கான். பெருமனா பாட்டாளியும் இருக்கான். கொழுப்பெல்லாம் மனசில்தான் இருக்கு. வாட்சைக் கொடு!” துணி மூட்டையிலிருந்து வாட்சை எடுத்து “எங்க மூட்டை?”

சுத்தமாக இடம் காலியாக இருந்தது.

“அய்யோ!”

“என்ன பரமேச்?”

“காணம்.”

“என்ன காணம்?”

பரபரவென்று உடம்பில் பயம் பற்றிக்கொள்ளத் தேடினாள், தேடினாள்.

“என்ன தேடறே?”

“இங்கதான் வெச்சிருந்தேன்.”

“என்னது?”

“எல்லாத்தையும்.”

“அய்யய்யோ! எல்லாத்தையும்னா எல்லாத்தையுமேவா?”

“இல்லையே, அவா குடுத்த மூட்டை இருக்கே? சின்னதா கர்சீப்பில் முடிஞ்சு வெச்சிருந்தேன்.”

“இரு, இரு! நிதானமா பதில் சொல்லு, என்ன முடிஞ்சு வெச்சிருந்தே?”

“உங்க வாட்ச்சு, பணம், நீங்க குடுத்த பணம். அப்புறம்... ”

“என்ன அப்புறம்?”

“என் சங்கிலி!”

“சங்கிலியை எதுக்குக் கழட்டித் தொலைச்சே?”

“குளிக்கறபோது தண்ணில அடிச்சுண்டு... ”

“சனியனே! குளிக்கறதுக்கு முன்னாடியே போச்சு! திருட்டுப் போச்சு.”

அவள் அழ ஆரம்பித்தாள்.

“அழு? அழுது என்ன பிரயோசனம்? கொஞ்சமாவது கவனம் வேண்டாம்! உன்னை எதுக்காக உக்காத்தி வெச்சுட்டுப் போனது? பறிகொடுத்துட்டு நிக்கறதுக்கா? முண்டம், முண்டம்!”

இப்போது அவள் காவேரிக்குப் போட்டியாய்க் கண்ணீர் பெருக்கினாள்.

“யாராவது போறதைப் பாத்தியா திருடன் மாதிரி?”

"ஒரு சின்னப்பையன் பக்கத்தில் வந்த மாதிரி இருந்தது. திரும்பப் பார்க்கறதுக்குள்ளே நிமிஷமா மறைஞ்சி போய்ட்டான்."

"நீ பாத்துண்டே இருந்தியா? கூச்சல் போடறதுதானே?"

"எனக்கு என்னமோ இந்த மாதிரி புண்ணிய ஸ்தலத்தில் திருட்டு நடக்குன்னு தோணலை!"

"என்ன சார் ஆச்சு?"

"திருட்டுப் போய்டுத்தா?"

"அடடா! ச்... ச்... ச்... "

"மொத்தம் எத்தனை போயிருக்கும்? என்ன என்ன சொன்னே முண்டமே?"

அழுதுகொண்டே "சங்கிலி, மோதிரம், வாட்ச், பணம். நீங்க கொடுத்திருந்தீங்களே... "

"அறுநூறு ரூபாய்! அதுவும் போச்சா? சரி, அவா குடுத்து வெச்ச சாமான் ஒண்ணும் போகலயா? சரியாப் பாரு!"

"இல்லை, இல்லை. அந்த விதத்தல கொஞ்சம் புண்ணியம் பண்ணியிருக்கோம்."

"புண்ணியம்! ப்ளடி ஷிட்! பேசாதே. புண்ணியத்தைத் தேடிண்டு, சாமி கும்பிட வந்தே பாரு! ஏண்டி, என்ன பாவம் பண்ண நீ? எதுக்காக? அல்லும் பகலும் விளக்கேத்தி வெச்சு சாமி கும்பிட்டியே எதுக்கு... ? சாமி திருடன் ரூபத்தில வந்து காணிக்கை எடுத்துண்டாரா?"

"எதுக்காக அந்தம்மாவைத் திட்டறீங்க. திருட்டுப் பயலுவ ரொம்ப உலாத்தறாங்க. போய், போலீசில் உடனே புகார் கொடுங்க."

"வா, என் பின்னாடி. வந்து தொலை! கொஞ்சம் இரு! அவங்க சொத்தைத் திருப்பிக் கொடுத்துட்டு வந்துடறேன். இங்கேயே அழுதுண்டு இரு!"

போலீஸ் நிலையத்துக்குப் போகும்போது "அடிச்சுண்டேன். இந்த நகையெல்லாம் வேண்டாம், எதுக்கு நகை? எதுக்கு? அதனால் முடிவில்லாத அல்லல், சே!"

போலீஸ் நிலையத்தில் எட் கான்ஸ்டபிள் தினமலர் படித்துக் கொண்டிருந்தார்.

"வாங்க! என்ன விஷயம்?"

"இன்ஸ்பெக்டர் எங்கய்யா?"

தோரணை அவரை நிமிர வைத்தது.

"கோயிலுக்குப் போயிருக்கார்."

"அவருக்குக் கோயில்ல என்ன வேலை?"

"அதைப் பத்தி உங்களுக்கென்ன?"

"உங்களுக்கெல்லாம் வேற கவர்மெண்ட் வரணும்யா?"

"சரிதான் போய்யா. விஷயம் என்ன சொல்லு. இல்லாட்டி ஊட்டைப் பார்க்க போய்க்கிட்டே இரு."

"திருட்டுப் போய்டுத்து. சுமார் ஆயிரம் ரூபா சாமான்."

"எங்கே?"

"அதான், அது என்ன இடம்? அம்மா மண்டபம்!"

"அப்படியா! கொஞ்சம் இருங்க." அவர் உள்ளே சென்று பெரிய ரிஜிஸ்தரை எடுத்து வந்து, "பேர் சொல்லுங்க?"

"யோவ்! இன்ஸ்பெக்டர் எங்கய்யா?"

"அதான் சொன்னனில்லை."

"கோயில்ல எங்க பார்க்கலாம் அவரை?"

"சன்னதியிலதான்!"

"வா பரமேஸ்வரி போகலாம்."

"எங்கே?"

"கோயிலுக்குத்தான். ரங்கநாத ஸ்வாமிகிட்டயும் ஒரு கம்ப்ளெய்ண்ட் கொடுத்துட்டு வரலாம். இன்ஸ்பெக்டர் அங்கதான் இருக்கார். அதுக்காக உள்ள போய்த் துலைக்க வேண்டியிருக்கு. உங்க எஸ். பி. யாருய்யா?"

"ஏன்? தெரியுங்களா!"

"எல்லாரையும் தெரியும். நான் சொன்னா இந்தப் போலீசே நடுங்கும்!"

"நீங்க யாருங்க? கட்சியா?"

"வா பரமேஸ்வரி."

நான்முகன் கோபுர வாசல், கெருட மண்டபம் என்று கடந்து உள்ளே செல்லும்போது பரமேஸ்வரி 'ரங்கா! என்னைக் கூப்பிடுகிறாயா?' என்று நினைத்தாள்.

நீண்ட கியூ வரிசையைக் கடந்து அதை ஒழுங்கு பண்ணிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர், ஏறக்குறைய சன்னதி வாசலிலேயே இருந்தார், நேராக க்யூ வரிசையைப் புறக்கணித்து, சன்னதிக்குள் சென்றுவிட்டான். "இன்ஸ்பெக்டர்! ஐ வாண்ட்டு ரிப்போர்ட் எ பிக் தெஃப்ட்."

"ஆ... ஆ... சேவார்த்திகளெல்லாம் படபடன்னு சேவிச்சுட்டு போறது, உங்களுக்கென்ன ஸார் அர்ச்சனையா."

"ஓய் அர்ச்சனையும் இல்லை, மண்ணாங்கட்டியும் இல்லை. தோத்துட்டு வந்து, போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்க்க வந்தேன்."

"ஸார் உங்களைத்தான் கூப்பிடறார்."

இன்ஸ்பெக்டர் அவனைத் தனியாக அழைத்துப் போக பரமேஸ்வரி பெருமாளுக்கு மிக அருகில் இருந்தாள். ‘பெருமானே, பகவானே! என்முன் ஜோதியாய் நிற்கிறாய். மார்பில் நீலமேகம்! பின்னால் கிடந்த திருஉருவம்!’ கணநேர மெய்மறப்பில் காவேரிக் கரையில் நடந்ததைப் பரிபூர்ணமாக மறந்து “ரங்கா, எனக்கு என் உள்ளம் பூராவும் நிறைந்து இருக்கும் அந்த இச்சையைப் பூர்த்தி செய்! அஞ்சு வருஷமாகப் பிள்ளைப் பேறில்லாமல் நடத்திய வெற்று வாழ்க்கைக்கு அதை முடிப்பதற்குள் ஒரு பிள்ளையைக் கொடு ரங்கா! ரங்கா?”

“வேண்டிக்கோ! திருட்டுப்போன நகை நம்ம கால்ல வந்து விழணும்னு வேண்டிக்கோ.”

போலீஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் செய்தான். எம்.பி., மினிஸ்டர் வரை போகும், பத்திரிகையில் அசெம்பிளியில் எங்கும் இந்தத் திருட்டுப் பேசப்படும் என்று தடாலடித்தான். பயந்த இன்ஸ்பெக்டர் “இன்னிக்கு சீரங்கத்தில் தங்கி இருந்துட்டு நாளைக்குப் போங்க” என்றார்.

“நாளைக்குள்ள என்ன நடக்கும்?”

“அந்தத் திருடனை உங்க முன்னால கொண்டுவந்து நிறுத்திக் காட்டுறேன். அம்மா, கொஞ்சம் வாங்க. அவனை நீங்க பாத்தீங்களா?”

“ஓடறதைப் பாத்தேன்.”

“என்ன சர்ட்டுப் போட்டிருந்தான்?”

“தெரியல! மஞ்சள் மாதிரி இருந்தது.”

“விந்தி விந்தி நடந்தானா?”

“ஓடினான் ரொம்ப வேகமா... பயந்துகொண்டே முதுகை மட்டும்தான் பார்த்தேன்.”

“சரிதான்! மறுபடி சொல்லுங்க, நதிக்கரையோரமா உட்கார்ந்திருந்தீங்க!” மறுபடி மறுபடி கேள்விகள்.

ஒரு மணிக்கு அப்புறம் களைத்துப்போய் அழ ஆரம்பித்து விட்டாள். “நீங்க போங்க. இது ஒரு எம்.ஓ. கிரைம்தான். ஆளு யாருன்னு தெரியும். காலைல புடிச்சுக் கொண்டாந்துடறேன். மணச்சநல்லூர் ஆசாமி. போங்க உங்க பொருள் கிடைச்சுடும்.”

ராத்திரி ராயகோபுரத்தருகில் மண்டபத்தை அடைத்துக் கட்டின ஓட்டலில் ரூம் எடுத்துக்கொண்டு தங்கினார்கள்.

பின்னிரவில் விழித்தெழுந்து ஒருமுறை ‘பரமேஸ்வரி’ என்று கூப்பிட்டான்.

“என்ன?”

“ஸாரி உன்னை எல்லார் முன்னாலயும் கன்னாபின்னான்னு பேசிட்டேன். ரொம்ப ஸாரி!”

“பரவாயில்லை. நான் பண்ணது தப்புத்தான்! கவனக்குறைவு.”

“எனக்கு நகை பெரிசில்லை. பணம் பெரிசில்லை. இந்த நாட்டில் இந்த மாதிரி அடிச்சுப்பிடுங்கற நிலைமை பார்த்தியா! அந்தத் திருடன் அகப்பட்டான்னா செவிட்டில அறைஞ்சு ஏண்டா உனக்கு ஒழுங்கா உழைச்சுப் பிழைக்கத் தெரியாதான்னு... ”

“அடிக்க வேண்டாம்,”

“வா பரமேஸ்வரி.”

அவளை அழைத்துக் குறுகலான நாடாக் கட்டிலில் படுக்க வைத்து “பரமேஸ்வரி! பரமேஸ்வரி!”

“வாங்க. இன்னும் கொஞ்சம்! இன்னும் கொஞ்சம்!”

காலை பத்து மணிக்கு போலீஸ் நிலையத்துக்குப் போனபோது இன்ஸ்பெக்டர் சுறுசுறுப்பாக எழுதிக்கொண்டிருந்தார். நிமிர்ந்து பார்த்து “வாங்க! யோவ், அந்தாளை அழைச்சுட்டு வாய்யா,” கான்ஸ்டபிள் உள்ளே செல்ல, “உக்காருங்க.”

“ஆளைப் புடிச்சுட்டீங்களா?”

“ஆச்சு. புடிக்காம? அம்மா நீங்க அவனைப் பாத்திங்க இல்ல?”

“நான்தான் சொன்னேனே ஓடறதைப் பாத்தேன்னு.”

“உங்க ஒய்ஃப்கிட்ட சொல்லிடுங்க, பாஸிட்டிவா அடையாளம் காட்டிடணும்.”

“பழைய கேடி அவன். வவ்வுனு புடிச்சாச்சு.”

“பணம் என்ன ஆச்சு?”

“பணத்தை செலவழிச்சுட்டான், ஒரே நாள்லே வேட்டு விட்டுட்டான்.”

“அடப்பாவி?”

“அப்புறம் நகை?”

“நகையை எங்கேயோ மார்வாடிக் கடைல கொடுத்திருக்கான். சொல்ல–மாட்டேங்கறான். நாலு தட்டுத் தட்டினா வந்துரும். நீங்க கவலைப்படாதீங்க. ஏம்மா அது என்ன சங்கிலி?”

“தாம்புக்கயிறு சங்கிலி. ஒத்தை வடம்.”

“எவ்வளவு பவுன் இருக்கும்?”

“மூணு பவுன் இருக்கும்.”

“மார்வாடி இன்னேரம் உருக்கியிருப்பான். நீங்க என்ன பண்றீங்க அந்த சங்கிலி என்ன டிசைன்னு வரஞ்சு கொடுத்துடுங்க. பவுன் கிடைச்சுடும். கிடைச்சதும் லெட்டர் போடறேன் மேக்கிங் சார்ஜஸ் மட்டும் அனுப்பிடுங்க. அதே மாதிரி ஏறக்குறைய தட்டானை வெச்சு செஞ்சு இன்ர் பண்ணி அனுப்பிடறேன். கோர்ட்டில இல்லைன்னா ஒத்துக்கமாட்டாங்க. வாடா!”

கலைந்த தலையுடன் அவன் நொண்டி நொண்டி வந்தான். பத்தொன்பது வயது இருக்கும். மீசை வைத்திருந்தான். அழுக்காக இருந்தான். வட்டமான முகம். உதடுகள் தடித்து வீங்கியிருந்தன. காதோரத்தில் ரத்தம் வடிந்து உலர்ந்திருந்தது.

“நல்லா குடிச்சுட்டு சண்டை போட்டிருக்கான், அதான் காயம். என்னடா?”



www.writersujatha.com

அவன் தலையைக் குனிந்துகொண்டு இருந்தான்.

“பாருங்கம்மா! இவன்தானே?”

பரமேஸ்வரி அவனைப் பார்த்தாள். யார் இவன்? இவன்தான் என்று எப்படி சொல்ல முடியும்?

பணம் இல்லை. நகை உருகிவிட்ட பின் என்ன அடையாளம்?

“திரும்புடா! சரியாப் பாருங்கம்மா. இவன்தானே?”

“என்ன பரமேஸ்வரி, இவன்தானே?”

“அ... இவந்தாங்க.”

“ஏய் இந்தம்மா காவேரிக் கரையில் உக்காந்துக்கிட்டு இருந்தபோது பை திருடினியா?

“ஆமாங்க. நாந்தாங்க. ஆமாங்க, ஆமாங்க!”

“பணம் எடுத்தியா?”

அவர் கிட்டப்போக அவன் கிலியிலும் பீதியிலும் “எடுத்தேன் எடுத்தேன்” என்றான். தன்னிச்சையாக அவரை சேவிக்க ஆரம்பித்தான்.

பரமேஸ்வரியின் கணவன் அவன் அருகில் சென்று “ஏய் உன் பேர் என்ன?”

“ரங்கன்.”

“இவன் இல்லை! சத்தியமாக இவன் இல்லவே இல்லை” என்று கூவினாள் பரமேஸ்வரி.

*1978*

www.writersujatha.com

# அரங்கேற்றம்

நந்தினிக்கு இன்று அரங்கேற்றம். எட்டு வருஷமாக அடையார் போய் சுற்றி வந்து சொல்லிக்கொண்ட விஷயங்களுக்கெல்லாம், முக பாவங்களுக்கெல்லாம், கண் உருட்டல்களுக்கெல்லாம், அடவுகளுக்கெல்லாம் இன்றைக்குக் கடைசிப் பரீட்சை.

கடைசி என்று நந்தினிதான் நினைத்துக்கொண்டிருக்கிறாள். அம்மாவுக்கு அப்படி இல்லை. இப்போதே மானசீகப் பத்திரிகை விமர்சனங்களின் "Miss Nandhini's thillana in Nattakurinji was superb." "குமாரி நந்தினியின் 'தாயே யசோதா'வில் கிளி கொஞ்சியது. என்ன பாவம்! என்ன ஜதி! என்ன இனிமை போங்கள்!" என்றெல்லாம் புகழை எதிர்பார்த்தாள்.

அடுத்த வருஷம் இலண்டன் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் குமாரி நந்தினியின் ஐரோப்பிய கலாச்சாரச் சுற்றுப் பயணத்தையும் எதிர்பார்க்கிறாள்.

அம்மாவுக்குத்தான் அவ்வளவு பூரிப்பு. அப்பாவைப் பொறுத்த வரையிலும் இந்த அரங்கேற்றம் என்பது ஒரு பணச் செலவு. மொத்தம் எத்தனை என்பதுதான் அவருக்கு முக்கியம். யார் யாரோ பாகவதர்களும் பண்டிதர்களும் வீட்டுக்குள் நுழைந்து அட்டகாசம் செய்கிறார்கள். வெள்ளி டம்ளரில் காப்பி சாப்பிடுகிறார்கள். டேப் ரிகார்டரில் 'தா தை' என்று சப்தம் கேட்கிறது. சலங்கைச் சப்தம் கேட்கிறது. இப்படி ஒரு பாமரத்தனமான அபிப்ராயம்தான் இருந்தது அவருக்கு.

அவருக்கு பிஸினஸ் மோட்டார் உதிரி பாகங்களில். அவர் பார்த்த நாட்டியங்கள் எல்லாம் வெளிநாட்டில் இருட்டான ரெஸ்டராண்டுகளில்.

நந்தினி? அவளுக்கு பரதநாட்டியம் பிடிக்கவில்லை. அம்மாதான், 'ஆடு, ஆடு' என்று பிய்த்துப் பிடுங்குகிறாள். அம்மாவுக்குத் தான் ஆடாத நாட்டியம் எல்லாம் மகள் ஆட வேண்டும் என்பது.

நந்தினிக்கு இந்த ஆட்டமே ஸில்லியாகப்பட்டது. ஏதோ முற்காலத்து ஜனங்களில் கோயில் தாசி, அது, இது என்கிற சூழ்நிலையில் பரத நாட்டியத்தின் இரொடிஸத்திற்குத் தேவையாக இருந்தது. இப்போது அதற்கு அர்த்தமே இல்லை எனப்பட்டது. பெண்ணை அடிமையாக்கும் பற்பல உத்திகளில் இந்த நாட்டியமும் ஒன்று என்று நினைத்தாள். இருந்தும் அம்மாவின் நிழலில், அம்மாவின் பரிபூரண ஆதிக்கத்தில் வளர்ந்தவள், வளர்கின்றவள் நந்தினி.

"நந்தினி நகத்த கடிக்காதே!"

"சரிம்மா."

"நந்தினி பட்டனை போட்டுக்கோ."

"சரிம்மா."

"நந்தினி உள்ளே போ."

"சரிம்மா."

"நந்தினி பாடிஸ் போடாம வெறுமே சட்டை. போட்டுக்காதேன்னு எத்தனை தடவை சொல்றது? போய் நேராக் கண்ணாடியிலே பார்த்துக்கோ."

“சரிம்மா.”

சாயங்காலம் டிரைவர் செல்வராஜ் துணையில்லாமல் தனியாகக் காரை எடுத்துச் செல்லக்கூடாது. தனியாக சினிமா போகக்கூடாது. ராத்திரி ஷோ அப்பா கூப்பிட்டால்கூட போகக்கூடாது.

கட்டுப்பாடுகள் இது மட்டுமா நந்தினிக்கு? டியூஷன்கள்! அதிகாலை எழுந்தவுடன் பாட்டு வாத்தியார் இரண்டு வருஷமாக சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். ‘மாய மாளவ கௌள’வை இன்னம் தாண்டவில்லை. அவர் வந்து செம்பு நிறைய காபி குடித்துவிட்டு, வெற்றிலை பாக்குப் போட்டு மொட்டை மாடியில் துப்பிவிட்டு, சைக்கிளில் புறப்படும்போது, பை நிறைய எலுமிச்சம் பழங்களுடன் வீட்டுக்குப் போன கையோடு டிராயிங் மாஸ்டர் வருவார்.

ஜிப்பா வைத்துக்கொண்டு சமீபத்தில் பிடித்த மட்ட சிகரெட் வாசனை அவரைச் சுற்றிப் பரவியிருக்க, ஒரு வருஷமாக பந்து, பட்டகம், சதுரம் போடுவதே சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். இரண்டு பேரும் சென்றதும் அவசர அவசரமாகக் காலேஜுக்குக் கிளம்பவேண்டும்.

எல்லாப் பெண்களையும் போல பஸ்ஸில் அல்ல, காரில்!

எல்லாப் பெண்களையும் போல சட்டை, பாண்ட், ஜீன்ஸ் அணிய முடியாது... பாவாடை, தாவணிதான். அதுவும் வெயில் காலத்தில் பட்டுப் பாவாடை, நைலக்ஸ் தாவணி கழுத்துவரை பட்டன் வைத்த ப்ளவுஸ். காலேஜில் அவளுக்குப் பெயர் கமலாம்பாள்; அழுகை வரும்.

மற்றப் பெண்கள் கான்டீனில் வாங்கித் தின்னும்போது இவளுக்கு வீட்டில் இருந்து, உயரமான டிபன் பாக்ஸில் வரும். டிரைவர் செல்வராஜ் கொண்டுவந்து கொடுப்பான்.
சாயங்காலம் கார் வந்து அழைத்துச் சென்று அடையார் போய், நட்டுவனார் வீட்டில் ‘தாம்–தித்தாம்–தை–தத்தை... ”

இருட்டினப்புறம் வீட்டுக்கு வந்தால் புதனும், சனியும் ‘பாட்டிக்’ வகுப்பு... திங்கள், வெள்ளி யோகாசனம். மற்ற தினங்களில் டேப் ரிக்கார்டரில் சொல்லுக்கட்டு ஒலிக்க நடனம். நந்தினிக்கு அடிக்கடி ‘மாமியார் வீட்டுக்குப் போகும் குரங்கு’ ஞாபகம் வரும். இருந்தும் ஒருவிதத்தில் நந்தினி அவள் அம்மாவைப்போல் அந்த அரங்கேற்றத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

நேற்று முன் தினத்திலிருந்தே செக்ரட்ரி ஏற்பாடுகளை எல்லாம் செய்ய ஆரம்பித்துவிட்டார். அச்சகத்திலிருந்து ஆயிரம் அழைப்பிதழ்கள் வந்தன. ஆயிரத்திலும் தங்க எழுத்துக்கள் ‘நந்தினி நந்தினி நந்தினி’ என்றன... நேற்று தையல்காரன் வீட்டிலேயே ‘டேரா’ போட்டு இருந்தான். சிவப்பில், பட்டில், சரிகையில், உட்கார்ந்தால் விசிறியாகும் புடவைகளுக்குத் தங்கத்தில் கரை வைத்தான். ஏராளமாக ரவிக்கை தைத்தான்.

இன்று நகைகள் ‘லாக்கரில்’ இருந்து வந்துசேர்ந்தன. நெற்றியிலிருந்து கால்வரை தங்கம், பவளம், வைரம், முத்து; சலங்கைகள் வந்தன; ஒவ்வொரு தடவையும் கால்கள் இடம் மாறும்போது பேசின. செக்ரட்ரி வந்தார்.

“எல்லாம் தயார்ம்மா... ஓரியண்டல் டான்ஸ் ஆம்பிக்கறதுக்கு முன்னாடி இன்டர்வல் விட்டுறலாம். ஒரு மைசூர்பாக், காராசேவை, நெஸ்கஃபே, போறாதா? அப்புறம் குச்சுப்புடி, கடைசி அயிட்டம் ஆரம்பத்திலேயே கமிஷனரைக் கூப்பிட்டுப் பேச வெச்சுடலாம்!”

"மினிஸ்டர் வரலையா ராஜாராமன்?"

"மினிஸ்டர் டூர்லே இருக்கார். டெலிபோன்ல பேசினேன். வரதுக்கு முயற்சி பண்றேன்னார். கடைசி நிமிசத்திலே வந்தாலும் வருவார். டைரக்டர் கே. பி. கூட டிரை பண்றேன்னுருக்கார்."

"பத்திரிகைகள்?"

"அத்தனைபேரும் வரா! ப்ரஸ்ஸுக்கு முன்னே ரெண்டு ரோ. அவா போட்டோகிராபர்ஸ். அதுக்கப்புறம் நம்ம போட்டோகிராபர் ரெண்டு பேர்! எல்லாரும் வரா! மாமா தான் வரணம். அவர்தான் சமயத்திலே 'டிமிக்கி' குடுத்திடுவார்."

"அவர் இன்னிக்கு வராமப் போயிடுவாரா? எவ்வளவு முக்கியமான தினம்!"

"இண்டஸ்டிரி மினிஸ்டர் வரார்னு சொல்லியிருக்கேன். எங்கேயிருந்தாலும் வந்திடுவார்!"

"பொய்யெல்லாம் சொல்ல வேண்டாம். ஏன்யா! அவருக்கும் தன் பெண் பரதநாட்டியம் அரங்கேற்றம் பார்க்ணம்னு ஆசையா இருக்காதா?"

கீழே வீடு அமர்க்களப்பட்டுக்கொண்டிருக்க மாடியில் நந்தினி காலை நீட்டிக்கொண்டு ஒரு 'அட்டைபோட்ட' புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். 'Fear of Flying'.

"என்னடி'து புஸ்தகம் படிச்சுண்டிருக்கே? சாயங்காலம். அரங்கேற்றம்! தெரியுமோல்லியோ?"

"அம்மா இன்னம் எட்டு மணி நேரம் இருக்கும்மா?"

"எட்டு மணி நேரம் எப்படி போறும்! அலங்காரம் பண்ணிக்க வேண்டாம்?"

"எட்டு மணி நேரமா?"

"கையில மருதாணி இட்டுக்கணும். காலெல்லாம் பூசி அது காயறதுக்கே நெறைய நேரமாகுமே! 'ஸின்தெட்டிக்' மருதாணி... அப்புறம் நகத்துக்கு எல்லாம் பாலீஷ் போட்டுக்கோ. மூக்குல ஈர்க்குச்சி போட்டு ஓட்டையைப் பெரிசு பண்ணிக்கோ... எத்தனை வேலை இருக்கு. என்ன புஸ்தகம் பாழாப் போற புஸ்தகம்?"

"காலேஜ் புஸ்தகம்மா. அம்மா எனக்கு பயம்மா இருக்கம்மா!"

"என்னடி பயம்?"

"அத்தனை பேருக்கு முன்னால் ஆடணமேம்மா!"

"இதபார் நந்தினி! நீ அவா எதிர்ல இருக்கறதாவே நெனைச்சுக்காதே, தனியா நடராஜா சன்னதியிலே ஆடறாப்பல நெனச்சுக்க."

"அந்த தட்டு டான்ஸ் வேண்டாம்மா."

"சேச்சே அதான் முக்கியம்! என்ன நன்னாச் செய்யற நீ அதை! அதுக்குத்தான் பாரேன் ஹாலே கை தட்டப் போறது. இதபார் நந்தினி! மொத்தம் ஆறே அயிட்டம். அதிகப்படியா ஒண்ணரை ஒண்ணேமுக்கால் மணிநேரம் ஆகும். நாளைக்குப் பாரேன்

பேப்பர்லே உன் படமும் நியூசும் வரப்போறது. எவ்வளவு பூரிப்பா இருக்கும் தெரியுமா? எனக்கு எவ்வளவு ஆனந்தம்!”

“ம் ம் ம்... !” என்று குழந்தைபோல் கொஞ்சினாள்.

“வயசு கிடாமாடு மாதிரி ஆறது. உன் வயசில எனக்கு நீ பொறந்துட்டே!”

“நீயே ஆடிடேம்மா?”

அம்மா பெருமூச்சு விட்டாள். “நான் ஆடுவேண்டி! எனக்கு ஆடணும்னுதான் ஆசை. ஆனா ஆடவேண்டிய வயசா? அப்ப எனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்தா. புஷ்பவதியான உடனேயே கர்ப்பவதியா ஆக்கிட்டார் உங்கப்பா. அதுக்கப்புறம் வீட்டுக்குள்ளேயே உட்கார்த்தி வெச்சிருக்கார். எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமோ? பிடில் வாத்தியம் கத்துக்கணம், வீணை வாசிக்கணம், நாட்டியம் ஆடணம்... அப்பல்லாம் சீரங்கத்திலே நாச்சியாரம்மா இருந்தா; ரொம்ப நன்னா சொல்லிக் கொடுப்பா. பக்கத்துவீட்டு தனலட்சுமி ஆடுவா. “ஜல் ஜல்”னு சப்தம் கேட்கும். ஆசையா இருக்கும். ஆனா உங்க பாட்டிக்கு நான் வீட்டு வாசலைத் தாண்டி வெளியே போகக்கூடாது. பவுடர் போட்டுக்கக்கூடாது. ஜன்னல் வழியே எட்டிப்பார்க்கக்கூடாது – அப்பா நான் பட்ட கஷ்டம்! என் ஆசையெல்லாம் உன் மூலம் தீர்த்துக்கறேன் நந்தினி. எனக்குக் கிடைக்காத வாய்ப்பெல்லாம் உனக்குக் கிடைக்கட்டும்னுதான் இவ்வளவு பாடுபடறேன்.”

“இதிலே என் இஷ்டம் ஒண்ணு இருக்கேம்மா?”

“உனக்கு இஷ்டமில்லியா? நீ சின்னவ; குழந்தை. உனக்கு என்ன இஷ்டம்னு எனக்குத் தெரியாதா? நான் உன்னைப் பெத்தவ இல்லியா? என் ரத்தம் இல்லியா நீ?”

அம்மா நந்தினியின் உள்ளங் கையில் சிவப்பு வட்டம் போட்டு, அதைச் சுற்றி பொட்டு பொட்டாக வட்டப் புள்ளியிட்டு, விரல்களுக்கு சிவப்பில் தொப்பி இட்டாள். சாயங்காலத்து அலங்காரம் துவங்கியது.

ஏழு மணிக்கு ஆரம்பம். 6–45க்கு ஹால் ஏறக்குறைய காலியாக இருந்தது. இரண்டு மூன்று வரிசைகள் தள்ளி அப்பாவின் ஆபீஸ்காரர்கள் வரிசையாக உட்கார்ந்–திருந்தார்கள். செக்ரட்ரி மிகவும் கவலையுடன் வாசலில் நின்றுகொண்டிருந்தார். ஒரு மணி நேரமாக அலங்காரத்துடன் ‘ஜிலு ஜிலு’ என்று திரைக்குப் பின்னால் ஸ்டூல் போட்டு உட்கார்ந்துகொண்டிருந்தாள் நந்தினி. பக்கவாட்டில் வாத்தியக்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். மிருதங்கத்திற்கு மாவு போட்டுத் தேய்த்துக்கொண்டிருந்தார். வயலில் கம்பிகள் முடுக்கப்பட்டன. கல்கண்டு போட்டுப் பால், பாடுபவர்களுக்குக் காத்திருந்தது. அந்த அம்மாள் முஷ்டிக்குள் கொஞ்சம் இருமிக்கொண்டிருந்தாள்.

நந்தினியின் அம்மா அடிக்கடி திரையை லேசாகத் திறந்து பார்த்துக்கொண்டிருந்தாள். ஹால் பூரா எத்தனை நாற்காலிகள் காலி! டாண் என்று ஏழு மணிக்கு வந்துவிடுவார்கள். இந்த பாழாய்ப் போன மனிதரை மட்டும் இன்னும் காணோம். சொந்த மகள், அவளுக்கு இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சி வாழ்வில் ஒரே முறை நிகழும் அரங்கேற்றம்; என்ன பாழாப்போன போர்டு மீட்டிங்? இன்றைக்கு ஒருநாள் நேரத்தில் வரக்கூடாதா?

செக்ரட்ரி வந்தார்.

“என்னய்யா ஒருத்தரையும் காணோம்?”

“வருவா... வருவா... ! 1200 இன்விடேஷன் போயிருக்கு. அதில் பாதிப்பேர் வந்தாலே ஹால் முக்கால்வாசி நிரம்பிடும்.”



www.writersujatha.com

அப்பா வந்துவிட்டார். நேராக ஸ்டேஜுக்கு நடந்து நந்தினியிடம் சென்றார்.

“ஹலோ நந்தினி! ஹௌடு யூ ஃபீல்?”

நந்தினி சிரித்தாள்.

“ஏன் ஒரு மாதிரி இருக்கே?”

“ஒரு மாதிரியும் இல்லை. ஒண்ணுமில்லை. சரியாகத்தான் இருக்கா! நீங்கவேற அவளை நெர்வஸ் பண்ணாதீங்கோ.”

“ஸார், நீங்க வாசல்ல போய் நில்லுங்கோ. கமிஷனர் வருவார்.”

நந்தினி உட்கார்ந்திருக்க முதுகுப் பக்கம் இன்னும் ஊசி நூல் போட்டு யாரோ தைத்துக்கொண்டிருந்தார்கள். நீளமாக ஜடை பின்னப்பட்டு அதன் முடிவில் கருங்குஞ்சங்கள் மூன்று தொங்கின. தலையில் ஒரு சந்திரபிரபை. நெற்றியில் சுட்டி, வைரத்தோடு. பதக்கம், சங்கிலி. கைநிறைய வளையல், வங்கி, நெளி. இடுப்பில் ஒட்டியாணம், சலங்கை.

“அப்பா...! என் கண்ணே பட்டுடும் போலிருக்குடீ! இதபார் கண்ணாடியிலே பார்த்துக்கோ எவ்வளவு அழகு!”

“உம்மிடியார் நகைக்கடை மாதிரி இருக்கேன்.”

“நந்தினியம்மா, வர்ணத்தை திஸ்ர நடையில் எடுத்துடலாமா?”

“எதால வேணா எடுங்க சார்.”

அவள் நடக்க நடக்க ‘ஜல் ஜல்’ என்ற சத்தம் நிழலாய் உடன் நடந்தது.

வெளியே பிரமுகர்கள் மெதுவாக வந்து சேர்ந்துகொண்டிருந்தார்கள்.

அம்மா, “நந்தினி தைரியம்மா இரு, நான் வாசலுக்குப் போறேன்” என்றாள்.

நந்தினி மெதுவாக ஓரத்தில் சென்று ஸ்டூல் மேல் உட்கார்ந்தாள். வாயிற்பக்கம் கார்கள் வந்து நின்றன. போலீஸ்காரர்கள் விசில் ஊத ஆரம்பித்தார்கள்.

நந்தினி தன் கையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். திரைக்கு முன் ‘மைக்’ நிற்க வைக்கப்பட்டது.

பிரமுகர்கள் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். ஒன்றிரண்டு ‘பிளாஷ்’கள் பளிச்–சிட்டன. பத்திரிகைக்காரர்கள் சோம்பேறித்தனமாக வாசலில் சிகரெட் பிடித்துக்–கொண்டிருந்தார்கள்.

நந்தினி எழுந்தாள்.

கமிஷனர் மைக்கை ஒரு தட்டுத் தட்டிக்கொண்டார்.

“பரத நாட்டியம் என்பது ஒரு புராதனமான கலை. நான் சமீபத்தில் நாராயணமேனன் எழுதிய கட்டுரை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன்... ”

நந்தினி ‘ஜல் ஜல்’ என்று நடந்தாள்.

"எங்கே போறீங்க?"

"பாத்ரூம்... ! இன்னும் டைம் இருக்குல்ல... "

"... அதில் கர்நாடக சங்கீதத்திற்கும் நாட்டிய சாஸ்திரத்திற்கும் உள்ள உறவுகளைப் பற்றி எழுதி இருக்கிறார் நாராயணமேனன்... "

நந்தினி பாத்ரூமில் தன் சலங்கையை சுழற்றி வைத்தாள். சிறிய இடம் அது. ஆஸ்பெஸ்டாஸ் தடுப்பு. ஒரு தொற்றல் கதவு. வெளியிலிருந்து ஒரு பிரவேசம். சுத்தம் செய்ய வருபவர்களுக்காக.

"... கலாச்சாரத்தில் நம் நாடு மிகவும் பணக்கார நாடு... "

அந்தக் கதவு அவள் எதிர்பார்த்திருந்தபடி திறந்திருந்தது. வெளியே செல்வராஜ் நின்றுகொண்டிருந்தான்.

"... இன்று நம் பிரிஸிஷன் பார்ட்ஸ் பத்மநாபனின் குமாரத்தி நந்தினியின் நாட்டிய அரங்கேற்றத்துக்கு என்னைத் தலைமை தாங்க அழைத்ததற்கு நான்... "

இருட்டில் நந்தினி சந்தில் வெளிவந்தாள். செல்வராஜ் டிரைவர் சீட்டில் உட்கார நந்தினி அவன் அருகில் உட்கார்ந்தாள்.

கார் சீறிப் புறப்பட்டது.

"... பரதநாட்டியம் நம் கலாச்சார உணர்வை வளர்ப்பது மட்டுமின்றி ஒரு நல்ல தேகப் பயிற்சியும் ஆகும்... "

கார் விரைந்தது.

நந்தினி செல்வராஜின் தோளில் தலைசாய்த்துக் கொண்டாள். எதிரே கண்ணாடியில் தொங்கிய பொம்மையின் கையைக் காலை ஆட்டி "தாம் தித்தாம் தை தத்தை" என்றாள்.

கை தட்டல் ஒலி கேட்கத் திரை திறந்தது.

*1978*

www.writersujatha.com

# அரிசி

உலகத்தில் உள்ள அத்தனை கார் மெக்கானிக்குகளும் ஏமாற்று வேலைக்காரர்கள் என்றால் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். இரண்டு மூன்று பேர் நல்லவர்களும் இருக்கிறார்கள். எனக்கு வாய்ந்த மெக்கானிக் துரதிர்ஷ்டவசமாக முன்பட்டியலைச் சார்ந்தவன். 'தேமேனு' சென்றுகொண்டிருந்த என் காரின் உட்பகுதியில் சில வினோத சப்தங்கள் திடீரென்று ஜனிக்க, மெக்கானிக்கிடம் அழைத்துச் சென்றேன் அவர் ஒரு முறை ஓட்டிப்பார்த்து 'ஸஸ்பென்ஷன் புடுங்கிக்கிச்சு' என்று சொன்னார்.

என்னதான் நான் இன்ஜினியராக இருந்தாலும் என் திறமை, துறை எல்லாம் வேறு. மோட்டாரின் உள் அவஸ்தைகளைப் பற்றிய என் அறிவை ஒரு பஸ் டிக்கெட்டில் எழுதிவிடலாம். உதாரணமாக, ஸஸ்பென்ஷன் எங்கிருக்கிறது என்று சுத்தமாகத் தெரியாது எனக்கு. இருந்தும் என் அறியாமையை மெக்கானிக்கிடம் காட்டிக்கொள்ள விழையாமல் "அப்படியா? மாத்திட்டாப் போச்சு" என்றேன்.

அந்த ஆள் உடனே ஒரு பழைய சாக்கை விரித்துக் காரின் அடியில் மறைந்தார். அங்கிருந்து பேசினார், "கிட்டு நீங்க வாங்கிட்டு வரீங்களா! நான் வாங்கிட்டு வரவா?"

"அது எங்க கிடைக்கும்?"

"ஜே. ஸி. ரோடு போகணும்."

"சரிதான்... நீங்க ஒண்ணு செய்யுங்க. மொத்தமாக ரிப்பேருக்கு எவ்வளவு ஆகும்னு எஸ்டிமேட் போட்டுச் சொல்லிடுங்க."

"அதெப்படிங்க? முளுக்கப் பார்க்காம சொல்லிட முடியாதே."

"முளுக்கப் பாருங்களேன்!"

அவர் பார்க்கும் நேரத்தில் நான் அந்தப் பட்டறையை விட்டு வெளியே வந்தேன். திரும்பிப் பார்த்தால், என் கார் ஜாக்கி போடப்பட்டுப் பரபரவென்று முன் சக்கரங்கள் நீக்கப்பட்டு எண்ணைக் கசிவுடன் வெவ்வேறு வடிவங்களில் உதிரிப் பாகங்களை இழந்துகொண்டிருந்தது.

என் வயிற்றில் கவலை கவ்விப் பிடித்தது. கழற்றிக் கழற்றி இதற்கு நூறு, அதற்கு ஐம்பது என்று ஏற்றிக்கொண்டே செல்லப் போகிறான். கார் உள்ளே சத்தம் வந்தால் என்ன குறைந்து போய்விடும்? வெட்டி வம்பில் மாட்டிக்கொண்டேன் என்று சுயமாகச் சபித்துக்கொண்டே வெளியே வந்தேன்.

அந்தப் பட்டறை தெருமுனையில் இருந்தது. மில்கார்னர் சென்ட்ரலுடன் ஒட்டிக்கொள்ளும் இடம். காலை பத்து. போக்குவரத்து கணிசமாக இருந்தது. எத்தனையோ கார்கள் ஆரோக்கியமான ஸஸ்பென்ஷனுடன் சென்றுகொண்டிருந்தன. அருகே ஒரு ஓட்டலில் காப்பி சாப்பிட்டுவிட்டு என் பலிபீடத்திற்குத் திரும்புகையில், அந்த விபத்தைப் பார்த்தேன்.

ஒரு கிழவன் சென்ட்ரல் தியேட்டர் பக்கத்திலிருந்து சைக்கிளில் லொடக்கா லொடக்கா என்று சப்தமிட்டுக்கொண்டு வந்து கொண்டிந்தான். மெயின்ரோடில் காவி நிறத்தில் ஒரு மேட்டார் வான் வந்துகொண்டிருந்தது. கிழவன் யோசிக்காமல் பார்க்காமல், நிறுத்தாமல் முட்டாள்தனமாக சரேல் என்று திரும்பி வானின் குறுக்கே சென்றுவிட்டான். அதன் டிரைவருக்கு ப்ரேக் போட சந்தர்ப்பமே கிட்டவில்லை. டம்

என்று சப்தம் கேட்டது. அப்புறம் நான் கிழவனைப் பார்க்கவில்லை. என் வயிற்றில் பந்து சுருண்டு கொண்டது.

பரபரவென்று கூட்டம் கூடிவிட்டது. எனக்கு என்ன ஆயிற்று என்று அறிந்துகொள்ளும் ஆவல் பற்றிக்கொண்டது. ஆனால், அங்கே செல்லத் தயக்கமாக இருந்தது. இருந்தும் மெல்ல நெருங்கினேன். வான் நின்றிருந்தது. கிழவன் மேல் சுத்தமாக ஏறிவிட்டது. சைக்கிள், காய்ச்சின அப்பளம்போலக் கிடந்தது.

கிழவன் கீழே ஒருக்களித்துப் படுத்தவாறு இருந்தான். அவன் மண்டையில் அடிபட்டு பக்கவாட்டில் ரத்தம் கசிந்துகொண்டிருந்தது. வாய் திறந்திருந்தது. உடல் ஒருவித நடுக்கம்போல் ஆடிக்கொண்டிருந்தது. கிழவன் உயிருடன் இருந்தான். அவன் உயிர் வேகமாகப் பிரிந்துகொண்டிருந்தது.

அவனைச் சுற்றியிருந்த நாங்கள், அதாவது பங்களூர் நகரத்தின் பொறுப்புள்ள பிரஜைகள் எப்படி நடந்துகொண்டோம்? சொல்கிறேன்.

"டிரைவர் எங்கய்யா?"

"அதோ உக்காந்துக்கிட்டிருக்காரு."

"நான் இல்லிங்க டிரைவர்!"

"ஆசாமி இறந்துக்கிட்டிருக்கிறான். தூக்குங்க."

"தூக்காதீங்க! போலீஸ் வரட்டும்!"

"அந்த ஆட்டோவெ நிறுத்தய்யா!"

நிறுத்தப்பட்ட ஆட்டோ கூட்ட வளையத்தை முத்தமிட்டுவிட்டு உடனே வேகம் பிடித்துப் பறந்தது. அருகே கடந்த பி.டி.எஸ். பஸ்ஸின் ஜன்னல் பூரா முகங்கள்! "பிரசன்னா சீக்கிரம் வந்து பாரு!" என்று பஸ்ஸின் உள்ளே ஒரு அழைப்புக் கேட்டது.

"போலீஸ் வரட்டும், அதுவரைக்கும் ஒண்ணும் செய்யக்கூடாது."

"டெலிபோன் செய்யுங்களேன்."

"ஸார், நீங்கதான் போய்ச் செய்யுங்களேன்!"

"எனக்கு அர்ஜண்டா வேலை இருக்கு. போலீஸ் வந்துருவாங்க."

இப்போது கிழவனின் நடுக்கம் நின்றிருந்தது. வாயால் பெரிசாக மூச்சுவிட்டதால் வழிந்த ரத்தத்தில் காற்றின் கொப்புளங்கள் வெடித்தன.

"ஆள் யாருங்க?"

"யாருக்குத் தெரியும்!"

"கூட ஒருத்தரும் வரலியா?"

"நீங்க என்ன பண்றீங்க. எதிர்த்தாப்பல ஓட்டலுக்குப் போய் போன் பண்ணிடுங்க" என்று என்னை ஒருவர் தேர்ந்தெடுத்தார். நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன்

www.writersujatha.com

ஓட்டலுக்குச் சென்றேன். அங்கே உற்சாகமாக எல்லோரும் டிபன் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

“டெலிபோன் செய்யணும்.”

“எழுபத்தஞ்சு பைசா.”

“தர்றேன்.”

“முதல்ல கொடுத்திடுங்க. எஸ்.டி.டி. கூடாது.”

“இல்லை போலீஸுக்கு போன் செய்யணும். ஒரு ஆக்ஸிடெண்ட்.”

“பண்ணிக்கங்க.”

“அவரச போலீஸ் உதவிக்கு என்ன நம்பர் செய்யணும்?”

“தெரியாது.”

“டைரக்டரி இல்லையா?”

“இல்லை.”

“அந்தாளு இறந்துக்கிட்டிருக்கான்.”

“ஸார், நான் உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா?”

“என்ன?”

“இதில மட்டும் மாட்டிக்காதீங்க.”

“எதில்?”

“ஆக்ஸிடென்ட் கேஸில. நான் ஒரு முறை, இந்த மாதிரி ஆக்ஸிடென்ட் கேஸ்தான். வழில கிடக்கான். கார்ல எடுத்திட்டு ஆஸ்பத்திரிக்குப் போனேன். ‘இங்க ஏன் கொண்டு வந்தே, மெடிகோ லீகல் கேஸ்... விக்டோரியா ஆஸ்பத்திரியில் எடுத்துப்பாங்க’ன் னாங்க! விக்டோரியா எவ்வளவு தூரம்? அங்கே போனேன்.

“அங்க போனா ‘போலீஸ்காரங்க இல்லாம எப்படி நீ பாடியே மட்டும் கூட்டி வரலாம்’னு ஒரு ஓரத்தில் ஒன்றரை மணி நேரம் காக்க வெச்சாங்க. அதுக்கப்புறம் அங்க போன் பண்ணி, இங்க போன் பண்ணி போலீஸ் வந்தாங்க. முதல்லயே என் மேல் ஏறினாங்க. ‘எப்படிய்யா எங்களுக்குச் சொல்லாம இங்க கொண்டுட்டு வரலாம்’னுட்டு என்னைத் திட்டினாங்க... அவங்க ஆஸ்பத்திரியில கேஸ் எடுத்துக்கிட்டபோது ஆள் போய்ட்டான். டெட் ஆன் அரைவல்னு முடிச்சுட்டுக் கையெழுத்துப்போட்டு கிடங்குக்கு அனுப்பிச்சுட்டாங்க.

“கேஸ் அதோட நின்னுச்சா? இல்லை. நான்தான் ஸார் சாட்சி. ஆறுமாசம் இழுத்து அடிச்சாங்க கோர்ட்டுக்கு... சம்மன்ஸ் வரும். அங்க போவேன்... இன்ஸ்பெக்டர் வந்தா கவர்மெண்ட் வக்கீல் வரமாட்டாரு. கவர்மெண்ட் வக்கீல் வந்தா இன்ஸ்பெக்டர் வரமாட்டாரு. ரெண்டு பேருமே வந்தா டிரைவரோட வக்கீல் ஒத்திப் போட்டுருவான்.

"அன்னிக்கு ஒரு சின்ன கணக்குக்காக மொத்தம் எனக்கு ஆன செலவைக் கணக்குப் பண்ணிப் பார்த்தேன். கிட்டத்தட்ட ஆயிரம் ரூபா. அதோட நின்னுச்சா. கேஸ் என்ன ஆச்சு, கேளுங்க. ஏறக்குறைய அந்த விபத்துக்கு நானே காரணம்கிற மாதிரி குறுக்குக் கேள்வி கேட்டு கண்ல விரலைவிட்டு ஆட்டிட்டான். வக்கீல்... விட்டாப் போதும்னு ஆய்டுச்சு! எல்லாம் எதுக்காக? ஒரு குடிமகன்கிற முறையில் என் பொறுப்பை என் கடமையைச் செஞ்சதுக்கு..."

நான் பிரமிப்புடன் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு "யாராவது போலீஸுக்குப் போன் செய்ய வேண்டாமா?" என்றேன்.

"நீங்க தாராளமாகப் பண்ணுங்க! சாட்சிக்குக் கூப்பிட்டாகூட போய்ட்டு வாங்க. எனக்கு நடந்ததெ சொல்லிட்டேன்."

"நம்பர் தெரியலையே."

"நூறு பண்ணுங்க."

நான் போலீஸுக்கு டெலிபோன் செய்துவிட்டுத் திரும்ப அங்கே சென்றேன். ஏற்கெனவே இரண்டு டிராஃபிக் போலீஸ் ஆசாமிகள் நின்று சாக்கட்டியில் கோடு போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் சென்றதும்,

"இவர்தாங்க" என்றார் ஒருவர் என்னைச் சுட்டிக்காட்டி.

"போலீசுக்குச் சொல்லிட்டேன்" என்றேன்.

"போலீஸ் வந்தாச்சு. பக்கத்தில்தானே சேஷாத்திரிபுரம் போலீஸ் ஸ்டேஷன்! அங்க போய் கூட்டி வந்துட்டார் டிரைவரு."

போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்து, "கொஞ்சம் வாங்க." என்றார். நான் தயக்கத்துடன் சென்றேன்.

"நீங்க இந்த ஆக்ஸிடெண்ட்டைப் பார்த்திங்களா?"

"ம்... பார்த்தேன்."

"உங்க பேரு..." அவர் பையிலிருந்து ஒரு டயரி புறப்பட்டது. என்னுள் எச்சரிக்கைச் சக்திகள் உயிர் பெற்றன.

"எதுக்கு?"

"எதுக்கா... விட்னஸ் ஸார். சாட்சி. நீங்க பார்க்கலை?"

"அது வந்து... பார்த்தேன்... தூரத்தில் இருந்து... சரியாப் பார்க்கலை."

"இப்பதான் பார்த்தேன்னு சொன்னீங்க. அட்ரஸ் சொல்லுங்க."

"அட்ரஸ் வந்து, நான் ஊருக்குப் புதுசுங்க."

"ஊருக்குப் புதுசா? பங்களூர்ல தங்கறவர்தானே?"

"அதாவது மெட்றாஸ்காரன் நான்."

“சரி. இங்க வேலை செய்யறவரா?”

“இல்லை... இன்ஃபாக்ட் நான் இன்னிக்கு பிருந்தாவன்ல திரும்பிடறேன்.”

அவர் நான் சொன்னதைச் சுத்தமாக நம்பவில்லை. என்னை வருத்தத்துடன் பார்த்துச் சிரித்தார்.

“ஏன் ஸார், சாட்சி சொல்றதுக்கு அவ்வளவு பயமா?”

“பயம்னு இல்லீங்க... வந்து... நான் ஊர்லயே இல்லாம இருந்தா எப்படி சாட்சி சொல்ல முடியும்? இதோ... இவர்கூடப் பார்த்தார்.”

“அய்யோ! நான் பார்க்கலை. இப்பத்தான் வரேன்.”

“யாராவது பார்த்தவங்க சாட்சி சொல்றதுக்கு வரமாட்டீங்களா... யாராவது?”
கூட்டம் மெல்லக் கலைந்தது.

நான் ஒரு சின்னச் சமாதான முயற்சியாக, “பிளீஸ் லுக் இன்ஸ்பெக்டர்! தி ஃபாக்ட் இஸ் திஸ். என்னால சாட்சிக்கு வர முடியும். எனக்கு எந்தவிதத் தயக்கமும் கிடையாது. சந்தோஷமா வருவேன். ஆனா நான் வெளியூர்க்காரன்... அதனால மெட்றாஸ்ல இருந்து எப்படி...?

இன்ஸ்பெக்டர் கோபத்துடன், “போய்யா! மெட்றாஸ் போய்யா! இங்க ஏன் நிக்கறே? போ?” என்றார். கிழவனின் அருகில் சென்றார். அவன் இது நேரத்தில் இறந்திருந்தான்.

நான் சற்று நேரம் நின்றேன். மெதுவா அருகில் இருப்பவரிடம், “மெட்ராஸ்ல இருந்து எப்படி வந்து சாட்சி சொல்ல முடியும் சொல்லுங்க.”

“அதானே! ஆவுறதில்லை அது” என்று அனுதாபித்தார்.

திரும்ப மெக்கானிக் ஷாப்பிற்கு வந்தேன். அவர் என் காரின் அழுக்கான பாகங்களைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தார்.

“கிளட்ச் ப்ளேட்டு கூட தேஞ்சிருக்கு. மாத்திரலாமா?” என்றார்.

“செய்யுங்க.”

“இன்ஜினை டவுன் பண்ணணும். மூணு நாளாகும்.”

“செய்யுங்க. எஸ்டிமேட் கொடுத்துடுங்க.”

“மொத்தம் முன்னூத்தி அம்பது... எல்லாத்துக்கும் பில் கொடுத்துர்றேன்.”

“சரி.”

“உங்க அட்ரஸ் சொல்லுங்க.”

சொன்னேன்.

“எத்தனை வருசமா அந்த ஃபாக்டரியில இருக்கீங்க?”

“ஒம்பது வருஷமா.”

“புதன்கிழமை வந்துருங்க.”

“சரி” என்று வெளியே வந்தேன்.

இப்போது அந்த காவி வர்ண வானைக் காணவில்லை. கூட்டம் விலகியிருந்தது. ஒன்றிரண்டு பேர்களே இருந்தனர். போலீஸ்காரர்களையும் காணோம்.

நான் விபத்து நடந்த இடத்தை மறுபடி கடக்க வேண்டியிருந்தது. கிழவன் கிடந்த இடத்தில் அடையாளமாக உறைந்த ரத்தத் திட்டு இருந்தது. சைக்கிள் கிடந்தது. ஏறக்குறைய கிழவனின் வயசிருக்கும் போல் புராதன சைக்கிள். அதன் ஹாண்டில் பாரில் ஒரு அழுக்குப் பை மாட்டியிருந்தது. அதில் கிழவன் அரை கிலோ அரிசி வாங்கி வைத்திருந்தான் போலும். அந்த அரிசி சாலையில் சிதறியிருந்தது. பாதி அரிசி ரத்தத்தில் இருந்தது. இரண்டு சிறுவர்கள் ரத்தம்படாத மற்ற அரிசி மணிகளை ஆர்வத்துடன் அள்ளி டிராயர் பைக்குள் அவசரமாகத் திணித்துக்கொண்டிருந்தார்கள்.

*1980*

www.writersujatha.com

# கர்ஃப்யூ

பேகம்பேட்டில் இறங்கி வெளியே வந்தபோது ஒரே ஒரு களைத்த குதிரை புல்லைத் தின்ன யோசித்துக்கொண்டிருந்தது. தேசிகனைக் காணவில்லை.

ஏதோ தப்பு என்று குமரன் நினைத்தான்.

மதியம் பன்னிரண்டு மணிக்கு இவ்வளவு அமைதியாக ஒரு ரயில் நிலையமா?

“யாரும் வரலீங்களா?” என்றாள் பூர்ணிமா.

“இல்லை. கொஞ்ச நேரம் பார்க்கலாம்.” பூர்ணிமா தன் கைவிரல்களை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தாள். மருதோன்றித் தொப்பிகள் அவள் விரல் சிவப்புக்குப் பொருத்தமாகத்தான் இருந்தன. “நல்லாவே பத்துது. ஐத்ராபாத்லதான் செய்யறாங்களாம். நாலஞ்சு பாட்டில் வாங்கிக்கிட்டுப் போவலாம்.”

“ஒரு டாக்ஸி, ஒரு ஆட்டோ இல்லையே” என்றான் குமரன்.

“உங்க நண்பர்கிட்ட மறக்காம நல்ல முத்து கடைக்குக் கூட்டிக்கிட்டுப் போகச் சொல்லுங்க.”

“ஏதாவது ஸ்ட்ரைக்கா? யாராவது பெறந்த தினமா? இன்னைக்கு என்ன தேதி?”

“அவங்க பண்டிகை ஏதாவது இருக்குமோ என்னவோ? பக்ரீத் ரம்ஜான்னு?”

இவையெல்லாம் எந்த மாதத்தில் வரும் என்றுகூட செந்தில் குமரனுக்குத் தெரியாது.

ஆபீஸில் செக்ஷனல் ஹாலிடே. ஜான், போட்டு வாங்கிக் கொள்வான். “ஏம்பா ஜான்னு பேர் வெச்சுக்கிட்டு முஸ்லீம் பண்டிகையெல்லாம் செக்ஷனல் ஹாலிடே போட்டு வாங்கிக்கறே?”

“நான் முஸ்லீம்தாங்க, அமீர்ஜான்!”

“இதோ இவர்தானா பாருங்க” என்று பூர்ணிமா காட்டினாள்.

தேசிகன் கார் நிற்பதற்கு முன்பே இறங்கிக்கொண்டு, குமரனை நோக்கி வந்து மரியாதையான தூரத்தில் நின்றுகொண்டு, பெட்டி படுக்கையைப் பிடுங்கிக்கொள்ள, “ஏன்யா லேட்டு?” என்று வினவினான் குமரன்.

“ட்ரெய்ன் லேட்டாத்தான் வரும்னு நினைச்சேன். ஹி...ஹி... ஹி...”

“ஏன் கூட்டமே இல்லை. இங்க ஏதாவது கர்ஃப்யூ இருக்கா என்ன?”

“இல்லை ஸார். பகல் வேளையில கிடையாது. அதுவும் சிகந்திராபாத்தில இதுவரைக்கும் இல்லை. ஓல்ட் ஸிட்டில சில போலீஸ் தாணாக்களை சுத்தி லக்டிக்கா பூல் இருக்கு பாருங்க அது தாண்டி அப்றம் ஸீத்தா பாக்... அதும் சாயங்காலம் இருட்டினதும்தான் கர்ஃப்யூ!”

“எதுக்காக கர்ஃப்பூ?” என்றாள் பூர்ணிமா.



www.writersujatha.com

“அதுக்கெல்லாம் காரணம் வேண்டாம்மா. அதுவும் இப்ப மினிஸ்ட்ரி வேற கலைஞ்சிருக்கா என். டி. ஆர்., என். பி. ஆர். விவகாரத்தில ரெண்டு கட்சியும் மாத்தி மாத்தி, கிளப்பி விட்டுருவாங்க.”

“எனக்கு நல்ல முத்து கிடைக்குமில்லை? அப்புறம் காஸ்ட்யூம் ஜுவல்லரி, ஐதராபாத் வளையல் விக்கிற கடையெல்லாம் திறந்திருக்குமில்லை?”

“திறந்திருக்கும்மா, கவலைப்படாதீங்கோ. பை தி வே எம் பேர் தேசிகன். நம் கம்பெனி பிராஞ்சைப் பார்த்துக்கறேன். கொஞ்சம் வந்த டயம் தான் எக்கச்சக்கமா போயிடுத்து. வேற, சமயம்னா நிறைய இடம் சுத்திப் பார்க்கலாம்.”

தேசிகன் இவர்களைச் சுற்றிக்காட்டப் பிறந்தவர்போலத் தென்பட்டார். சிரிப்பில் முகஸ்துதி பெரிய எழுத்தில் எழுதியிருக்க முன்ஸீட்டில் ஏறிக்கொண்டு உடனே குமரனை நோக்கித் திரும்பிக் கொண்டு ஆபீஸ் பற்றிப் பேச ஆரம்பித்தார். பூர்ணிமா கார் ஜன்னல் வழியாகப் புதிய நகரத்தைப் பார்த்தாள். கொஞ்சம் கொஞ்சம் பெங்களூர்போல இருந்தது. பஸ்ஸெல்லாம் பச்சையாக உலவ சுவரில் கிடைத்த இடத்தில் எல்லாம் தெலுங்கு எழுதியிருந்தது.

“டர்ன் ஓவர் மற்ற ப்ராஞ்சுகளை விட அதிகம் ஸார். ப்ராடக்ட் நல்ல டிமாண்ட் இருக்கு. இன்னும் ரெண்டு பங்கு விக்கலாம். ப்ரொடக்ஷன்ல சப்போர்ட் இல்லை.”

“எப்பவுமே இப்படித்தான் இருக்குமா உங்க ஊரு?” என்றாள் பூர்ணிமா.

“எப்படியம்மா?”

“தெருவிலே யாருமே இல்லையே, பஸ்ஸு கூட காலியாப் போறது.”

“சொன்னேனே கர்ஃப்யூ! அதுதானே தேசிகன்?”

“டே டைம்ல கிடையாது ஸார்.”

“யாருக்கும் யாருக்கும் சண்டை?”

“தெரியாதும்மா. ஆனா ஒவ்வொரு முறையும் பலி விழும்... சைக்கிள் ரிக்ஷாக்காரங்க, பால்காரங்க...”

“இங்க பார்க்க வேண்டிய இடங்கள்ளாம் என்ன சார்?”

“தேசிகன்னே கூப்பிடுங்கோ. ஸார் என்றெல்லாம் வேண்டாம், அம்மா. பார்க்கறதுக்கு ஏகப்பட்ட எடங்கள் இருக்கு. சாலர்ஜங், கோல்கொண்டா, பப்ளிக்கார்டன், சார்–மினார்ன்னு. ஆனா நீங்க பார்க்க வந்த வேளைதான் சரியில்லை. பக்ரீதும் புள்ளையார் சதுர்த்தியும் கிட்டக் கிட்ட வரதா?”

“சொன்னாக் கேட்டாத்தானே?” என்றான் குமரன். “ஒரு மாசம் கழிச்சி எல்லாம் செட்டில் ஆனப்புறம் போகலாம்னேன்.”

“ஒரு மாசம் ஆனப்புறம் இவர் எங்க கிடைப்பாருங்க? சிட்னிங்கறாரு. டோக்கியோங்கறாரு. தேசிகன், சொன்னா நம்ப மாட்டீங்க. கல்யாணம் ஆகி பதினாலு வருஷம். இதுதான் எங்க முதல் ஹனிமூன்!”

“ஏய்! பொய் சொல்லாதே!”

“தேசிகன் நீங்களே சொல்லுங்க. இவரைப் பிடிக்க இயலுமா?”

“அம்மா சொல்றது ஒருவிதத்தில வாஸ்தவம்தான் ஸார். ஸார் வந்தப்புறம் தான் கம்பெனியே ரெட்லருந்து வெளியே வந்திருக்கு. இந்த வருஷம் புல் டிவிடண்ட். ஸார் ஆபீஸ்ல எத்தனை பாப்புலர் தெரியுமா?”

“ஒரே ஒரு ஆசாமியைத் தவிர மற்றவங்க எல்லாருக்கும் பாப்புலர்.”

பூர்ணிமாவை மானசீகமாகச் சுடுவதுபோல் பாவனை செய்தான் குமரன்.

www.writersujatha.com

கார் ஒரு ஒல்லியான ஊர்வலத்திற்கு வழிவிட நிற்க வேண்டியிருந்தது. ஊர்வலத்தை விட போலீஸ்காரர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. கூச்சலும் அதிகமாக இருந்தது.

“இவங்கள்ளாம் என்ன சத்தம் போடறாங்க?”

“யாருக்கும்மா புரியும்?”

“தேசிகன் உங்களுக்குத் தெலுங்கு தெரியாதா?”

“இவங்க கத்தறது உருதுலே!”

“நாளைக்குக் காலையில பிராஞ்சுக்கு வரேன். இவளை ஒரு டூரிஸ்ட் கார்ப்பரேஷன் ஸைட் ஸீயிங் பஸ்ஸில ஏத்தி விட்டுடுங்க.”

“முடியாது. நீங்களும் கூட வந்தாகணும். நான் தனியாப் போக மாட்டேன் தேசிகன்! இவரை மட்டும் ஆபீஸ் பக்கம் அழைச்சிட்டுப் போனீங்க. எனக்குக் கெட்ட கோபம் வரும். நாங்க ஆபீஸ் விஷயமா வரலை.”

“பாருங்கம்மா. நீங்க பயப்படவே வேண்டியதில்லை. ஸார் உங்ககூட வந்தே ஆகணும். ஏன்னா டூரிஸ்ட் பஸ்ஸெல்லாம் ஒரு வாரத்துக்கு கான்ஸல். ஆபீஸ் கார் ஏற்பாடு பண்ணியிருக்கேன். அதை எடுத்துண்டு ரெண்டு பேரும் வேணுங்கற எடம் எல்லாம் சுத்திப் பார்த்துட்டாப் போச்சு.”

“இதுக்கு ஆபீஸ் காரை எடுத்துட்டுப் போக இஷ்டமில்லை தேசிகன்.”

“இப்ப நாம போறது ஆபீஸ் கார்லதான் ஸார் கவலைப்படாதீங்க. சார்ஜ் பண்ணிரலாம்” என்று சிரித்தான். “உங்க ஹஸ்பெண்ட் ரொம்ப ஆபீஸுக்காக உழைக்கிறார்.”

www.writersujatha.com

“அதான் முதல் மனைவி! அப்புறம் பஜார்ல முத்து வாங்கணும். அதுக்கு...”

“எல்லாம் ஏற்பாடு பண்ணியாச்சு. நாளைக்கு ஒரு ஆள் அழைச்சுண்டு போவான்.”

“கடையெல்லாம் திறந்திருந்தாத்தானே?” என்றான் குமரன்.

“அவங்க கடை மூடறதுக்கு முன்னாடி இவர் மூடிருவார் போலிருக்கே!”

“இந்த சமயத்துல ஐதராபாத்துக்கு நம்மை ஒருத்தரைத் தவிர வேற யாராவது ஊர் சுற்றிப் பார்க்க வருவாங்களா சொல்லு?”

“வந்தாச்சு! இனி என்ன? பார்க்கறதைப் பார்த்துட்டுப் போறது?”

www.writersujatha.com

“தேசிகன் டேஞ்சர் ஏதும் இல்லையே?”

தேசிகன் சற்றுத் தயங்கிவிட்டுத்தான், “அதெல்லாம் இல்லை ஸார்” என்றான். “பிர்லா மந்திர், நேரு பார்க், எது திறந்திருக்கோ அதைப் பார்த்துட்டாப் போறது!”

“இவளுக்கு நல்முத்து கடை திறந்திருந்தாப் போதும்!”

“கார்த்தாலை பார்க்கலாம் ஸார்” என்று தேசிகன் புறப்பட்டுச் செல்ல, ஓட்டலில் லவுஞ்சில் அதிக கூட்டம் இல்லை. “ஐதராபாத் இந்த மாதிரி இருந்து பார்த்ததே இல்லை” என்றான். முக்கந்தர் கா சிக்கந்தர் வீடியோவில் காட்டுகிறார்கள் என்று போர்டு போட்டிருந்தது. ரூம் கதவைத் திறந்ததும் ஏ.ஸியை நுட்பமாக அமைத்துவிட்டு வலுக்கட்டாயமாகப் பூர்ணிமாவுக்கு முத்தம் கொடுக்க முற்பட்டான். அவனை நாசூக்காக ஒதுக்கிவிட்டு ஜன்னல் திரையை விலக்கினாள். வெளியே மைக்ரோவேவ் டவரும் சீனிவாச கோபுரமும், உசேன் சாகர் ஏரியின் கரும் பச்சை நீர்ப் பரப்பில் பாய்மரப் படகும் தெரிந்தது. டாங்க் பண்டு ரோடில் கார்கள் சுறுசுறுப்பாக இயங்கிக்–கொண்டிருந்தாலும்,

“இந்த சமயத்துக்கு டிராஃபிக் குறைச்சல்தான்.”

“குறைச்சலா இருந்தா உங்களுக்கு என்ன? நாம கிடைக்கற இடத்தைப் பார்த்துக்க வேண்டியது. அவ்வளவுதான்.”

“உனக்கு முத்து கிடைச்சாப் போதும் இல்லையா?”

“முத்துப் போல உங்ககூட ஒரு நாள் கிடைச்சிருக்கே, அது போதும்!”

“பேசமா ஓட்டலைவிட்டு வெளிய போகவே வேண்டாம்.”

“போகாம?”

“பக்கத்தில பக்கத்தில படுத்துக்கிட்டு, டீ. வி. பார்த்துக்கிட்டு!”

“இதுக்கு எதுக்கு ஐதராபாத் வரணும்!”

“அங்க டயம் கிடைக்க மாட்டேங்கறதே!”

புதிதாகக் கல்யாணம் ஆனவர்கள்போல ஒருவரையருவர் ஸ்பரிசித்துக்கொண்டு, உதடுகளில் முத்த முத்திரை ஒத்திக்கொண்டு, வெட்கப்பட்டுக்கொண்டு, அனாவ–சியமாக ஜோக்குகளுக்குச் சிரித்துக்கொண்டு, எல்லா விளக்குகளையும் அணைத்து–விட்டு, டெலிவிஷன் சலனத்தின் வெளிச்சத்தில் நகரத்தின் வைரக் கண்கள் ஜன்னலுக்கு வெளியேயிருந்து விந்தையாய்ப் பார்த்துக் கொண்டிருக்க...

“போதுங்க. இது போதுங்க. எனக்கு இனிமே எதும் வேண்டாம் லைஃப்லே!”

“இரு! நாளைக்குக் கடைக்குப் போய் முத்துக்கள் வாங்க வேண்டாம்?”

❍

காலையிலேயே பிர்லா மந்திருக்குப் போய்விட்டார்கள். தேசிகன் சொல்லியிருந்த ஆசாமி சார்மினார் அருகில் ஒரு இடத்தில் பதினொன்றரைக்குக் காத்திருக்கப்–

போவதாகவும், முத்து வியாபாரத்துக்குக் கூட்டிச் செல்லப் போவதாகவும் சொன்னான். ஸாலர்ஜங் மியூசியத்தில் கெடிகாரம் பத்து அடிக்கும்போதே பூர்ணிமாவுக்கு இருப்புக்கொள்ளவில்லை. சலவைக்கல் ரெபெக்காவெல்லாம் அப்புறம் அவளுக்கு ஒரு பொருட்டாக இல்லை.

“நில்லும்மா. சலவைக்கல்லாலேயே சால்வை போர்த்திக்கிட்டு ஒரு பொம்பளை சிலை பார்க்கவேண்டாம்?”

“எப்பப் பார்த்தாலும் உங்களுக்குப் பொம்பளை சிலைதான்! அந்த ஆளு வந்து காத்துக்கிட்டு இருக்கப்போறான்!”

“இதெல்லாம் பார்த்தியா இந்த ரூம் பூரா ஜேடு.”

“அப்புறம் வந்து பாக்கியைப் பார்க்கலாம். அந்த ஆள் காத்துக்கிட்டு இருப்பான்.”

“காத்துக்கிட்டு இருக்கட்டுமே. பத்து நிமிஷம் லேட்டானா என்ன இப்ப?”

“அப்புறம் கடையை மூடிடுவாங்க.”

“மூடிட்டா என்ன போச்சு. இப்ப முத்து இல்லைன்னா என்ன போச்சு?”

“நீங்க சொல்வீங்க. அப்புறம் நாம ஐதராபாத் எப்ப வருவோமோ? இங்க வந்ததுக்கு ஞாபகமா ஏதாவது வேண்டாமா? அவன் காத்துக்கிட்டு இருப்பான்.”

சார்மினார் அருகில் பிரிந்த ஏராளமான சந்துகளில் ஒன்றில் அவன் காத்திருந்தான். இருவரையும் கடைக்குள் அழைத்துச் சென்றான். அரை டிராயர் டூரிஸ்ட்டுகள் காமரா மாலை அணிந்து சார்மினார் லிப்டுக்காகக் காத்திருக்க சைக்கிள் ரிக்ஷாக்கள் முடிவில்லாது ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு சென்றன.

கடைக்குள் வெள்ளையாகத் திண்டு போட்டு தரையில் உட்காருவது குமரனுக்கு சுகமாக இருந்தது. பூர்ணிமா தனக்குத் தெரிந்த அரைகுறை இந்தியில் ஷெல்புக்கு ஷெல்ஃப் தாவிக் கொண்டிருந்தாள்.

“முத்து வாங்கப் போறியா, முத்து மாலையா?”

“இருங்க. உங்களுக்கு எதுவும் தெரியாது. முதல்ல பார்க்கலாம்.”

“பார்த்துக்கிட்டு இரு. சிகரெட் குடிச்சுட்டு வந்துடறேன்.”

“பத்து நிமிஷம் சிகரெட் குடிக்காம இருக்க முடியாதா?”

“பத்து நிமிஷத்துல எங்க முடியப்போவுது! இந்தா எதுத்தாப்பலதான் கடை!”

“சீக்கிரம் வந்துருங்க.”

எதிரே இருந்த சிகரெட் கடையில் பாக்கெட் வாங்கிக்கொண்டு பாக்கிக்கு காத்திருக்கையில் பட்பட்டென்று கடைகளில் மடக்குக் கதவுகளை இழுத்து மூடும் சப்தம் கேட்டது. சட்டென்று ஒரு சந்திலிருந்து பத்துப் பதினைந்து பேர் தலையில் குல்லாய்களுடன் வெளிப்பட்டு ஓடினார்கள். அவர்கள் கையில் ஆயுதங்கள் இருந்தன. சிகரெட் கடைக்காரர் தொட்டியில் நனைந்த வெற்றிலைகளை அவசரமாகச் சேகரித்துக்கொண்டு கடைக் கதவை இழுத்து மூட, ‘பாக்கி பைசா?’ என்றான் குமரன்.

“பாகோ பாகோ” என்றான். புரியவில்லை. தெருவில் அவர்கள் மாரோ மாரோ என்று கத்திக்கொண்டே அவனை நோக்கி வந்தார்கள். குமரன் சற்று கவலையுடன் எதிர்த்த கடையில் பூர்ணிமாவைத் தேட அந்தக் கடை இழுத்து மூடியிருந்தது. பூர்ணிமா எங்கே? குறுக்கே ஓடுகையில் இரண்டு பேர் அவனை இழுத்துத் தோள் பட்டையில் பிடித்தார்கள்! தூரத்தில் மண்டையில் ஒலி பெருக்கி அணிந்த ஜீப் ஒன்று விரைவாக வந்து கொண்டிருந்தது. குமரனை பூர்ணிமாவின்பால் போகவிடாமல் அவர்கள் சூழ்ந்து கொண்டு பக்கத்து சந்தில் தள்ள முற்பட இங்கேயும் அங்கேயும் ஜனங்கள் சிதறிஓட, கண்ணீர்ப் புகை வெடிக்க, தனக்கு என்ன நிகழ்கிறதென்று குமரனுக்குப் புரியவில்லை. யாரோ “க்யாநாம்” என்று கேட்டதற்குப் பதில் சொல்வதற்கு முன் அவனை நோக்கி ஓங்கப்பட்ட ஆயுதத்தை அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

❍

இலக்கியம் சமூகப் பொறுப்புடன் தேச ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் நிலைநாட்ட வேண்டும்; சாதி மத பேதமின்றி நாமெல்லோரும் இந்தியர் என்கிற உணர்ச்சியை வளர்க்க வேண்டும் அல்லவா? எனவே குமரனைக் கத்தியால் குத்த வந்தவன் சற்றே தயங்கி அவன் முகத்தை உற்றுப்பார்த்தான். “நண்பனே, உன் முகஜாடை காலஞ்சென்ற என் அண்ணன் இப்ராஹிம்போல இருக்கிறது! உன்னைக் கொல்ல விருப்பமில்லை, வா. என் வீட்டில் மறைந்திருந்து கர்ஃப்யூ விலகியதும் வீட்டுக்குப் போ” என்றான்.

இதைத் தொடர்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு “ஜெய் ஹிந்த்” என்றனர்!

*1981*

www.writersujatha.com

# எல்டொராடோ

கதவு திறந்த மன்னிக்கு அவனை அடையாளம் தெரிந்துகொள்ள சிரமமாக இருந்தது. தெரிந்ததும் திடுக்கிட்டாள். பேசத் திணறி எச்சில் விழுங்கி "நீங்களா? எப்ப வந்தேள்?" என்றாள்.

"இப்பதான், நேர வரேன். அப்பா எப்படி இருக்கார்"

www.writersujatha.com

"அம்மா! அம்மா! யார் வந்திருக்கா பாருங்கோ."

"யாருடி?"

"பரத்!"

"பரத்தா?"

"யாரு? பரத்தா?"

"என்னது? பரத்தா!" மூலைக்கு மூலை ஆச்சரியங்கள் ஒலித்தன. ரேடியோ நிறுத்தப்பட்டது. பிள்ளைகளின் படிப்பு ரத்து செய்யப்பட்டது. அம்மா, பெரிய அண்ணா, அண்ணா, அக்கா, மன்னிகள், குழந்தைகள் எல்லோரும் ஹாலில் ஒரு அரைவட்ட விரோத விழாப் போல் வந்து சேர்ந்துகொண்டு, அவனைச் சுற்றிப் பார்வை வியூகம் அமைத்தார்கள்.

சின்ன மன்னிதான் "வா பரத்" என்றாள். எப்படி மாறிவிட்டாள்! எங்கே அந்த அழகான மணப்பெண்!

"என்னடா, எங்கே வந்தே?" அம்மா.

"அப்பாவைப் பார்க்க வந்தேம்மா. எப்படி இருக்கார்?"

"இத்தனை நாளா இல்லாம இப்ப வந்தாயா? ஏன், என்னைப் பார்க்க வரக்கூடாதா? எத்தனை வருஷமாச்சு."

"அப்பா உடம்பு ரொம்ப மோசமா இருக்குன்னு கேள்விப்பட்டேன்."

"ஏண்டா, எந்த மூஞ்சியை வெச்சுண்டு விசாரிக்கறே? துப்புக் கெட்டவனே! ஒரு கடுதாசி உண்டா? இப்ப திடீர்னு எதுக்காக வந்து நிக்கறே? எதுக்காகடா?"

www.writersujatha.com

"இல்லைம்மா. அம்பி அய்யர் சொன்னதைப் பார்த்தா அப்பாவை ஒருவேளை இனிமே பார்க்க முடியாதபடி போய்டுமோன்னு பயம் வந்துடுத்து."

"பார்த்து இப்ப என்ன கிழிக்கப் போற?"

"ஏன்னா, வந்தவரை... "

"சும்மாருடி! இது எங்க குடும்ப விஷயம். ப்ராடிகல் ஸன் வந்திருக்கான்" என்றார் அண்ணன். "ஏண்டா, பார்க்க என்ன தகுதி இருக்கு உனக்கு?"

"ஏன் பார்க்கக் கூடாதா?" என்றான் விரோதமாக.



www.writersujatha.com

“ஏய் பசங்களா! எல்லோரும் உள்ளே போங்க.”

“மகன்ங்கிற தகுதிதான் அண்ணா.”

“மகன்! ஆஹா, பெரிசா வந்துட்டான். எத்தனை நாள்டா அவருக்குச் சோறு போட்டே?”

“இதையெல்லாம் அப்புறம் பேசலாம். எனக்கு அப்பாவைப் பார்க்கணும். அவ்வளவுதான்.”

“கூடாது. முடியாது. இந்த வீட்டில நுழையறதுக்கு உனக்கு அருகதை இல்லை. அப்படியே வெளீல போ!”

“இந்த வீடு உன்னுதா அண்ணா?”

“பாத்தியாம்மா. வந்த உடனே என்ன கேள்வி கேக்கறான்?”

“எட்டு வருஷமா ஏண்டா வரலை? அதுக்குப் பதில் சொல்லு.”

“இந்த வீடு இன்னும் அப்பாதுதானே, இதில நுழைய எனக்கு உரிமை இருக்கு.”

“இவன் அப்பாவைப் பார்க்க வரலைம்மா, கிழவனார் மண்டையைப் போட்டுறப் போறார்னு சொத்தில பங்கு கேக்க வந்திருக்கான்.”

“ஏண்டா கடன்காரா! எப்படி நீ வரப்போகும்? பெத்த தாயார்க்கு ஒரு லெட்டர் போட்டியா?”

“அதுக்கெல்லாம் என்ன காரணங்கறது இங்கே எல்லோருக்கும் தெரியுமே!”

“தெரியும்! பேப்பர்ல சந்தி சிரிச்சுதே... ”

“சொத்துக்குத்தாம்மா வந்திருக்கான்.”

“இதோ பார் ஸ்ரீதர். அனாவசியமா சண்டைக்குக் காலைப் பிறாண்டாதே. எனக்கு சொத்தும் வேண்டாம். ஒரு எழவும் வேண்டாம். அப்பாவைப் பார்க்க அனுமதிச்சாப் போறும், எங்க படுத்திண்டிருக்கார்?”

“அப்படியே சுபாவம் மாறாம இருக்கான்.”

“இருந்துட்டுப் போறேன். முட்டாள்தனமாக நடந்துக்காதங்கோ. என்ன சொன்னாலும் ஏசினாலும் நான் அப்பாவைப் பார்த்துட்டுத்தான் இந்த இடத்தை விட்டுப் போகப் போறேன். அனாவசியத்துக்கு இந்த இடத்தில் சண்டையோ மூர்க்கத்தனமோ வேண்டாம். என்னைப் பிள்ளையா நினைச்சுக்க வேண்டாம். ஒரு நண்பன், இல்லை பார்வையாளனா நினைச்சுக்கங்கோ. எங்கே அவர்... ?”

“உன்னை இப்ப அவர் பார்த்தா அடையாளம் கண்டுப்பார்னு நினைக்கிறயா?”

“ஏன்? மயக்கமா?”

“இல்லை. மூஞ்சில காறித் துப்புவார்.”

“துப்பமாட்டார். நிச்சயம் என்னை அவருக்கு ஞாபகம் இருக்கும். எட்டு யுகமானாலும் ஞாபகமிருக்கும்!”

“கிழத்துக்கு நேத்திக்கு நடந்தது இன்னிக்கு நினைவில்லை... ஞாபகம் இருக்குமாம்.”

“சரிம்மா; இவனோட என்ன ரோதனை? கல்லூளிமங்கன் மாதிரி, போகமாட்டான். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. கூடப் பிறந்த தோஷத்துக்காகக் காட்டிட்டு வீட்டை விட்டு விரட்டிடலாம். ஏய் சின்னி, வாடி இங்கே. இது யார் தெரியுமா? சி... த்... தப்... பா. அழகான சித்தப்பா, அழைச்சுண்டு போய்த் தாத்தா ரூமைக் காட்டு.”

சின்னியின் பின் மௌனமாக நடந்தான். மாடிப்படி ஏறித் திரும்பும்போது அத்தனை கண்களும் அவனைக் குத்தித் துளைப்பதை உணர்ந்தான்.

எட்டு வருஷமாக விட்டுப்போன உறவு. ஒரு கடிதமில்லை விசாரிப்பில்லை, கல்யாண அழைப்பில்லை, எங்கே இருக்கிறான் என்கிற சங்கதி இல்லை. சினிமா என்றோ, டிராமா என்றோ கல்கத்தா என்றோ, காசி என்றோ, பணக்காரன் என்றோ கடனில் மூழ்கிவிட்டான் என்றோ, பெண்டாட்டி ஓடிப்போய், கிறிஸ்துவச்சியை வைத்துக்கொண்டிருக்கிறான் என்றோ கேள்விப்பட்டிருப்பார்கள். எட்டு வருஷ வெட்டுக்குப் பிறகு வதந்திகளிலிருந்து வடிவெடுத்திருக்கிறான். எப்படி ஒட்டுவார்கள்? “சித்தப்பாவா நீ?” என்றாள் சின்னி.

“ஆமாம்.” மெதுவாக அந்த மாடி அறையை அணுகினார்கள்.

“எந்த ஊர்?”

“ஏதோ ஊரு.”

“சித்தி வரலியா?”

“இல்லை.”

“செத்துப்போய்ட்டாளா?”

“இல்லை.”

“என்ன வேலை பண்றேள்?”

“அலையறேன்.”

“எதுக்கு?”

“எதுக்கு?”

“ஜெயிலுக்குப் போயிருந்தேள்னு சொன்னாளே, அந்த சித்தப்பாவா நீ?”

“ஏய் சின்னி, பேசாம ரூமைக் காட்டிட்டு திரும்பி வா!”

சின்னி கதவைத் திறந்து, “உள்ளே போங்கோ, தாத்தா தூங்கிண்டிருப்பார்” என்று சொல்லிவிட்டு விலகினாள்.

உள்ளே டெட்டால் வாசனையடித்தது. ஏறக்குறைய இருட்டாக சைபர் வாட் நியான் ஒளியில் தரையில் ஒரு போர்வைக் குவியல் தெரிந்தது.

சுவற்றில் தடவி விளக்குப் போட்டு அதை அணுகினான். குனிந்து மெல்ல விலக்கினான். அதிர்ந்துபோனான்.

மை காட்! இது அப்பா இல்லை, நான் பார்த்த அப்பாவின் பாதி! சுருங்கிப் போய்விட்டார். கண்கள் இருட்டுப் பொந்துகளாக மூடி, கன்னங்கள் ஒட்டிப்போய், கை நரம்புகளும் மார்பு எலும்புகளும் தெரிய... பிராணன்?

“அப்பா!”

பதில் இல்லை. சற்று நேரம் அவரைப் பார்த்துக்கொண்டு அழுதான். மன வெளிச்சத்தில் சட் சட் என்று அந்த மனிதரின் ஞாபக பிம்பங்கள் மாறின.

“அப்பா! அப்பா!”

படுக்கையருகில் உட்கார்ந்து நெற்றியைத் தொட்டான். சூடு. அந்தக் கையெலும்பை எடுத்துத் தன் கன்னத்தில் வைத்துக்கொண் டான். அழுகை பீறிட்டது.

“அப்பா!”

சட்டென்று கனவுச் சங்கிலியிலிருந்து விடுதலை பெற்றவர்போல் சிலிர்த்துக் கண் விழித்தார்.

“யாரு?”

“நான்தாம்பா, பரத் வந்திருக்கேன்.”

மெல்லத் தலைநகர்த்தி அவனைப் பார்த்தார்.

“பரத்தா... ? பரத்தா... ? என் மூணாவது பையனா?”

“ஆமாம்ப்பா ஆமாம்.”

“நீதானா?” – என்ன கிணற்றுக் குரல் அது! எட்டு வருஷத்துக்கு முந்தைய ஒலி முழக்கம் எங்கே?

“நான்தாம்பா.”

“சௌக்கியமா இருக்கியா?”

“இருக்கேம்பா.”

“ரொம்ப நாளா காணோம்.”

“வந்துட்டேம்பா.”

“தெரியும். நீ வருவேன்னு தெரியும். சாப்பிட்டியா?”

“இல்லைப்பா.”

“ சாப்ட்டுரு, ராட்சசிகள்ளாம் அப்புறம் இல்லைன்னுடுவா. மூணு ராட்சசி... நாலு ராட்சசி.”

“என்னப்பா உனக்கு உடம்பு?”

“களைப்புப்பா! அலுப்பு... போறும்! நிஜமாவே பரத்தா... ”

அந்தக் கரம் சிரமப்பட்டு மேல் வந்து அவன் தலைமயிரைக் கலைத்து, “பரத்! உனக்குத்தான்... உனக்குத்தான் சரியாவே ஏதும் செய்யலை... ” கிழவரின் கண்கள் கலங்கின.

“அதெல்லாம் இல்லைப்பா.”

“என்னைப் பாரு. சீக்கிரம் செத்துப்போய்டுவேனா? சீக்கிரம் போய்ட்டா தேவலாம்.”

“இல்லைப்பா, தேவலையாய்டும்.”

“உன்னைப் பத்திதான் சதா நினைப்பு... ”

“எனக்கும்பா!”

“கிட்ட வா.” கிழவர் மெல்ல, ஒவ்வொரு வார்த்தையாக யோசித்து யோசித்து, மிக மெலித்த குரலில் பேசினார்.

“இந்த ரூமைப் பாரு. சுடுகாடு மாதிரி இல்லை? என்னை இதிலே போட்டு அடைச்சுட்டு எல்லாரும் கீழயே இருக்கா. தினத்துக்கு ஒரு அஞ்சு நிமிஷம் பேச ஆளில்லை. நாக்கு செத்துப் போச்சு. ஆரஞ்சுப் பழம் வாங்கிக் கொடுன்னு ஒரு வாரமா சொல்லிண்டிருக்கேன்... இங்க வேற யாரும் இல்லையே?”

“இல்லைப்பா!”

“பழம் எல்லாம் கீழே வெச்சிண்டிருப்பா, அவாளே சாப்படறா... உங்கம்மா மூத்த ராட்சசி. என்னை வந்து பார்த்து மூணு நாளாச்சு, எல்லாரும் காத்திண்டிருக்கா பரத்!”

“அதெல்லாம் இல்லைப்பா, சரியாய்டும்.”

“ஆரஞ்சுப்பழம் வாங்கித் தரயா?”

“தரேன்ப்பா!”

“இத பார் மருந்து... இதில் விஷம் கலந்திருக்கா. நான் குடிக்க மாட்டேன்.

“அப்படி எல்லாம் செய்யமாட்டாப்பா.”

“எல்லாரும் காத்துண்டிருக்கா... நீ எந்த ஊர்ல இருக்கே?”

“ஏதோ ஊர்ப்பா. ஸ்திரமா எதும் இல்லை.”

“வீட்டில இருக்கயா?”

“இல்லை, ரூம்ல.”

“எனக்கு இடம் இருக்குமா? என்னை அழைச்சுண்டு போறியா?”

“சரிப்பா.”

“இப்ப போகலாமா?”

“இல்லை. நாளைக்குக் கார்த்தலை.”

“இப்பவே போகவேண்டாமா?”

“தூங்கிட்டு நாளைக்குக் கார்த்தலை போகலாம்.”

“என்னை இந்தச் சுடுகாட்டில் இருந்து அழைச்சுண்டு போயிடறியா?”

“சரிப்பா!”

அவர் முகத்தில் சாந்தம் தெரிந்தது.

www.writersujatha.com

“நீ பேசு.”

அவர் முன் சாய்ந்து அவர் தலையைக் கோதிவிட்டு, “அப்பா!” என்றான்,

“அப்பா நானும் நீயும் கிரிக்கெட் ஆடுவோமே ஞாபகம் இருக்கா?”

ஞாபகம் புன்னகையாக மலர்ந்தது.

“ரெண்டு பேரும் ஒரே டீம்ல மாட்ச் ஆடியிருக்கோம். நீ பத்தொம்பது அடிச்சுட்டு ரன் அவுட் ஆயிட்டே. எனக்கு ஏற்ப உன்னால ஓட முடியலே. ஸாரிப்பா, ராங்கால். அது என் தப்பு!”

“சொல்லு.”

“சின்ன வயசில அய்யன் வாய்க்கால்ல நீஞ்சக் கத்துக்குடுத்தியே. தொபுக்கடீர்னு தள்ளிவிட்டுட்டு மூச்சுத் திணற வெப்பியே; அப்புறம் கொய்யாக்கா அடிச்சு சாப்பிடுவோமே. அம்மாவுக்குத் தெரியாம உனக்கு பர்க்லி சிகரெட் வாங்கிண்டு வருவேனே. ரெண்டு பேரும் கவட்டை கட்டி குருவி அடிப்பமே. எவ்வளவு தூரம் ட்ரெக்கிங் போவோம். பாண தீர்த்தத்தில் பாறைல படுத்துண்டு நட்சத்திரத் துக்கு எல்லாம் புதுசா பேர் வெப்பியே! சுள்ளி பத்த வெச்சு சட்டில சமைப்பமே... ”

ஒவ்வொன்றாக ஒவ்வொன்றாகச் சொன்னான். தந்தை–மகன் இருவருக்கும் இருந்த உணர்ச்சிபூர்வமான பிணைப்பு, சிநேகிதம், கையோடு கை அழுத்திய பலப் பரிட்சை, நீண்ட நீண்ட நடைப் பயணங்கள், பறவைக் குரல்கள், மணல் வெளியில் தியாகராஜர், துரத்தல், ஓட்டம், பிடிப்பு, ரகசியப் பரிவர்த்தனை, நிறுத்தி உட்கார வைத்து மரத்தடியில் அருணாசலக் கவிராயரின் ராம நாடகக் கீர்த்தனைகள், அலைஸ் இன் ஒண்டர்லாண்ட்...

www.writersujatha.com

“பரத்!” என்று அவன் கையைப் பிடித்தார். “நானும் நீயும் ஒண்ணு.”

“அப்பா! எல்டொராடோவைப் பத்தி சொல்வியே, ஞாபகம் இருக்கா? அதைத் தேடிண்டுதான் நான் போனேம்பா. கற்பனைத் தங்கம்னு தெரியாம தூரத்திலேயே பளிச்சுக் காட்டிட்டிருந்ததை நோக்கி ஓடினேன்ப்பா!”

“நானும்தான் அதையே தேடினேன்.” என்றார்.

“அப்பா! உன்னை முதல்ல சரசுவோட பார்த்தப்ப எனக்கு அப்படியே சகலமும் ஸ்தம்பிச்சுப்போச்சு. ரொம்ப நாள் கழிச்சுத்தான் எனக்கு ஏன்னு புரிஞ்சுது. ஆனா அதைப்பத்தி நான் ஒருத்தர்கிட்ட ஒரு வார்த்தை பேசலியே. இன்னிவரைக்கும் சொன்னதில்லையே. அந்த சம்பவத்துக்கப்புறம் உனக்கும் எனக்கும் ஒரு பிளவு வந்துடுத்து. அன்னியோன்யம் வெட்டுப்பட்டுடுத்து. நீ என்னைப் பார்த்து, நான் உன்னைப் பார்த்து பயப்பட ஆரம்பிச்சோம். என் மனசில உன்னைப் பத்தி இருந்த



www.writersujatha.com

இமேஜ் கலைஞ்சு போயி நாம ரெண்டு பேரும் அப்பவே பிரிய ஆரம்பிச்சுட்டோம். அதுக்கப்புறம் எத்தனையோ நடந்துபோயி நான் விலகிப் போயி, ஊர் ஊரா அலைஞ்சு உறவு விட்டுப்போயி, கல்யாணம் பண்ணிண்டு, பெண்டாட்டியைப் பிரிஞ்சு... வேண்டாம்பா... அதையெல்லாம் அழிச்சுடலாம்பா... சரசு வரைக்கும் விரசமில்லாம இருக்கு... அதோட போதும். அதுக்கப்புறம் எல்லாத்தையும்... ”

அப்பா தலையை ஆட்டினார். “அதுவும் இருக்கட்டும்” என்றார். “பரத்! கிட்ட வா!”

வந்தான்.

“நாளைக்குக் கார்த்தால என்னை அழைச்சுண்டு போறியா? அந்த இடத்துக்கு... ”

“சரிப்பா.”

“எத்தனை மணிக்கு வண்டி?”

“சீக்கிரமே கிளம்பிடலாம்பா.”

“என்னால் நடக்க முடியாது.”

“உன்னை அப்படியே தூக்கித் தோள்மேல வெச்சுண்டு போயிடறேம்பா, நீ என்னைத் தூக்கிண்டு போவியே, அது மாதிரி.”

“எனக்குத் தேவலை ஆய்டுமா?”

“நிச்சயம்.”

“தேவலையானதும் கண்ணாடி மாத்திக்கொடு. என்ன?”

“சரிப்பா.”

“ஒரு சின்ன டிரான்சிஸ்டர் வாங்கிக் கொடுத்துடு.”

“சரிப்பா.”

“ஹெமிங்வேயோட கிலிமஞ்சாரோ படிச்சுக் காட்டு.”

“சரிப்பா.”

“மார்க்கஸ் அரேலியஸ், திருவாசகம், அப்புறம் பவிஷ்ய புராணம், டாஸ்டாயவ்ஸ்கி, போஸ்லர், ரஸ்ஸல்... ”

“எல்லாம்.”

“இதோ பாரு, அந்தத் தடி, ரெண்டு வேஷ்டி, ரெண்டு பனியன், அதான் என்னுது. செருப்புகூடக் கிடையாது. இப்பவே எடுத்துண்டுடு.”

“நான் வாங்கித் தரேம்பா.”

“நிறைய நடக்கணும்.” அவர் முகத்தில் இப்போது தேஜஸ் தெரிந்தது. உதட்டில் புன்னகையுடன் அவனை மிக அருகில் அழைத்து கண் சிமிட்டலுடன், “பரத்! உங்கிட்ட ஒரு ரகசியம் சொல்லணும். அவா ஒருத்தருக்கும் தெரியாது.”

"என்னப்பா?"

சொன்னார்.

ராத்திரி முழுவதும் அவர் அருகிலேயே உட்கார்ந்து அவரையே பார்த்துக்–கொண்டிருந்தான். மூன்று மணி சுமாருக்கு அப்பா இறந்துபோயிருந்ததை உணர்ந்தான். தூக்கம் போலத்தான் படுத்திருந்தார். உதட்டில் புன்னகை ஸ்திரமாக இருந்தது.

பரத் ஓரத்தில் ஒதுங்கி நிற்க, ஒவ்வொருவராக வந்து ஆர்ப்பாட்டமாக அழுதார்கள். அதன்பின் சுரத்துக் குறைந்து அழுதார்கள். அதன் பின் மௌனமாக...

"வந்தான், முடிச்சுட்டான்! இவனைப் பார்த்த அதிர்ச்சி உயிர் போய்டுத்து. எதுக்காக இப்படி திடீர்னு வரணும்... ?"

"அண்ணா! ஒரு விஷயம். தனியா வாயேன்."

"என்ன?"

"போறதுக்கு முன்னால அப்பா எங்கிட்ட சொன்னார், வீட்டையும் நிலத்தையும் என் பேரில எழுதி வெச்சிருக்கிறதா. காரியம் எல்லாம் முடிஞ்சப்புறம் இந்த அட்ர**ஸு**க்கு எழுது. எல்லாத்தையும் பாத்து சாஸனம் பண்ணிக் கொடுத்துடறேன்."

"பரத், எங்க போற?"

திரும்பிப் பார்க்காமல் நடந்தான்.

*1977*



www.writersujatha.com

# எங்கே என் விஜய்

என் வீட்டு வாசலில் என் விஜய் ஸ்கூட்டர் நிறுத்தியிருந்தது. அதை அதிகப்படியாக உபயோகிக்காததாலும் அவ்வப்போது தொண்டை அடைத்துக்கொண்டு நின்று போனதாலும் மிகுதியாப் பயன்படுத்தாமல் வாசல் வராந்தாவில் நிறுத்தி வைத்துவிட்டு பஸ்ஸில் ஆபீஸ் போய் வந்தேன். மகன் அதன்மேல் ஏறிக்கொண்டு நின்ற இடத்திலேயே ஓட்டி விளையாடி அலுத்துப்போய்விட்டான். ஸ்கூட்டர் நாளடைவில் புழுதி சேர்த்துக்கொண்டு இருக்கிறதா இல்லையா என்று கவலைப்படாத அளவுக்குப் பழசாகி ஒரு ஸ்திரமான கழுதைபோல பழுப்பாகிக் கவனத்திலிருந்து மறைந்து போய்விட்டது. அதனால் அது காணாமற்போனதை நான் இரண்டு நாட்கள் உணரவே இல்லை மனைவிதான் கண்டுபிடித்து ஆபீசுக்கு போன் செய்தாள்.

“ஆபீசுக்கு எப்படிப் போனிங்க இன்னிக்கு, ஸ்கூட்டர்லயா?”

“வழக்கம்போல பஸ்லதான் போனேன்.”

“வாசல்ல ஸ்கூட்டர் இல்லையே?”

“சரியாப்பாரு... நேத்திக்குப் பாத்தனோ அதை?”

“என்னைக் கேட்டா?”

“களவு போயிருச்சா? நீயே போய் போலிஸ்ல ஒரு புகார் குடுத்துட்டு வா!”

“குடுத்தேன். வீட்டுக்காரரை அனுப்பச்சொல்றாங்க.”

“சரி, வேலை இருக்கு. சாயங்காலம் போறேன்.”

“ஏங்க, ஸ்கூட்டர் போயிருச்சுன்னு வருத்தமே இல்லையா?”

“என்ன செய்யணும், போன்ல அழணுமா?”

“ஏன்தான் இப்படித் தொலைக்கிறதுக்குன்னே இருக்கீங்களோ?”

“சாயங்காலம் பார்க்கலாம்!”

செந்தில் தன் அம்மாவிடமிருந்து டெலிபோனைப் பிடுங்கி, “அப்பா சூத்தர் காக்கா ஊஷ்!” என்றான்.

டெலிபோனில் நான் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருந்த வாசுதேவாச்சார் தன்னுடைய ‘கஸின்’ (cousin) ஒருத்தருக்கு எஸ்.பி. நார்த்தைத் (S.P.North) தெரியும். அவரிடம் ஒரு வார்த்தை போடட்டுமா என்று விசாரித்தார். நாளைக்குச் சொல்வதாகச் சொன்னேன். “எப்பவும் அஜாக்கிரதை சார் நீங்க! அன்னிக்குச் சாவியைத் தொலைச்–சிட்டு எத்தனை நேரம் தேடினீங்க...”

சாயங்காலம் பஸ்ஸிலிருந்து இறங்கி நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றேன். பழுப்பான ரிஜிஸ்தரில் தீவிரமாக எழுதிக்கொண்டிருந்தவர் என்னை நிமிர்ந்து ஒரே ஒருமுறை பார்த்துவிட்டு மறுபடி பழுப்பான ரிஜிஸ்தரில் தீவிரமாக எழுதினார். பூச்செடிகளுக்கு ஒருவன் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்க, வராந்தாவில் பெஞ்சில் வந்து உட்கார்ந்து எதற்கோ யாருக்கோ காத்திருந்தேன். இன்ஸ்பெக்டர்போல ஒருவர்



www.writersujatha.com

வந்து உடனே ஜீப்பில் சென்றார். எட்கான்ஸ்டபிள், ரைட்டர் என்று எல்லாம் அவர்கள் கன்னடத்தில் பேசிக்கொண்டிருந்தது குழப்பமாக இருந்தது. இறுதியில் அந்த பழுப்பு ரிஜிஸ்தர்காரரே “பன்ரி இல்லி” என்று அழைத்தார். நான் அருகே செல்ல என்னை சினேகிதமாகப் பார்த்து, “ஏனு கம்ப்ளெயிண்ட்டு?” என்றார்.

“என் ஸ்கூட்டர் காணாமப் போயிருச்சுங்க.”

“ரீ! ஸ்வாமி! கன்னடல்லி மாத்தாடில கன்னடா கொத்தில்லா?”

“ஸொல்ப்ப... அது ஏனு ஆயித்து அந்தரே நன் ஸ்கூட்டரு ‘தெப்ட் ஆயித்து.”

அந்தாள் சிவந்து, “ஏ! ஒள்ளே கிரகசாரா! தாபத்ரயா! ஈதமிள்னவரு... ஏங்கோ! ஸ்கூட்டர் போயிருச்சா? சரி யாவ மாடலு?”

“விஜய்.”

“கலர்?”

“ப்ளு.”

“நிம் விளாஸா, அட்ரஸ்?”

“8–வது மெயின் 15வது கிராஸ், ஜேவி நகர்.”

அவர் எதிரே இருந்தவரைப் பார்த்து, “ஜேவிநகர் நம்தேனா **ஜூ**ரிஸ்டிக்ஷனு?”

“எஷ்ட்னே கிரா **ஜூஸு?”**

“ஹத்னைது!”

“இருபோது.”

அவர்கள் சற்று நேரம் விசாரித்துவிட்டு என்னிடம் ஒரு கேஸ் நம்பர் கொடுத்து இரண்டு, மூன்று தினங்கள் விட்டு டெலிபோனில் விசாரிக்கச் சொன்னார்கள்.

வீட்டுக்கு வந்ததும் மனைவி மொளமொளவென்று பிடித்துக் கொண்டாள். அதை அப்பொழுதே விற்றுவிடச் சொன்னாள். நான் விற்கவில்லை. “அது ஓடிக்கொண்டிருக்கையில் விற்றாலாவது ரூ.5000 கிடைத்திருக்கும். இப்போது எல்லாம் நஷ்டம்...”

“என்ன நஷ்டம்? போலீஸில் கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டால் எப்படி நஷ்டம்?”

அவள் சிரித்து, “போலீஸ்லயா? கண்டுபிடிக்கவா போறாங்க! ஹய்யோ! எதைத்தான் நம்புறதுன்னு ஒரு விவஸ்தை கிடையாதா உங்களுக்கு? எந்தக் காலத்து ஆசாமி நீங்க...”

“கிடைச்சுரும், கிடைக்காம எங்க போறது, கிடைச்சுரும்னு நம்பிக்கை வெச்சுக்க. சாமிக்குக் காசு முடிஞ்சு வையி. இல்லை திருப்பதிக்கு ஒருமுறை வரேன்னு வேண்டிப்பியே வேண்டிக்க...”

“அதெல்லாம் ஆச்சு!”

“பின்னே?”

www.writersujatha.com

மூன்றாம் நாள் பக்கத்து வீட்டுக்குப் போய் போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்தேன்.

“ஸ்கூட்டர் கிடைத்துவிட்டது! ஸ்டேஷனுக்கு வந்து வாங்கிக்கொண்டு செல்லுங்கள்” என்றார் இன்ஸ்பெக்டர், அதுவும் ஆங்கிலத்தில். என் மனத்தில் உற்சாகம் பொங்கியது. உடனே வீட்டுக்குச் சென்று மனைவியை பாத்ரூமில் மடக்கி, “ஸ்கூட்டர் கிடைச்சுருச்சு!” என்றேன்.

என் மனைவி தான் கடவுளுக்கு வேண்டிக்கொண்டதில்தான் கிடைத்தது என்று சொன்னாள். “இதுவரைக்கும் நீங்க தொலைச்சது ஏதாவது கிடைச்சிருக்கா?”

“ஒருமுறை தஞ்சாவூர் பஸ் ஸ்டாண்டில் தொலைச்ச பொட்டி கிடைக்கலை?”

“பொட்டி மாத்திரம் கிடைச்சுது. பொட்டிக்குள்ள இருந்த சர்ட்டு, பேண்ட்டு, கண்ணன் துணிகள், என் நைலக்ஸ் புடவை ரெண்டு?”

“எல்லாம் பழசுதானே?”

“பழசோ புதுசோ? பொருள் போனது வரலை.”

“ஸ்கூட்டர் மட்டும் கிடைச்சுருக்கு!”

“போய்ப் பாருங்க முதல்ல. இன்னும் என்ன தலைவலியோ?”

காவல் நிலையத்தில் எட்கான்ஸ்டபிள் தான் இருந்தார். என்னைப் பார்த்ததும் புன்னகை செய்தது இதமாக இருந்தது. “உங்க ஸ்கூட்டர் சிக்கிருச்சு!”

“எங்க சார் இருந்தது?”

“இப்படியே டவுன்ல போனா தியேட்டர் தாண்டி மைசூர்ரோடு மீட் ஆவுறதே அங்கே ஒரு கிராஸ்ல ரோடோரமாகக் கடிச்சுது!”

“அப்படிங்களா?”

“போய்ப் பாருங்க.”

ஸ்டேஷனின் பின்புறத்தில் நிறுத்தியிருந்தது என் விஜய்தான். ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் எல்லாம் சரியாக இருந்தது.

ஸ்டெப்னி எப்போதுமே கிடையாது அதற்கு. முன் டயர் காற்றுக் குறைவாக இருந்தது. பெட்ரோல் டாங்க்கைத் திறந்து பார்த்ததில் காலியாக இருந்தது.

“அய்யோ! நிம்ம ஸ்கூட்டரை அங்கிருந்து இங்கே கொண்டாரத்துக்குள்ள பேஜராயிச்சு! மெக்கானிக்கை இட்டார்ந்து, கார்பட்டரைக் கள்ட்டி ஊதி சுத்தம் பண்ணி சர்விஸ் பண்ண வெச்சு, லிட்டர் பெட்ரோல் போட்டு ஓட்டியாந்தேன்!”

“உங்க கடமை உணர்ச்சியை ரொம்ப மெச்சறேன்!... இப்ப என்ன? ஸ்கூட்டரை எடுத்துட்டுப் போயிரலாமில்லை?”

“எதுக்கும் ஒரு வார்த்தை இன்ஸ்பெக்டராண்டை சொல்லிட்டுப் போயிருங்க!”
இன்ஸ்பெக்டர் முன் அறையில் வீற்றிருந்தார். என்னைப் பார்த்ததும் உட்காரச் சொல்லி டீ கொண்டுவரச் சொன்னார். சற்று நேரம் எழுதினார். அதன்பின் நிமிர்ந்தார்.

“என் ஸ்கூட்டரை இரண்டு நாளிலே கண்டுபிடித்துக் கொடுத்ததற்கு வந்தனம்!”

“நாங்கள் எங்கள் கடமையைச் செய்கிறோம். ஸ்கூட்டரைப் பார்த்தீங்களா? எல்லாம் சரியாக இருக்கிறதா?”

“ஆம்.”

“கிருஷ்ணப்பா சொன்னாரா?”

“கிருஷ்ணப்பா?”

“எட் கான்ஸ்டபிள். உங்கள் ஸ்கூட்டரை ஸ்டேஷனுக்குக் கொண்டு வருவதற்கே சிரமமாகப் போய் ஒரு மெக்கானிக்கைக் கூட்டிச் சென்று...”

“ஆம் சொன்னார். ரொம்பப் பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட்டிருக்கிறார்.”

“தன் கைக் காசை நூறோ நூத்தம்பதோ செலவழித்திருக்கிறார்...”

“அந்தச் செலவை நான் கொடுத்து விடுகிறேன்.”

“இதில் எதுவும் கட்டாயமில்லை.”

“சேச்சே, அப்படி எதுவும் இல்லை. என் ஸ்கூட்டருக்கு ஆன செலவை ஈடு செய்ய வேண்டியது என் கடமை” என்று என் பையிலிருந்து ரூபாய் இருநூறு கொடுத்தேன். அவர் “கிருஷ்ணப்பா!” என்று கான்ஸ்டபிளை விளிக்க கிருஷ்ணப்பா வந்ததும் இருவரும் கன்னடத்தில் பேசிக்கொண்டார்கள்.

“ஏனய்யா? மெக்கானிக் செலவு எல்லாம் எத்தனை ஆச்சு என்று அவருக்குச் சொல்லு.”

“புத்தி! 135 ரூபாய் கார்பரட்டர் கிளீன் பண்ணவும் இன்ஜின் ஸ்பார்க் பிளக் வேலைக்கும் ஆயிற்று. பதினெட்டு ரூபாய் ரெண்டு லிட்டர் பெட்ரோல் ஆயில் இன்ஜின் கழுவ உபயோகப்படுத்தினான். மொத்தம் 153 ஆக்சு, இதோ சீட்டு...” என்னிடமிருந்து இருநூறு ரூபாய் வாங்கிக்கொண்டு சில்லரையாகத் தன்னிடத்தில் 15 ரூபாய்தான் இருப்பதாகச் சொன்னார்.

“பரவாயில்லை. வெச்சுக்கங்க. காப்பி சாப்பிடுங்க!”

“சேச்சே, ஸாஹிபரு கோவிப்பார்.” என்று இன்ஸ்பெக்டரைப் பயத்துடன் பார்க்க அவர் “டு நாட் என்கரேஜ் தீஸ் திங்க்ஸ்” என்றார்.

“கிருஷ்ணப்பா, இவர் வீட்டுக்குச் சென்று பாக்கிப் பைசாவைக் கொடுத்துவிடு என்ன?”

“நீங்கள் உங்கள் ஸ்கூட்டரை எடுத்துப் போகலாம்.”

“மிக்க நன்றி,” என்றேன். “உங்கள் மாதிரி போலீஸ் ஆபீசரை...”

“எங்கள் கடமையைச் செய்கிறோம்” என்று புன்னகையுடன் அனுப்பினார்.

ஸ்கூட்டரைத் தள்ளிக்கொண்டு வீட்டுக்குச் சென்று பலகையில் ராம்ப் அமைத்து நடுக் கூடத்துக்குள் நிறுத்தினேன். என் மனைவி ஆச்சரியப்பட்டாள். வாசுதேவாச்சார் ஸ்கூட்டர் என்ன ஆயிற்று என்று விசாரிக்க வந்திருந்தார். “கிடைத்துவிட்டதா

என்ன?" அவரும் ஆச்சரியப்பட்டு முழுசாக விசாரித்தார். நான் போலீஸ் நிலையத்தில் நடந்ததைச் சொன்னேன்.

வாசுதேவாச்சார் என்னைச் சில கேள்விகள் கேட்டார். அதன்பின் என்னைப் பார்த்து நிதானமாகச் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"உன் ஸ்கூட்டரை அவர்கள் மெக்கானிக்கைக் கூப்பிட்டு ரிப்பேர் செய்தார்களாமா?"
"ஆம்."

www.writersujatha.com

"ரிப்பேர் செய்து பெட்ரோல் போட்டு ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தார்களாமா?"

"ஆம்."

"இதை நீ நம்பினாயா?"

"ஏன்?"

வாசுதேவாச்சார் சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவருக்குத்தான் என்ன கற்பனை!

எல்லாமே போலீஸ் சாகசந்தானாம். போலீஸ் ராத்திரி பேட்ரோல் ட்யூட்டியிலே வரும்போது எந்த எந்த வீட்டில் வாசலில் ஸ்கூட்டர் நிறுத்தியிருக்கிறார்கள் என்ற பேட்டை ரவுடிகளுக்குத் தகவல் கொடுக்க, அவர்கள் ஸ்கூட்டர்களைத் திருடி முதலில் ஓர் இடத்தில் வைத்திருந்து போலீசிடமிருந்து தகவல் வந்ததும் போலீஸ் நிலையத்துக்கு மாற்றிக்கொண்டு வந்துவிடுவார்களாம்! அப்புறம் ஓனரைக் கூப்பிட்டு, இதபாருய்யா, உம் ஸ்கூட்டர் கிடைத்துவிட்டது. டாமெஜ் கண்டிஷனில் இருந்தது! ரிப்பேருக்கு நூறு ஆச்சு, இருநூறு ஆச்சு என்று ரிப்பேர் காசு மட்டும் கொடுத்துவிட்டு எடுத்துச் செல் என்பார்களாம். ஸ்கூட்டர் கிடைத்த சந்தோஷத்தில் அவர்களும் கொடுத்துவிட...

"இதெல்லாம் எப்படிச் சொல்றீங்க?"

"நான் சொல்றபடிதானே நடந்தது?"

"ஒருவிதத்தில்."

www.writersujatha.com

"எங்கயாவது ரிப்பேர் பண்ணியிருந்தானா பாரு! எங்கயாவது ரிஜிஸ்தர்ல கையெழுத்துப் போட்டியா? ஏதாவது கேஸ் எழுதிக்கிட்டானா?"

"நம்பர் கொடுத்தானே?"

"ஏதாவது காகிதத்தில எழுதினானா?"

"இல்லைதான்... ஆனால் அந்த இன்ஸ்பெக்டர்?"

"பெரும்பாலும் இன்ஸ்பெக்டருக்குத்தான் போறது காசு! என்னப்பா? ஒரு லட்ச ரூபா லஞ்சம் கொடுத்து உத்தியோகத்துக்கு வந்திருக்கான். கொடுத்த காசைத் திருப்பி எடுக்கவேண்டாம்? ஒரு நாளைக்கு இப்படி 3, 4 ஸ்கூட்டர்னா முன்னூறு ஆவுது பாரு?"
"சேச்சே, அப்படியெல்லாம் இருக்காது!" என் மனைவி என்னையே பார்த்துக்–கொண்டிருப்பதை உணர்ந்தேன்.



www.writersujatha.com

“அதான் என்னடான்னு பார்த்தேன்? இவராவது சாமர்த்தியமா போலீஸ்ல சொல்லித் தொலைஞ்ச பொருளை மீட்கறதாவது... சார்! இவருக்குத் தொலைக்கிறதையும் ஏமாற்றதிலயும் டாக்டர் பட்டம் இருந்தா கேள்வி கேக்காமக் கொடுத்துரலாம்! இவங்க அம்மாவே சொல்லியிருக்காங்க. பள்ளிக்கூடத்தில இருந்தே இப்படித்தானாம். புழுக்கை பென்சிலுக்குப் புது பென்சிலை எக்ஸ்சேஞ்சு கொடுத்துருவாராம். இவங்க அப்பாகிட்ட இதுக்காக அடியும் திட்டும் வாங்கினது கணக்கில்லையாம். எனக்குத் தெரிஞ்சே மாசம் ஒரு தடவையாவது யார்கிட்டயாவது ஏமாறுவாரு. பிரண்ட் பிளாக்கில ஒரு ரிடயர்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் வெஸ்பா ஸ்கூட்டர் அலாட்மெண்ட் தரேன்னு ஆயிரம் ரூபா ஏமாத்தினதுமில்லாம எங்க வீட்டுக்கு அடிக்கடி வந்து இன்னம் டிபன் சாப்பிட்டுக்கிட்டு இருக்காரு! எட்டு வயசுப் பையன் ஒருத்தன் இவர்கிட்ட காட்டுச் செடியை ரோஜாச் செடின்னு காட்டி அறுபது ரூபா ஏமாத்தியிருக்கான். அடுத்த தெருவில பொண்டாட்டி இறந்து போய் பிணம் எடுக்க காசில்லைன்னு ஒரு ஆளுக்கு நூறு ரூபாய் அழுதிருக்கார். அதே ஆளு அரை மணி கழிச்சு பத்மா கபேயில் மசால்தோசை சாப்பிட்டிட்டு இருக்கிறதைப் பார்த்துட்டு ‘என்னப்பா, எல்லாம் நல்லபடியா நடந்ததா’ன்னு விசாரிச்சிருக்காரு... அப்புறம்...”

என் மனைவி என் மொத்த விஷயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக விஸ்தாரமாகச் சொன்னபோது எனக்கு ஏன் கோபம் வரவில்லை?

அது மட்டும் இல்லை; அதையெல்லாம் கேட்கக் கேட்க சந்தோஷமாக இருந்தது!

*1983*

www.writersujatha.com

# எப்படியும் வாழலாம்

“உங்களுக்கு வயசு எத்தனை?”

“செரியாச் சொல்ல முடியாதுய்யா!”

“உங்க அப்பா அம்மா?”

“அவங்கதான் இல்லியே,... பூட்டாங்களே... இருந்தாங்கன்னா விசாரிச்சு எத்தனை வயசுன்னு சொல்லலாம்.”

“உங்க சொந்த ஊரு?”

“கோலாருக்குப் பக்கத்தில கொடுமூர்னு ஒரு கிராமம்.”

“தொழில்?”

“‘...’ன்னு சொன்னா பத்திரிகைல போடுவாங்களா போடமாட்டாங்களா?

“போட மாட்டாங்க!”

“அப்ப இரவு ராணின்னு வெச்சுக்க. என்னைப் பொறுத்தவரையிலும் பகல்லயும் நான் ராணிதான்.”

“அப்படியா?”

“என் பேரே ராணிதானே!”

“எழுதப் படிக்கத் தெரியுமா உங்களுக்கு?”

“அதெல்லாம் நல்லா வராதும்மா... எனக்கு வந்த ஒரே கலை அதைப் பத்தித்தான்... கொஞ்சநேரம் களிச்சு சொல்லப் போறேனே, இருட்டினதும்! என்ன சிரிக்கிறே?”

“உங்களுக்கு வேற எதுவுமே தெரியாதா? யோசிச்சுப் பாருங்க.”

“இதபாரு, உங்களுக்கு கிங்களுக்கு எல்லாம் வேணாம். ஒனக்குன்னு சொல்லேன். இன்னிக்கிருந்தா உனக்கென்ன வயசிருக்கும்? நீ நான்னு கூப்பிடு, பரவாயில்லை... என்னை நீங்க போங்கன்னு யாரும் கூப்பிடறதே கிடயாது. கூப்ட்டா ஒரு மாரி... க்குள்ள துருதுருங்குது, வேணாம்.”

“சரி உனக்கு வேற ஏதும் தெரியாதா?”

“சின்னப் புள்ளலை போடை ஸ்கூல்ல ஆண்டு விளாவிலே பாரதி பாட்டுக்கு டான்ஸ் பண்ணிருக்கேன். ஊதுவோம் ஒதுவோம்னு வருமே அதான்! காலை மடக்கிட்டு, கை தூக்கிக்கிட்டு, சங்கு மாரி கை வெச்சிக்கிட்டு பக்கவாட்டில உக்காந்துகிட்டு ஆடினப்போ எல்லோரும் உய்யுன்னு விசிலடிச்சாங்க. அப்ப எதுக்குன்னு புரியலை. இப்ப புரியுது.”

“என்ன புரிஞ்சுது?”

“எனக்கு அப்பவே இடுப்புப் பெரிசு!”

“அப்புறம் நடனம் ஆடலியா?”

“ஆ, அத அப்பவே நிறுத்திட்டு... எல்லாம் மறந்து போச்சு, அந்தப் பாட்டும் பளசாப்போச்சு, எப்பனாச்சியும் சிலோன்ல வெப்பாங்க, அளுகையா வரும்.”

“ஏன்?”

“அதுவரைக்கும் நான் பூ கணக்கா இருந்தேன், அப்பறம்தான் எல்லாமே தப்பா நடந்து போச்சு.”

“அப்ப நீங்க... நீ இந்த தொழிலுக்கு வந்ததுக்கு வறுமைதான் காரணம்னு சொல்லலாமா?”

“இல்லை.”

“உங்கப்பாம்மா இறந்து போயி ஆதரவு இல்லாததாலா?”

“அதுவும் இல்லே. அவங்க இறந்து போனதே போன வருசந்தானே!”

“பின்ன, என்ன காரணம்?”

“காரணம்னு ஒண்ணு இருக்கணுமா என்ன?”

“அப்படித்தான்!”

“அப்படிப் பாக்கப்போனா என் திமிர்தான் காரணம்னு சொல்லலாம்.”

“திமிரா?”

“ஆமா, திமிர்தான். அந்தாளைப்பாத்து சிரிச்சிருக்க வேணாமில்ல?”

“எந்த ஆள்?”

“ஏதோ ஆளு! இப்ப அவன் பேர்கூட மறந்து போச்சு. அப்ப கிணத்தாண்டை வந்து சாது கணக்காப் பார்ப்பான். கோவிலுக்கு விசுவாசமா வருவான். ஏதோ காதல் மாரின்னு வெச்சுக்கயேன்...”

“அதுக்கு உங்கப்பாம்மா எதிர்ப்பு தெரிவிச்சாங்களா?

“ஒரு... ம் இல்லை.”

“கல்யாணம் செய்துக்கறதா சத்தியம் பண்ணினானா?”

“அதும் இல்லியே? கல்யாணம் பண்ணிக்கறதா கூட்டிட்டுப் போறதாத்தான் இருந்தான். நாந்தான் அதுக்குள்ள...”

“அதுக்குள்ளே...?”

“அதுக்குள்ள வேற ஆளைப் பாத்துக்கிட்டேன். ரைஸ்மில் வெச்சிருந்தான். களுத்தில புலிநகம் போட்டு சங்கிலி தொங்க விட்டிருந்தான். டூரிங் கொட்டாய் வெச்சிருந்தான். அங்க அளைச்சிக்கிட்டுப் போயி பச்சையா ரூம்பு இருக்கும் பாரு, அங்க தீ பக்கெட்டுக்குப் பக்கத்தில உக்காத்தி வெச்சுருவான். சோடா வாங்கிக் கொடுப்பான். வயக் காட்டுக்குக் கூட்டிட்டுப்போய் நெலா வெளிச்சத்தில ரீல் போட்டுக் காட்டினதெல்லாத்துக்கும் மாத்தா நோட்டு கொடுப்பான்.”

“அந்த மனிதனுடன் ஸ்திரமா எதும் சினேகிதம் வெச்சிக்க விருப்பமில்லியா உனக்கு?”
“இல்லியே... அவன் பெண்டாட்டி வந்து சத்தமா அளுது, ஜாய்ட்டில இருந்து தாலியை எடுத்துக்காட்டி என்னைக் காப்பாத்துரி – என் புருசனை எங்கிட்டருந்து பிரிச்சுராதன்னு சக்களத்தி மாதிரிப் பேசல்ல, இன்னடாதுன்னு ஆயிருச்சு. நம்மால ஒரு குடும்பம் நாசமாவுறது வேண்டான்னு... கோலார்ல டிராமா போட்டங்க. அதுல பார்ட்டு எடுத்துக்கறயான்னு நடராசன்னு ஒரு ஆளு கேட்டாரு. கதை வசொனம் எல்லாம் பொம்பாடா எளுதுவாரு. என்னை வெச்சு பாட்டு எளுதி ஆர்மோனியத்தில் நொய் நொய்னு பாடிக் காட்டினாரு. ஜார்செட்டில சேலை எடுத்துக் கொடுத்து ரொம்ப மரியாதையாத்தான் வெச்சுக்கிட்டிருந்தாரு. ஊரூராப்போயி நாடகம் போட்டோம். எனக்கு வில்லி பார்ட்டுதான் கொடுப்பாங்க. வசனம் அவ்வளவு பேச வராதுன்னுட்டு. குலுக்கி ஒரு ஆட்டம் காட்டுவேன். விசில் அடிப்பாங்க.”

“நடராசு என்பவரோடு நீ ஒரு ஸ்திர வாழ்க்கை அமைச்சுக்கலையா?”

“அதுக்குள்ளதான் அந்தாளு போய்ட்டாரே?”

“எங்க...?”

“செத்துப் போய்ட்டார், ஆஸ்பத்திரில ரெண்டு நாள் மயக்கமா இருந்துட்டு.”

“வருத்தப்பட்டியா?”

“வருத்தப்பட்டு முடிக்கிறதுக்குள்ளே வீரராகவன்னு ஒரு எண்ணை மண்டிக்காரரு வந்துட்டாரு!”

“எப்ப பங்களூர் வந்தே?”

“பாத்தியா, உனக்கே கசப்பா இருக்கு, இல்லியா?”

“அப்படி இல்லை. நீ இந்த வாழ்க்கைக்கு வந்த காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாதுபோல இருக்கு...”

“அதான் சொன்னேனே, திமிர்தான். பேசாம மாமனையோ மச்சானையோ கல்யாணம் கட்டிக்கிட்டு இந்த வருசத்துக்கு எட்டு பெத்துப் போட்டிருக்கலாம். அப்படிச் செய்யலை. ஏதோ தப்புய்யா என்கிட்ட! புத்தி ஒரு நிலை இருக்காது. ஒரு ஓட்டல்ல போனா நாலு பேர் பாக்குறாங்கன்னு பேமலி ரூமுக்குள்ற நுளைய மாட்டேன். பாக்கட்டுமேன்னு முன்னாலதான், தனியாத்தான் காப்பி சாப்பிடுவேன். ஆம்பிளங்–கள்ளாம் பாக்கறப்போ எனக்கு சிரிப்பாத்தான் வரும். எங்கிட்ட அசட்டுத்தனமா என்னமோ குடிச்ச மாடு மாதிரி வழியாதவங்களே இல்லை. இப்ப நீயே வந்திருக்கில்ல... என்னா பேப்பர்? குங்குமம் பேசுகிறதா?”

“இல்லை, இதயம்.”

“இப்ப உன்னை, பேனாவைத் தூக்கி எறிஞ்சுப்புட்டு அப்புறம் பாத்துக்கலாம்னு சட்டையைக் கள்ட்ட வெக்கட்டுமா?”

“வேண்டாம். என் கேள்விக்கெல்லாம் பதில் சொன்னாப் போதும்!”

“கல்யாணம் ஆயிருச்சாய்யா உனக்கு!”

“பேட்டி உன்னைப் பத்தினது!”

“கல்யாணம் ஆனவங்கதான் ரொம்ப பேர் வராங்க. அது ஏன்யா? பொண்டாட்டிக்கிட்ட இருக்கறதுதானே எங்கிட்டயும் இருக்குது! அது இன்னா புரியலியே...”

“வர்றவங்கூட பேசுவியா?”

“நான் ஏன் பேசணும்? அவங்களே பேசுவாங்க. பெரும்பாலும் குடிச்சிருப்பாங்க. தொர தொரன்னு அவங்க வாழ்க்கையே வாந்தி எடுத்துருவாங்க.”

“உன்னைப் பத்தி யாரும் கேட்பாங்களா!”

“கேட்பாங்க. இப்ப நீ கேட்டபாரு அந்த மாதிரி – ஏன் இந்த தொளிலுக்கு வந்தேன்னு சிலபேர் கேட்பாங்க. பெரும்பாலும் சின்னப்பசங்க. என் தம்பி கணக்கா வர்றாங்களே, தாடி வெச்சிக் கிட்டு சூடண்ஸுங்க, அவங்கதான் கேட்பாங்க. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கதி சொல்வேன். தங்கச்சியைப் படிக்க வெக்கறேம்பேன். எங்கப்பாவுக்கு ஒரு கால் விளங்காது. அல்லாங்காட்டி அம்மாளுக்குக் கண்ணு ரெண்டும் குருடு...”

“அப்படின்னா நீ எங்கிட்ட சொல்லறதுகூட கதைதானா?”

“சேச்சே... இது பேப்பர்லே போடறதாச்சே! பேப்பர்ல பொய் சொல்வாங்களா? ஏன்யா, போட்டோ உண்டுல்ல?”

“போட்டா போச்சு!”

“போட்டோவைப் பார்த்து ஒரு பணக்காரன், தியாகி என்னைய முளுசா கல்யாணம் பண்ணிக்க வந்துரலாமில்ல? விலாசம் என்ன போடுவே?”

“ ‘விலாசம் வேண்டுவோர் எழுதவும்’னு போடலாம்.”

“அப்படிப் போடாதே. நிறையப் பேர் எளுதுவாங்க, வேற விசியமுன்னு... ஆமா நீ இன்னா பேர்ல எளுதறன்னு சொன்ன?”

“சுஜாதா!”

“அட, நான் படிச்சிருக்கன்யா, பொம்பாடா இருக்கும். எல்லாத்திலியும் எளுதுவே போல இருக்கே. அது இன்னாது நடுப்பகல் ரத்தமா? பொம்பாடு கய்யா அது? மத்தியானம் முளுக்க வேல சோலி ஏதும் கடியாதா? லாட்ஜிலேயே அறுத்துக்கிட்டு சும்மனாச்சியும் உக்காந்துகினு இருக்கறபோது குமுதம், குங்குமம், ராணி, இதயம், சாவி, விகடன், கதிரு எல்லாம் வுடாம தொடர் கதையும் படிப்பேன். எல்லாத் தொடர்கதியும் எனக்கு புடிக்கும். அதில வர்றவங்க கஸ்டப்பட்டா எனக்கு பேஜாரா இருக்கும். சிரிச்சு சந்தோஷமா இருந்தா எனக்குப் பொம்பாடா இருக்கும். நறிய பத்திரிகிங்க இருக்குறதாவல, கொஞ்சம் பாபு யாரு, விமலா யாரு, ரங்கய்யா யாருன்னு கம்ப்யூஸ் ஆயிரும், அதனால பரவால்ல, அங்கங்க அஜிஸ் பண்ணிக்கிடுவேன்.

தொடர்கதில வர்றவங்க அத்தினி பேரும் எனக்கு சினேகிதங்க... மத்தியான சிநேகிதங்க... வாரா வாரம் திரும்ப வர்ற சினேகிதங்க. அதுபோல ராத்திரியும் சினேகிதங்க உண்டு. அவங்களும் சிலபேர் வாராவாரம் வருவாங்க... எனக்கு கதி சொல்லுவாங்க. அந்த கதிங்கள்ளாம் வேறமாதிரி இருக்கும்."

"உனக்கு இந்தத் தொழில் இஷ்டமா?"

"வேற தொளில் ஒண்ணும் தெரியாதே எனக்கு."

"கத்துக்கலாமே..."

"எதுக்கு?"

"அப்படிக் கேட்டா... இது வந்து..."

"ஒரு நாளிக்கு எவ்ள வர்றது தெரியுமா உனக்கு! லாட்ஜிக்காரரு சும்மா சொல்லக்கூடாது. நல்லவரு. காசில குறைக்க மாட்டாரு. செவ்வாக்கிளமை எண்ணை சீக்கா தருவாரு, அப்பப்ப அமிதாப் பச்சம் படம் பாத்துட்டு வரணும்முன்னா பேட்டா தருவாரு. இதபாரும்மா, நாமில்லாம் ஒரு குடும்பம் போல – எல்லாரும் எனக்கு சமம்தாம். பாரு... இப்ப சாவித்திரியை எடுத்துக்க, குளந்தை உண்டாயிருச்சு. செரியாப் பார்க்காம லேட்டாயிருச்சு. டாக்டரு ஒண்ணும் செய்யமுடியாதுன்னுட்டாரு, என்ன பண்ணாரு முதலாளி? தெரத்தி விட்டாரா? சாவித்திரிம்மா, நீ பெத்து பொளைச்சு ஒடம்பை தேத்திக்கிட்டு வர்ற வரைக்கும் வேலை செய்ய வேண்டாம். நா ஆஸ்பத்திரி செலவைப் பார்த்துக்கறேன்னு சொல்லிட்டாரு... தாராளமனசு."

"குழந்தை பிறந்ததா?"

"ம், பொண்ணு! லாட்ஜிலதான் வளருது. சாவித்திரி வேலைக்குத் திரும்பிருச்சில்ல..."

"லாட்ஜிலயா? இங்கயா?"

"ஆமா... எங்க எல்லாருக்கும் குளந்தய்யா அது!"

"அப்பா யாருன்னு..."

"திருப்பதி வெங்கடாசலபதிதான் அப்பா! நல்லா கொளுக்கு முளுக்குன்னு இருக்குது. பாக்கறியா?"

"இப்ப வேண்டாம். பட்... ராத்திரி வேளைல குழந்தையை..."

"ஒண்ணும் பிரமாதமில்ல, சாவித்திரி வர்ற வரைக்கும் அஞ்சு பத்து நிமிசம் நாங்க யாராவது பாத்துப்போம். பெரும்பாலும் ஏளு மணிக்கு வசதியா தூங்கிப்போயிரும்! அப்பப்ப எளுந்திருச்சி அளுதா, கொஞ்சம் உச்சு உச்சுன்னா அடங்கிப் போயிரும். இல்லை, ஒரு ஸ்பூன் பிராந்தி கொடுத்துருவா. பம்பரம் கணக்கா உறங்கிடும். அவசரத்துக்குக் கட்டிலுக்கு அடிலேயே படுக்கப் போட்டுருவா. சத்தமே வராது..."

"ஏன்யா பேசாம இருக்கே? இதில ஒரு தமாசு பாரு போன மாசம்தான் நடந்தது...

"ஒரு ஆளு டேசன்ல இருந்து நேரா பொட்டி படுக்கையோட இங்க வந்திருக்கான். என்னமோ அவனுக்குத் தலைபோற அவசரம்! ரூம்புல தங்கிட்டு பெட்டியை வெச்சுட்டு தலை வாரிக்கிட்டு வரமாட்டானோ? நேர இங்கதான் தகரப் பொட்டியும் மலாய்

செருப்புமா வந்துட்டான். சாவித்திரிதான் போயிருந்தா. குளந்தையைக் கட்டிலுக்கடில படுக்க வெச்சுட்டிருந்தா...

“பாதில என்ன ஆயிருக்கு. குளந்தை முளிச்சுக்கிட்டுப் பெரிசா அழ ஆரம்பிச்சுருச்சு. அந்தாளு ஒரேயடியா பயந்துட்டு படக்குனு எந்திரிச்சு ஒரே ஓட்டமா ஓடிட்டான் ‘இன்னாடாது, இப்பத்தானே ஆரம்பிச்சம், அதுக்குள்ள குளந்தையா’ன்னு ஆயிருச்சோ என்னவோ! ஒத்தைக்கால் செருப்பை போட்டுக்காமயெ ஓடிப் போய்ட்டான். எப்படி டமாசு! இல்லை, ஒரு வேளை அவன் குளந்தை கியாபகம் வந்துருச்சோ என்னவோ?”

“இந்த இடத்துக்கு ஒரு நாளைக்கு எத்தனை பேர் வருவாங்க!”

“அதெல்லாம் ரயில் டேசன் மாதிரி, கணக்கு ஏதும் இல்லிய்யா.”

“உங்களுக்குள்ள போட்டி உண்டா?”

“சேச்சே... இருக்கறவங்களே ஆள் பத்தலை. கூட ஆளா போடுங்கன்னு முதலாளி–கிட்ட அரிச்சுக்கிட்டிருக்கோம்.”

“முதல்ல வர்றவங்க எப்படி இங்கே வர முடியும்?”

“நம்ம ஆளுங்க, அங்கங்க சினிமாக் கொட்டாயாண்டை, ஓட்டலாண்டை அப்புறம் காபரே முடிச்சுட்டு வெளியே வராங்களே எல்லாத்தையும் ரோந்து சுத்திக்கிட்டு இருப்பாங்க. ஒரு ஆளைப் பார்த்தா, பாத்தாலெ கஸ்ட்மரா இல்லியான்னு கண்டுபிடிச்சுக் கூட்டியாந்துருவாங்க. உள்ற அனுப்பறதுக்கு முந்தியே கமிசன் வாங்கிடுவாங்க. அடுத்த ஆளைக் கூட்டியாரப் போயிருவாங்க.”

“உங்களை மாதிரி எத்தனை பேர் இந்த ஊர்ல இருக்கீங்க!”

“பத்தாயிரம் பொண்ணுங்க இருக்கோம்னு ஒருமுறை இன்ஸ்பெக்டரம்மா சொன்னாங்க. அட, சொல்ல மறந்துரப் போறேன்... தற்கொலை செஞ்சுக்கறதுக்கு முந்தி ஒரு பையன் எங்கிட்ட வந்தான்யா, சின்னப் பையன்தான்.”

“அப்படியா, அவனுக்கு...”

“புத்தி சொன்னியான்னு கேக்கறியா? அதான் இல்லை. போய் பண்ணிக்கடான்னு சொல்லிட்டேன்.”

“அப்புறம் என்ன ஆச்சு?”

“அதும் டமாசு கதை. இதபாரு, இந்த மாலை அவந்தான் கொடுத்தது. எவ்ளவு இருக்கும்?”

“அவன் என்ன ஆனான்...?”

“சொல்றேன், கொஞ்சம் இரு. ஆளு வந்திருச்சு. சித்த நேரத்துக்கு தொடரும் போட்டு வையி... போய்ட்டு வந்து சொல்றேன்.”

“என்ன அதுக்குள்ள வந்துட்ட...?”

“அந்தாளுக்கு சரசாதான் வேணுமாம்... எங்கேஜா இருக்குது. காத்திருக்கான். என்ன ஒரு மாதிரி ஆயிட்டே?”

“அதிர்ச்சி. நீ உள்ள வர்றபோது கொஞ்சம் நொண்டறதைப் பார்த்தேன். கால்ல என்ன?”

“அதுவா... ஒருமுறை ‘ரெய்டு’ம்போது கூரைமேல் எகிறிக் குதிச்சு ஓடினனா... அப்ப மடங்கிக்கிச்சு. இன்னும் சரியாகலை. புத்தூர் வைத்தியம் பார்க்கணும்.”

“ரெய்டா...”

“ஆமா; அப்பப்போ மாமூலா போலீஸ் பளுப்பா வண்டில ரேடியோ எல்லாம் வெச்சுகிட்டு, வருவாங்க. பெரும்பாலும் முன்னாடியே தகவல் வந்துரும். சில நாளு தெரியாமப் போயி மாட்டிக்கிடுவோம். வர சமயம் பாத்து பையன் மணி அடிப்பான். போட்டது போட்டபடி பாதி எந்திரிச்சி எகிறிக் குதிச்சு மொட்டை மாடி ஓடிருவோம்...”

“எப்பவாவது அகப்பட்டிருக்கியா?”

“ஓ, எத்தினியோ வாட்டி.”

“அகப்பட்டா அடிப்பாங்களா?”

“சேச்சே... சும்மா சொல்லக்கூடாது. அடிக்கல்லாம் மாட்டாங்க. டமாசா பேசிக்கிட்டே டேசனுக்குக் கூட்டி போவாங்க. காலைல கோர்ட்டுக்குக் கூட்டிப் போவாங்க. மேஸ்திரேட்டும் தங்கமான மனுஷன்! ‘என்ன ராணி திரியும் வந்துட்டியா’ன்னு விசாரிப்பாரு. வக்கீலுக்குத் தெண்டம் அளுதா பைனோட விட்டுருவாங்க. முதலாளிதான் கட்டி திரியும் அளைச்சுக்கிட்டு வந்துருவாரு.”

“பின்ன ஏன் போலி**ஸு**க்கு பயந்து ஓடணும்.”

“ரெண்டு மூணு நா வருமானம் போயிடுதில்ல?”

“ஏதோ ஒரு பையனைப் பத்தி சொல்ல வந்தியே?”

“பாத்தியா, மறந்தே போய்ட்டேன். ஒரு நா ராத்தரி என்னாச்சு, மணி எட்ரை இருக்கும். இந்தாளு வரான் திருதிருன்னு முளிச்சிக்கிட்டு. ஆளு புதுசு. பதினேழு பதினெட்டு வயசுதான் இருக்கும். சட்டை கால்சராயெல்லாம் ஒளுங்கா மாட்டிக்-கிட்டிருக்கான். நாங்க நாலைஞ்சு பேரு வருசையா நிக்கிறோம், பேசாம நிக்கிறான். இன்னா தம்பி, சீக்கிரம் சொல்லு. எங்களுக்கும் வேற வேலை இருக்கு பாருன்னேன். நிமிர்ந்து ஒரு தபாக்கூடப் பார்க்கமாட்டான். ஊம், எதுக்கு வந்தன்னு கேட்கறேன். எதுக்கு வந்தேன். அவனும் கேக்கறான். டமாசு பாரு, இன்னும் கேளு. பொம்பாடா இருக்கும். சொல்லித்தரவான்னு கேக்கறோம். சின்னப் பையன் கைல மோதரம். பைல நோட்டுங்கள் தெரியுது. எத்தினி காசு வெச்சிருக்கன்னு சும்மானாச்சியும் கேட்டுப் பார்த்தேன். நோட்டை எடுத்துக் காட்டறான். அம்மாடின்னு ஆயிருச்சு. எண்ணிக்-கிட்டே இருக்கான். எல்லாம் பச்சை நோட்டு! அச்சடிக்கிறியான்னு கேட்டன். சரசு, சாவித்திரி, ராமம்மா மூணு பேரும் உஷாராய்ட்டாங்க. இன்னா வலை போடறாளுக, சாலாக்குப் பண்றாளுக. உதட்டைக் கடிக்கிறா, உச்சுங்கறா, மார் பொடவை பறக்குது. ராமம்மா படக்குனு போயி சட்டை டிராயர் மாத்திக்கிட்டு வந்துருச்சு. அந்தப் பையன் யாரையும் பாக்கல. ‘யாராவது ஒருத்தர் சொல்லுப்பா, சீக்கிரம்’னேன். திடீர்னு என்னைப் பார்த்து நீ வான்னான்; மத்தவங்க மூஞ்சியைப் பார்க்கணுமே? நான் அவனைக் கூட்டிட்டு ரெண்டாம் நம்பர் ரூம்பில்ல–அதான் கொஞ்சம் டீஜெண்ட்டாக இருக்கும்–அங்க இட்டாந்தேன். அவன் உள்ற வந்து படுக்கை மேல உக்காந்துக்கிட்டான். நான் கதவைச் சாத்திட்டு தலையை முடிஞ்சுகிட்டு. வளையை

இறுக்கிக்கிட்டு, மேலாக்கை உதறிட்டு பக்கத்தில் போய் உக்காந்துகினேன். முவத்தைத் திருப்பினேன்... பொட்டை மாதிரி அளுதுக்கிட்டிருக்கான். என்னயா ஏதாவது துக்கமான்னேன். அளுதுகிட்டே இருக்கான். எதுனாச்சியும் சாப்பிடறியா. பையனை அனுப்பி அரை புட்டி பீட்டர் ஸ்காட்டு வாங்கியாரவான்னு கேட்டா, வேணாமாம். பின்ன என்னதான் வேணும்னேன். சும்மா இருக்கேன், ஒண்ணும் வேணாம்கறான். இதபாரு இங்க சும்மா ஒண்ணும் வராதுன்னேன். அவன் உடனே தன் பைல உள்ள அத்தினி பணத்தையும் என் கைல இந்தா வெச்சிக்கன்னு கொடுத்துட்டான். எனக்குப் பயமாயிருச்சு. ஏன்யான்னேன். எனக்கு உயிர் வாள்றதுக்கு இஸ்டமில்லைன்னான். எனக்கு இஸ்டம்னேன். எனக்கு சாவணும். ஏதாவது வளி சொல்லுன்னான். இதுல என்ன கஸ்டம்... வெங்கடாத்ரி எக்ஸ்பிரஸ்ல போய் தலையைக் கொடு. நேரா மோச்சம்தான்னேன். டமாசுக்கு சொன்னேன். அவன் நிஜங்–காட்டியும்னுட்டு அந்த எக்ஸ்பிரஸ் எத்தினி மணிக்கு வருதுங்கறான். அப்புறம் கொஞ்சநேரம் சும்மா தன் கையையே பார்த்துக்கிட்டு இருந்தான். நான் வரேன்னு போய்ட்டான். என்னைத் தொடக்கூட இல்லே. பணம் ஐநூறோ என்னவோ இருந்திச்சு. முதலாளிக்கு மூக்கில வேர்த்து வந்து வாங்கிக்கிட்டு போய்ட்டார்."

"அவன் ஏன் சாக விரும்பினான்னு நீ கேக்கவே இல்லையா?"

"அதையேன் நான் கேக்கணும்? அவனுக்கு என்ன துக்கமோ, என்ன தாளாமையோ... அதெல்லாம் கஸ்டமருங்ககிட்ட நான் வெச்சுக்கிறதில்லை."

"அவனைப் பத்தி அப்புறம் ஏதும் தெரியலையா?"

"ஒருமுறை சூப்பர் கொட்டாயில சிவாஜி படம் பாக்கப் போய்க்கிட்டிருந்தப்ப எதித்தாப்பல மோளம் அடிச்சிக்கிட்டு கூட்டமா வருது... இன்னாடான்னு ஒதுங்கப் பாத்தா அசப்பில இந்த ஆளு மாதிரித்தான் இருந்தது."

"சவ ஊர்வலமா?"

"இல்லை. கல்யாணம். வடக்கத்திக்காரன்போல சேட்டு போல இருக்கு. குதிரைமேல தலைல கும்பாச்சியா வெச்சுக்கிட்டுப் போறான். கல்யாணம்தானய்யா அது? ஏன்னா உயிர் இருந்தது. என்ன சிரிக்கிறே?"

"தாங்ஸ்! உன் டயத்தை ரொம்ப எடுத்துக்கிட்டேன்!"

"எனக்குன்னு டயமே கிடையாதுய்யா!"

"நான் வரட்டுமா?"

"இரு."

"என்ன..."

"இத்தினி நேரம் என்னைய இத்தினி கேள்வி கேட்டியே... நான் உன்னைக் கேக்க வேண்டாமா?"

"கேளு தாராளமா."

"நான் சொன்னதை எல்லாம் எளுதப் போறியா?"

"ஆமாம். அப்படியே மாத்தாம."



www.writersujatha.com

“அதுக்குப் பணம் கொடுப்பாங்களா?”

“ஆமா. அந்தப் பணத்தை உங்கிட்ட கொண்டு கொடுத்துர்றதா உத்தேசம்.”
“நான் அதுக்கு சொல்ல வரலை. நீயும்–நானும் ஒண்ணுன்னு சொல்ல வரேன். உனக்கு ஒரு தெறமை இருக்கு–எளுதற தெறமை. அதை உபயோகிக்கறே. காசு வாங்கறே. என் தெறமை இது ஒண்ணுதான். நானும் அதைக் காட்டி காசு வாங்கறேன். என்னா சொல்றே?”

“அப்படிப் பார்த்தா எல்லா உத்தியோகத்துக்கும் இது பொருந்தும் இல்லையா?”

“இப்ப இந்த போட்டி பண்ணியே, இதுக்கு ஏதாவது பலன் உண்டா?”

“போட்டி இல்லை! பேட்டி...”

“சரி பேட்டி.”

“நான் இந்த பேட்டிக்கு வந்த காரணம் வேற. அதனோட பர்ப்பஸே வேற. உன் சின்ன வயசில நடந்த நிகழ்ச்சிகளில எங்கயோ அந்தக் காரணம் பொதிஞ்சிருக்கு...”

“பொதிஞ்சிருக்குன்னா...”

“மறைஞ்சிருக்கு.”

“என்ன காரணம்?”

“நீ ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தேன்... னு?”

“காசு சம்பாதிக்க.”

“நான் அந்த அர்த்தத்திலே கேக்கலை ராணி... ஆல் ரைட். நீதான் இந்த தர்க்கத்தை ஆரம்பிச்சுக் கொடுத்தே... உன்னை கேக்கறேன். நீ பண்றது தப்பான காரியம்னு உனக்கு எப்பவாவது தோணுதா?”

“தப்பா...? எனக்குப் புரியலை.”

“பாவம்னு புரியுதா?”

“இப்ப நா செய்யறது பாவம்கறியா... அப்ப என்னைத் தேடி வர்றவங்க செய்யறது!”

“தேடி வரும்படியான சூழ்நிலையை ஏன் உருவ... ராணி! எனக்கு இதைச் சரியா உனக்குப் புரியும்படியா கேக்கத் தெரியலை. இத பாரு? வாழறதுக்கு எத்தனையோ வழி இருக்கு இல்லையா? உன்னை மாதிரி பெண்கள் இப்பல்லாம் எத்தனையோ நவீனமான காரியங்கள் பண்றாங்க. ஏரோப்ளேன்கூட ஓட்டறாங்க. கம்ப்யூட்டர்னு ஒண்ணு இருக்கு. அது எல்லா கணக்கும் போடும். அதை எல்லாம் இயக்கறாங்க!”

“ஆ! அடி ஆத்தே!”

“இது நீ வியக்கறதுக்காக சொல்லலை ராணி... இப்ப உன்னை ‘ரெய்டு’ பண்ணி அரஸ்ட் பண்ணாங்களே போலீஸ் ஆபீஸர்...”

“அவங்ககூட பொண்ணுதான். நீ இன்னாங்கறே? எனக்குப் புரியலியே.”

“ராணி! ஒழுங்கா வாழறதுக்கு எத்தனையோ வழிகள் இருக்கறப்போ, உலகத்தில் மிகப் புராதனமான தீமை இந்தப் ப்ராஸ்டிட்யூஷன். இதில போய் மாட்டிக்கிட்டு...”

“எனக்கு இதான்யா தெரியும், வேற எதும் தெரியாதே. நானும் காதல் பண்ணிப் பார்த்தேன். டிராமா ஆடிப் பார்த்தேன். எங்க பார்த்தாலும் போட்டி! எங்கயும் எனக்கு செரிப்படலை. இங்கயும் போட்டிதான். ஆனா டிமாண்டு இருந்துகிட்டே இருக்கு. இப்ப நீ என்ன செய்யணும்கறே? இதெல்லாத்தையும் விட்டுட்டு ஏதாவது கவுரதையா தொளில் செய்யணும்கறியா...?”

“ஆமா.”

“எனக்கு ஏதாவது அந்த மாதிரி ஏற்பாடு செய்து தரியா?”

“அதுக்குன்னு சில மறுவாழ்வு ஸ்தாபனங்கள்ளாம் இருக்கு.”

“மறுவாள்வா. பாருய்யா, அதையும் நான் பாத்துட்டு ஆறு மாசம் இருந்துட்டு வந்திருக்கேன்! சுவர் எத்தினி அடி உசரம் தெரியுமா? பத்தடி. உள்ள தைய ஊசி கொடுத்து கிளிஞ்ச துணியையே திருப்பித் திருப்பி தெக்கச் சொல்வாங்க. அரை வயித்துக்குச் சோறு. ஏஜண்டுகளுக்கும் அட்டேண்டர்களுக்கும் கனிஷன். கொடுத்த காசை அவங்களே சாப்பிட்டுக்கிட்டு யாராவது பெரிய மனுசங்க வர்றப்போ மட்டும் புதுசா துணி குடுத்து உடுத்துக்கச் சொல்லி, ரொம்ப பித்தலாட்டம்யா... அப்புறம் அதில நடக்கிற வேற ஒரு கூத்தை சொல்லட்டுமா? எளுதுவியா?”

“வேண்டாம்.”

“மறுவாள்வு, மறுவாள்வுகங்கறியே இன்னாய்யா அது?”

“இதபார் ராணி. நீ இந்த பேட்டியுடைய ஆரம்பத்தில் சொன்னது ஞாபகம் இருக்கா? நீ இந்த தொழிலுக்கு வந்ததுக்குக் காரணம் ஏழ்மை இல்லைன்னு...”

“இப்பவும் சொல்றேன் திமிருதான் காரணம்னு.”

“காரணம் அதில்லை. சூழ்நிலைதான்... சமூகச் சூழ்நிலை. இந்த பாவத்தை அனுமதிக்கிற நம் சட்டங்கள்ள இருக்கிற ஏராளமான ஓட்டைகள். உன்னை ‘ரெய்டு’ பண்ணிப் புடிச்சா எப்படி மூணாவது நாள்ள திரும்பி இந்த வேலைக்கு வந்துர முடியுது உன்னால? சட்டம் போதாது. இதனால கம்யூனிஸ்ட் நாடுகளில் ப்ராஸ்டிட்யூஷன் கிடையாது தெரியுமா?”

“அது என்னா மிஷினு?”

“சரிதான்! நான் வரட்டுமா?”

“இருய்யா ஒரே ஒரு சின்ன விசயம் பாக்கி இருக்குது.”

“சொல்லு!”

“இதுவரைக்கும் மறுவாழ்வு அது இதுன்னு பெரிசா பேசறல்ல பிரமாதமா... என்னை கல்யாணம் பண்ணிக்குவியாய்யா...?”

“எனக்கு கல்யாணம் ஆய்டுச்சே...”

“இப்ப கல்யாணம் ஆவலைன்னு வெச்சுக்க.”

“...”

“ஏன் பேசாம இருக்கே? பதில் சொல்லத் தெரியலை. அப்ப என்னைப் பத்தி பத்திரிகையில் எழுதப் போறல்ல, இதையும் எளுது. மகா சனங்களே! ஆமா நான் செய்யறது பாவந்தான். தப்புத்தான். இவுரே சொல்லிட்டாரு, அதுக்கெல்லாம் காரணம் நான் வளர்ந்த சூழ்நிலைதான்னுட்டு. ஏதோ சந்தர்ப்பவசத்தால நான் இந்த தொளில்ல வந்து மாட்டிக்கிட்டேன். என்னை இதில இருந்து விடுவிச்சு கூட்டிட்டுப் போக உங்கள்ள – என் கதையைப் படிக்கிறவங்கள்ள யாராவது, என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டு எனக்கு சமூகத்தில ஒரு அது... என்னா வார்த்தை... அந்தஸ்து கொடுக்கறவங்க இருந்தாங்கன்னா பெங்களூர் கிக்பேட்டை விஜயலட்சுமி கொட்டாயண்டை வந்து, பக்கத்தில சந்து இருக்குது. அதுல நுளைஞ்சா செட்டுக்கு மாடில இருக்குது லாட்**ஜு**. அங்க வந்து யாரை வேணா ராணின்னு கேட்டா போதும். உடனே என்ன கூப்பிடுவாங்க. பகல் வேளைல வாங்க. சாயங்காலம் அஞ்சரைக்கு மேல கொஞ்சம் பிஸியா இருப்பன்... வாங்க – நான் காத்துக்கிட்டு இருக்கேன். மறுவாள்வு தாங்க – இத இப்படியே போடுய்யா.”

“சரி.”

*1980*

www.writersujatha.com

# ஃபில்மோத்ஸவ்

மந்திரி வந்திருக்கவேண்டும். எல்லோரும் தேர்தல் உற்சவத்தில் கவனமாக இருந்த-தால் டில்லி அதிகாரி ஒருத்தர் மட்டுமே வந்திருந்தார். வெள்ளைக்கார டைரக்டர்கள் சிலர் வந்திருந்தார்கள். எதற்கெடுத்தாலும் 'வெரி நைஸ்', 'வெரி நைஸ்' என்றார்கள்.

மற்றொரு 'கல்யாணராம'னைத் தேடி தமிழ் சினிமா டைரக்டர்கள், கதாசிரியர்கள், பத்திரிகையாளர் என்று பல பேர் டேரா போட்டிருந்தார்கள். சகட்டு மேனிக்கு சினிமா பார்த்தார்கள், குடித்தார்கள். விலை போகாத ஹிந்தி நடிகர்கள், குறுந்தாடி வைத்த புதிய தலைமுறை டைரக்டர்கள், புதுக் கவிஞர்கள், அரசாங்க அதிகாரிகள், கதம்பமான கும்பல். சிகரெட் பிடிக்கும் பெண்கள், சத்யஜித்ரேயைத் தொடர அவர் பொலான்ஸ்கியைக் கட்டிக்கொண்டு போட்டோ எடுத்துக்கொண்டார்.

பட்டுப்புடவை அணிந்த ஒரு சுந்தரி குத்துவிளக்கு ஏற்றினாள்.

எல்லோரும் சினிமா எத்தகைய சாதனம், மனித சமுதாயத்தை எப்படி மாற்றக்கூடிய வல்லமை படைத்தது என்பதுபற்றி இங்கிலீஷில் பேசினார்கள். 'சினிமாவும் சமூக மாறுதலும்' என்று புஸ்தகம் அச்சடித்து ஒல்லியான அதை இருபது ரூபாய்க்கு விற்றார்கள். உதட்டு நுனியில் ஆங்கிலம் பேசினார்கள். சினிமா விழா!

நம் கதை இவர்களைப் பற்றி அல்ல. ஒரு சாதாரண பங்களூர் குடிமகனைப் பற்றியது. பெயர் நாராயணன். தொழில் யஷ்வந்த்புரத்து பிஸ்கட் ஃபாக்டரியில் பாக்கிங் செக்ஷனில். ஃபிலிம் விழாவுக்காக தேதி அறிவிக்கப்பட்ட அன்று அதிகாலையில் சென்று வரிசையில் நின்று தலா 11 ரூபாய்க்கு ஏழு டிக்கட் அடங்கிய புத்தகம் ஒன்றை அடித்துப்பிடித்து வாங்கி வந்துவிட்டான்.

கூட்டத்தைத் தடுக்க போலீஸ் மெலிதான லட்டியடித்ததில் முட்டியில் வலி. இருந்தாலும் முழுசாக வெளியே வந்துவிட்டான். டிக்கட் கிட்டிவிட்டது. ஏழு படத்தில ஒரு படமாவது நன்றாக இருக்காதா...?

நாராயணனின் அகராதியில் இந்த 'நன்றாக' என்பதை விளக்க வேண்டும். நன்றாக என்றால் சென்சார் செய்யப்படாத... குறைந்த பட்சம் ஒரு கற்பழிப்புக் காட்சியாவது இருக்கக்கூடிய படம். நாராயணனின் குறிக்கோள் நவீன சினிமாவின் மைல் கல்களை தரிசித்துவிட்டு விமர்சனம் செய்வதல்ல. அதற்கெல்லாம் பண்டிதர்கள் இருக்கிறார்கள் அவனைப் பொறுத்தவரை ஒரு பெண்ணாவது ஏதாவது ஒரு சமயம் உடையில்லாமல் ஓரிரண்டு ஃப்ரேமாவது வரவேண்டும். அப்போதுதான் கொடுத்த காசு ஜீரணம்.

நாராயணனின் ஆசைகள் நாசூக்கானவை.

அவன் தின வாழ்க்கையும் மனவாழ்க்கையும் மிகவும் வேறுபட்டவை. தின வாழ்க்கையில் அவன் ஒரு பொறுப்புள்ள மகன். பொறுப்புள்ள அண்ணன். பக்தியுள்ள பிரஜை. பனஸ்வாடி ஆஞ்ச நேயா, ராஜாஜிநகர் ராமன் எல்லாரையும் தினசரி அல்லது அடிக்கடி தரிசிக்கின்றவன். எவ்வித ஆஸ்திக சங்கத்துக்கும் பணம் தருவான். எந்தக் கோயில் எந்த மூலைக் குங்குமமும் அவன் நெற்றியில் இடம்பெறும். நாராயணனுக்குத் திருமணம் ஆவதற்கு சமீபத்தில் சந்தர்ப்பம் இல்லை. ஐந்து தங்கைகள், அனைவரும் வளர்ந்து கல்யாணத்திற்குக் காத்திருப்பவர்கள். ஒருத்திக்காவது ஆக வேண்டாமா? பெண்களைப் பற்றி இயற்கையாகவே நாராயணன் கூச்சப்படுவான். பஸ் நிலையத்-திலோ, ஃபாக்டரியிலோ அவர்களை நிமிர்ந்து பார்க்கமாட்டான். அவனை பலரும் புத்தன், ஞானி என்று அழைப்பார்கள்.



www.writersujatha.com

அவன் மன வாழ்க்கை வேறு தரத்தது. அதில் அபார அழகு கன்னியர்கள் உலவி அவனையே எப்போதும் விரும்பினர். இன்றைய தமிழ், இந்தி சினிமாவின் அத்தனை கதாநாயகியரும் நாராயணனுடன் ஒரு தடவையாவது பக்கத்தில் அமர்ந்து தடவிக்கொடுத்திருக்கிறார்கள்.

எத்தனை அழகு என்று வியந்திருக்கிறார்கள்.

நாராயணனுக்கு கிருஷ்ணப்பா என்றொரு சினேகிதன். அவன் அடிக்கடி நாராயணனிடம் கலர்கலராக சில போட்டோக்கள் காண்பிப்பான். ஐரோப்பா தேசத்து நங்கைகள் வெட்கத்தை அறைக்கு வெளியில் கழற்றி வைத்துவிட்டு தத்தம் அந்தரங்களைப் பற்றி சந்தேகத்துக்கு எவ்வித சந்தர்ப்பமும் தராமல் இதோ பார், இதைப் பார் என்று நாராயணனைப் பார்த்துச் சிரிக்கும் படங்கள். படங்களைவிட அந்தப் புத்தகங்களில் வரும் விளம்பரங்கள், சாதனங்கள் நாராயணனை ரொம்ப வருத்தின. இதெல்லாம் நம் நாட்டில் கிடைத்தால் என்னவாம்! என் போன்ற தனியனுக்கு இந்த சாதனங்கள் சிறப்பானவை. பயமோ கவலையோ இன்றி எவ்வளவு திருப்தியும் சந்துஷ்டியும் அளிக்கும்!

என்னதான் அழகாக அச்சிடப் பெற்றிருந்தாலும் சலனமற்ற இரு பரிமாணப்–படங்களைவிட சினிமாச் சலனம் சிறந்ததல்லவா? நங்கைமார் நகர்வதைத் தரிசிக்கலாம். கேட்கலாம். கிருஷ்ணப்பா சொன்னான், ‘அத்தனையும் சென்சார் செய்யாத படம் வாத்தியாரே! நான் எதிர்த்தாப்பலே தியேட்டருக்கு வாங்கியிருக்கேன். தினம் தினம் படத்தைவிட்டு வெளியே வந்ததும் எப்படி இருந்தது சொல்லு. நானும் சொல்றேன்.”

நாராயணன் பார்த்த முதல் படம் ரஷ்யப்படம். சைபீரியாவின் பனிப்படலத்தில் எவ்வளவு கஷ்டப்பட்டு அவர்கள் வேலை செய்து எண்ணெய் கண்டுபிடித்து... படம் பூரா ஆண்கள். கிழவர்கள். பாதிப்படத்துக்கு மேல் பனிப்படலம். வெளியே வந்தால் போதும் என்று இரண்டுமணி நேரத்தை இரண்டு யுகமாகக் கழித்துவிட்டு வெளியே வந்தான். கிருஷ்ணப்பா எதிர் தியேட்டரில் பார்த்த ஃபிலிமோத்சவப் படத்தில் ஐந்து நிமிடம் விடாப்பிடியாக ஒரு கற்பழிப்பு காட்டப்பட்டதாம். கானடா தேசத்து படம். வர்ணித்தான். ‘பார்க்கிறவங்களுக்கே சுந்த் ஆயிடுச்சி வாத்தியாரே!” நாராயணன் இன்னும் ஒரு நாள் இந்த தியேட்டரில் பார்ப்பது... அப்புறம் எதிர் தியேட்டரில் மாற்றிக்கொள்வது என்று தீர்மானித்தான்.

நாராயணன் பார்த்த இரண்டாவது படம் டிராகுலா பற்றியது. படம் முழுவதும் நீல நிறத்தில் இருந்தது.

நீள நகங்ளை வைத்துக்கொண்டு ராத்திரி 12 மணிக்கு கல்லறையிலிருந்து புறப்பட்ட டிராகுலா அந்த அழகான பெண்ணின் ரத்தத்தை உறிஞ்சுவதற்குக் கிளம்பியபோது நாராயணன் சிலிர்த்துக்கொண்டான். ஆகா, இதோ! ரத்தம் உறிஞ்சுவதற்கு முன்பு, இதோ ஒரு கற்பழிப்பு, சிறந்த கற்பழிப்பு, அப்படியே அவள் கவுனைக் கீறிக் குதறிக் கிழித்து, உள்ளுடைகளையும் உதறிப்போட்டு, மெதுவாக அங்கம் அங்கமாக அந்த நகங்களால் வருடி, அப்புறம்தான் கழுத்திலிருந்து ரத்தம் எடுக்கப் போகிறது என்று எதிர்பார்த்து ஏறக்குறைய நாற்காலியில் சப்பணமிட்டு உட்கார்ந்துகொண்டான்.

அந்தப் பாழாப்போன பெண், டிராகுலா அருகில் வந்ததும் தன் கழுத்தில் சங்கிலியில் தொங்கும் சிலுவையைக் காண்பித்துவிட –வந்தவன் வந்த காரியத்தைப் பூர்த்தி செய்யாமல், ஏன் ஆரம்பிக்கக் கூட இல்லாமல், பயந்து ஓடிப்போய் விடுகிறான். சட்! என்ன கதை இது! நிச்சயம் இந்த தியேட்டரில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் சினிமாப் படங்கள் அத்தனையும் அடாஸ் என்று தீர்மானித்து வெளியே வர, கிருஷ்ணப்பாவைச் சந்திக்கப் பயந்து, வேகமாக பஸ்ஸ்டாண்டை நோக்கி ஓட, கிருஷ்ணப்பா பிடித்துவிட்டான்.

www.writersujatha.com

“என்னாப் படம் வாத்தியாரே! டாப்பு! அப்பன் தன் பொண்ண காணாம்னுட்டு தேடிக்கிட்டு போறான். அவ, எங்க அகப்படறாத் தெரியுமா? செக்ஸ் படங்கள் எடுக்கறவங்ககிட்ட நடிச்சிகிட்டு இருக்கா! எல்லாத்தையும் காட்டிடறான்! கொட்டகையிலே சப்தமே இல்லை... பின் டிராப் சைலன்ஸ்.”

“கிருஷ்ணா, நாளைக்கு டிக்கட் மாத்திக்கிடலாம். நீ என் தியேட்டர்லேயும் நான் உன் தியேட்டர்லேயும் பாக்கிறேன்!”

“நாளைக்கு மட்டும் கேட்காதே வாத்தியாரே! நாளைக்கு என்ன படம் தெரியுமா? லவ் மெஷின், பிரெஞ்சுப் படம்! நான் போயே யாகணும்!”

“பிளாக்கில கிடைக்குமா?”

“பாக்கறேன்! துட்டு ஜாஸ்தியாகும். ஏன் உன் படம் என்ன ஆச்சு.”

“சே, பேசாதே! மரம் செடி கொடியைக் காட்டியே எல்லா ரீலையும் ஓட்டறான். நீ எப்படியாவது எனக்கு பிளாக்கில ஒரு டிக்கட் வாங்கிடு. என்ன விலையா இருந்தாலும் பரவாயில்லை!”

85 ரூபாய்க்கு ஒரு டிக்கட் மிகுந்த சிரமத்துடன் கிடைத்ததாக வாங்கி வந்தான். கிருஷ்ணா, “உன் டிக்கட்டைக் கொடு” என்றான்.

“இதை வித்து பார்க்க முடியுமான்னு சோதிச்சுட்டு அப்புறம் வர்றேன். நீ தியேட்டர் போயிரு” என்றான்.

“படத்தின் பெயர் லவ் மெஷின் இல்லையாமே.”

“ஏதோ ஒரு மெஷின். கிராங்கிங் மெஷினோ என்னவோ! ஆனா படு ஹாட்! கியாரண்டி மால்.”

நாராயணன் பார்த்த அந்த மெஷின் படம் செக்கஸ்லோவேகியா படம். நிஜமாகவே ஒரு புராதன சினிமா எந்திரத்தைப் பற்றியது. நடிகர்கள் ‘கப்ராஸ், கப்ராஸ்’ என்று வேற்று மொழியில் பேசிக் கொண்டிருக்க, படத்தின் அடியில் ஆங்கில எழுத்துக்கள் நடுங்கின. எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருந்த நாராயணனின் இங்கிலீஷ் அவ்வளவு வேகமாகப் படிக்க வரவில்லை.

இரண்டு வார்த்தை படிப்பதற்குள் படக் படக் என்று மாறியது. படத்தில் மிக அழகான இரண்டு பெண்கள் இருந்தார்கள். இரண்டு பேரும் ஏராளமாக கவுன் அணிந்து வந்தார்கள். கதாநாயகன் அண்ணனா, அப்பனா, காதலனா, என்று தீர்மானிக்க முடிய வில்லை! கவுன் போட்டிருந்த பெண்கள் சாஸ்திரத்துக்குக்கூட அந்த கவுன்களைக் கழற்றவில்லை இண்டர்வெல் வரை ஒரு பட்டன்? ம்ஹூம்! படுக்கையில் அவர்கள் படுத்ததுமே காமிரா நகர்ந்துபோய் தெரு, மண், மட்டை என்ற புறக்காட்சிகளில் வியாபித்தது. ஒரே ஒரு இடத்தில் சினிமாவுக்குள் சினிமாவாக பாரிஸ் நகரத்தின் எஃபில் டவர்முன் ஒரு பெண் தன் பாவாடையைக் கழற்றுவதாக ஒரு காட்சி வந்தது. அதாவது வரப்பார்த்தது. அதற்குள் காமிரா அவசரமாக அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவன் முகபாவங்களைக் காட்டத் தலைப்பட்டது. வெளியே வந்தான். கிருஷ்ணப்பா நின்றுகொண்டிருந்தான்.

“என்ன? பார்த்தியா? படம் எப்படி?”

“நீ பாக்கலை?”

“நான் என் டிக்கட்டை விற்கலாம்னு போனேன்! யோசிச்சேன். இன்னிக்கு இங்கதான் பார்க்கலாமேன்னு உன் டிக்கட்ல உள்ளே நுழைஞ்சேன். கிடக்கட்டும் உன் படம் எப்படி?”

“நாசமாய்ப் போச்சு. ஒரு எழவும் இல்லை. படம் முழுக்க குதிரை வண்டி கட்டிகிட்டு ஒரு ஆள் பயாஸ்கோப் வைச்சுக்கிட்டு ஊர் ஊராப் போறான்!”

நாராயணன் கிருஷ்ணப்பாவை சற்று தயக்கத்துடன் கேட்டான்.

“உன் படம் எப்படி?”

“செமைப்படம் வாத்தியாரே.”

நாராயணன் மவுனமானான்.

“வேஸ்ட் ஆறதேன்னுதான் உட்கார்ந்தேன். படுகிளாஸ். ஒரு முத்தம் கொடுக்கிறான் பாரு, அப்படியே அவளைச் சாப்பிடறான். ஆரஞ்சுப்பழம் உரிக்கிற மாதிரி உடுப்புகளை ஒவ்வொண்ணா ஒவ்வொண்ணா உருவி...”

“கிருஷ்ணா அப்புறம் பேசலாம். எனக்கு அர்ஜெண்டா வேலை இருக்குது! வர்றேன்” என்று விரைந்தான் நாராயணன். அவனுக்கு அழுகை வந்தது. கிருஷ்ணப்பா போன்ற எப்போதும் அதிர்ஷ்டக்காரர்களிடம் ஆத்திரம் வந்தது. “நாளைக்கு எங்கே படம் பார்க்கிறே சொல்லு...” என்று தூரத்தில் கிருஷ்ணப்பா கேட்டான். நாராயணன் பதில் சொல்லாமல் நடந்தான். ரப்பர் டயர்வைத்த வண்டியில் பெட்ரமாக்ஸ் அமைத்து எண்ணெய் கொதிக்க மிளகாய் பஜ்ஜி தத்தளிக்க பலபேர் தெருவில் சாப்பிட்டுக்-கொண்டிருந்தார்கள். கண்ணாடிப்பெட்டிக்குள் பொம்மை நங்கைகளின் அத்தனை சேலைகளையும் உருவித் தீர்க்கவேண்டும் போல் ஆத்திரம் வந்தது. மெல்ல நடந்தான். இருட்டு ரேடியோக் கடையைக் கடந்தான். ‘டாக் ஆஃப் தி டவுன்’ என்கிற ரெஸ்டாரன்ட் வாசலில் ஒரு கூர்க்கா நிற்க, ஒன்றிரண்டு பேர் அங்கே விளம்பரத்-துக்காக வைத்திருந்த போட்டோக்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். இன்று இரண்டு காட்சிகள், லிஸ்ஸி, லவினா, மோனிக்கா, டிம்பிள்... நான்கு அபூர்வ பெண்களின் நடனங்கள்.

மேற்படி நங்கைகள் இடுப்பில் மார்பில் சில சென்டி மீட்டர்களை மறைத்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

அந்த வாசல் இருட்டாக இருந்தது. வெற்றிலை பாக்குப் போட்டு ‘பதக்’ என்று துப்பிவிட்டு ஒருத்தன் உள்ளே செல்ல, கதவு திறக்கப்பட்டபோது பெரிசாக சங்கீதம் கேட்டு அடங்கியது.

உள்ளே செல்ல எத்தனை ரூபாய் ஆகும் என்று யாரைக் கேட்பது என்று தயங்கினான். அந்த கூர்க்காவைப் பார்த்த மாதிரி இருந்தது. வீட்டில் வந்து அம்மாவிடம் சொல்லி விடுவானோ? நடந்தான்.

சற்று தூரம் சென்றதும்தான் தன்னை ஒருவன் பின்தொடர்வதை உணர்ந்தான். முதலில் அவன் பேசுவது புரியவில்லை. பின்பு புரிந்தது. “ஆந்திரா, டமில்நாடு, குஜராத், மலையாளி கேர்ள்ஸ் சார்! பக்கத்திலேதான் லாட்ஜ். நடந்தே போயிறலாம்!”

நாராயணன் நின்று சுற்றுமுற்றும் பார்த்து “எவ்வளவு” என்றான்.

அவன் சொன்ன தொகை நாராயணனிடமிருந்தது.



www.writersujatha.com

"பிராமின்ஸ் வேணும்னா பிராமின்ஸ், கிறிஸ்டியன்ஸ், முஸ்லிம்? வாங்க சார்!"

நாராயணன் யோசித்தான்.

"நிஜம் ஸார் நிஜம்; நிஜமான பெண்கள்!"

நாராயணன் "வேண்டாம்ப்பா" என்று விருட்டென்று நடந்து சென்றான்.

*1980*

www.writersujatha.com

www.writersujatha.com

www.writersujatha.com

# இளநீர்

இந்தியா. ஏதோ ஓர் ஊர். ஒரு தினத்தின் முற்பகல்.

ஊரின் கடைகள் எல்லாம் மூடியிருந்தன. சுவர்களில் புதிய, கசியும் சிவப்பில் “அவர்களைக் கொல்லுங்கள்” என்று பெரிதாக, கோணலாக எழுதியிருந்தது. தெருவில் ஆரவாரம் எதுவும் இல்லை. அமானுஷ்யமான மௌனம். வீடுகளின் ஜன்னல்களும் கதவுகளும் மூடப்பட்டுக் கிறித்துவ வேதத்தின் ஜட்ஜ்மெண்ட் தினம்போல் இருந்தது.

ஒரு ஜீப் ஆரவாரித்துக்கொண்டு வந்தது. அதன் மேல்பாகம் திறந்திருந்தது. அதில் சுமார் பதினைந்து பேர் நின்றுகொண்டும், ஸ்திரமற்று உட்கார்ந்துகொண்டும் அடைத்திருந்தார்கள். ஜீப்பை ஓட்டிய இளைஞனின் வாயில் சிகரெட் தொங்கியது. நெற்றியில் கைக்குட்டை கட்டியிருந்தான். அனாவசிய வேகத்தில் அதை ஓட்டிக்–கொண்டிருந்தான். அடிக்கடி கியர் மாற்றிக் கொண்டிருந்தான். சுருண்டு எழுந்த புகைப்படலம் பின் தொடர ஆர்ப்பாட்டமாகச் சென்றுகொண்டிருந்த அந்த வண்டிக்கு இலக்கே எதுவும் இல்லைபோல் இருந்தது. நேராகச் சென்று நின்று ‘ரிவர்ஸ்’ அடித்து மறுபடியும் ஆரவாரமாகச் சென்றது. ஜீப்பின் நடுவில் ஒருவன் மூங்கில் கம்பில் ஒரு பெரிய கொடி பிடித்துக்கொண்டிருந்தான். கொடி காற்றில் துடித்து ஆடியது. அவன் அருகில் மற்றொருவன் கொஞ்சம் தலைவன்போல் இருந்தான். கையில் ஒரு ரைஃபிள் வைத்திருந்தான். அதை வானத்தை நோக்கிச் சில தடவைகள் சுட்டபோது மரங்களிலிருந்து பறவைகள் படபடத்து விலகின.

அவர்கள் யாவரும் ஜால்ராக்களும், டப்பாக்களும், சலங்கைகளும், இரும்புச் சாதனங்களுமாக ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தார்கள். வெற்றி – வீரம் – ரத்தம் – போர் போன்ற வார்த்தைகள் உபயோகித்துக் கத்தித் தொண்டை கம்மிப் போயிருந்தார்கள். அவர்கள் அவ்வளவு தூரம் தெருவில் சத்தமிட்டும் அந்தக் கதவுகள் திறக்கவில்லை. அந்த ஜனங்கள் வெளிவரவில்லை.

“சிறிய ஊர்” என்றான் ஒருவன்.

“பயந்துகொண்டார்கள்” என்றான் இன்னொருவன்.

“ஃப்ரீ இண்டியா ரெஸ்டாரண்ட். நிறுத்து ஜீப்பை. உடை கதவை” என்றான் போர்டுகளைப் படித்துக்கொண்டு வந்தவன்.

சரமாரியாக அந்த ஃப்ரீ இண்டியா ரெஸ்டாரண்டின் மூடிய கதவுகளின்மேல் கற்கள் விழுந்தன.

“நிறுத்தாதே போ. டவுன் பக்கம் விடு” என்றான் தலைவன்.

“டவுன் பக்கம், டவுன் பக்கம்,” என்று ஜால்ராவுடன் அவர்கள் பாடினார்கள்.

“நம் நாடு… ”

“நமதே.”

“நம் மொழி… ”

“நமதே.”

ஜீப் புதிய வழியில் சற்றுத் தூரம் சென்றது.

“இளநீர், இளநீர்,” என்றார்கள்.

ஒரு மரத்தினடியில் ஒரு கிழவன் இளநீர்க் கொத்துக்களை வைத்து இளைப்பாறிக் கொண்டிருந்தான்.

ஜீப் விசுக்கென்று நின்றது. அவர்கள் துள்ளிக் குதித்து வெளி வந்தார்கள். தூரப்பார்வை குறைந்த அந்தக் கிழவன் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தான்.

www.writersujatha.com

“தாத்தா, இளநீர் விற்கிறாயா?” என்று கேட்டான்.

கிழவன் நிமிர்ந்தான். “ஏன்?” என்றான்.

“தாத்தா, இன்றைக்கு எல்லாம் பூரா பந்த். இன்றைக்கு ஒன்றும் விற்கக்கூடாது தெரியுமா?”

“தாத்தா, அரிவாள் இருக்கிறதா?” என்றான் மற்றொருவன். அவர்கள் அந்த இளநீர்க் கொத்திலிருந்து ஆளுக்கு ஒன்று எடுத்துக் கொண்டார்கள்.

“விடுங்கள். நான் தருகிறேன்,” என்றான் கிழவன்.

“தாத்தா, நீ கிழவன். இன்றைக்கு வியாபாரம் பண்ணாதே.”

“ஏன்?”

“நம் மாநிலமே இன்றைக்கு பந்த். கதவடைப்பு. எதிர்ப்பு.”

“அப்படியா? என் இளநீரைக் கொடுத்துவிடுங்கள். எனக்குக் கணக்குத் தெரியவில்லை.”

“தாத்தா, அரிவாள் இல்லையா?”

“காசு தருகிறாயா? அரிவாள் தருகிறேன்.”

“தா” என்றான்.

“காசு?”

www.writersujatha.com

“தருகிறேன், தா.”

கிழவன் சாக்குக்கு அடியில் இருந்த அரிவாளை எடுத்துக் கொடுத்தான்.

அந்த இளைஞன் புன்னகையுடன், “இளநீரை வெட்டவா தாத்தா, உன் தலையை வெட்டவா?” என்றான்.

கிழவன் சிரித்தான்.

தலைவன் போலிருந்தவன் மற்றவர்களைக் கட்டுப்படுத்தினான். “கிழவன், மூத்தவன், அவனுக்குத் தெரியாது. தாத்தா, உன் இளநீரைச் சுருட்டிக் கொள்” என்றான்.

“ஏன்?”

www.writersujatha.com

"யாரும் வாங்க மாட்டார்கள். எல்லாக் கதவுகளும் அடைத்திருக் கின்றன."

"ஏன்?"

"நம்மவர்களை வேறு ஊர்களில் அடித்துக்கொல்கிறார்கள். அதற்கு எதிர்ப்பு."

கிழவனுக்குப் புரியவில்லை. "என் அரிவாளைக் கொடு" என்றான்.

அரிவாளால் முகத்தைச் சொறிந்துகொண்டவன், அதை 'ஷிக்' என்று சுழற்றி வெட்டினான். "இப்படித்தான் வெட்ட வேண்டும்" என்றான்.

www.writersujatha.com

"இல்லை; கைகள் போதும்!" என்று ஒருவன் மானசீகமாகக் கழுத்தை நெரித்தான்.

"எல்லாவிதத்திலும் நமக்கு அநியாயம். எண்ணிக்கையில் நம் பாஷை பேசுபவர்கள்தான் அதிகம். சென்ஸஸ் தப்பு. பொய். அப்புறம் அவர்கள் குண்டர்களை வைத்து நம்மை அடித்தால் நாம் அவர்களை அடிக்க எவ்வளவு நேரமாகும்?"

"அங்கேயே போய்விடலாம், ஒரு படை திரட்டிக்கொண்டு. நம் சகோதர்கள், நம் சகோதரிகள் அங்கே பாதுகாப்பின்றியிருக்கிறார்கள். அங்கே நாம் போக வேண்டும்... இன்னும் படை திரட்டி, இன்னும் ஆயுதம் சேர்த்து, இன்னும்... "

"கவர்ந்த ஸாரிகளைக் கொடிபோல் கட்டித் தெருவில் ஓடினார்களாம்."

"தீர்த்துக்கட்ட வேண்டும். அதற்கு வேளை வந்துவிட்டது."

பிரேம் என்பவனும் அவன் இளம் மனைவியும் ஒரு மலைவாச ஸ்தலத்தில் சில தினங்கள் கழித்துவிட்டுத் தன் சொந்த ஊர் திரும்பினார்கள். இரு மாநிலங்களின் எல்லையிலிருந்து அந்த ஊரைக் காரில் கடந்தார்கள். ஐந்து மணி நேரம் தொடர்ந்து கார் ஓட்டியதால் அவன் களைத்திருந்தாலும், தன் புதிய மனைவியுடன் அவன் வெளி உலகை மறந்து கழித்த புதிய ஆச்சரியங்கள் நிறைந்த கணங்களின் ஞாபகத்தில் உற்சாகமாகவே இருந்தான். அவனுடன் அருகில் ஒட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த அவன் மனைவியின் தலை வகிட்டின் ஆரம்பத்தில் குங்குமம் இருந்தது. பொம்மை–போல் இருந்தாள். ஓரிரண்டு தடவையே கழிந்த கன்னியாக அந்த ஞாபகத்தில் அவள் உடம்பில் இலேசான பூரிப்பு இருந்தது. கன்னங்கள் நாணத்தினாலும் வெயிலினாலும் சிவந்திருந்தன.

"எல்லாக் கடைகளும் பூட்டியிருக்கின்றனவே, ஏன்?" என்றாள் அவள்.

www.writersujatha.com

"லஞ்ச் நேரமாக இருக்கலாம். இந்தப் பிரதேசத்து ஜனங்களே சோம்பேறிகள்" என்றான். அவள் துடையின் மேல் கை வைத்தான். அவள் அந்தக் கையை ஒதுக்கி ஸ்டீயரிங்கின்மேல் வைத்து "அப்புறம்" என்றாள்.

"பிரேம், அதோ பார்" என்றாள்.

தூரத்தில் மர நிழலில் ஒரு கிழவன் இளநீர்களைச் சேகரித்துக் கொண்டிருந்தான். அருகே சில இளைஞர்கள் இளநீர் குடித்துக் கொண்டு சிதறி நின்றுகொண்டிருந்–தார்கள்.

"இளநீர் விற்கிறான். எனக்குத் தாகமாக இருக்கிறது" என்றாள்.

"ஓ. கே. மேம்ஸாபின் கட்டளை," என்றான்.

www.writersujatha.com

தூரத்திலிருந்து அந்த ஃபியட் கார் வருவதை அவர்கள் பார்த்தார்கள். வேகம் குறைந்து அது நின்றது. அதன் முன் பக்கத்தில் ஓர் இளைஞனும் பெண்ணும் ஒட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

அந்த இளைஞன் நவீனமாக உடை அணிந்திருந்தான். அவன் காரின் கதவைத் திறந்துகொண்டு ஒரு தடவை தன் கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்துக்–கொண்டான். பைக்குள் கைவிட்டு பர்ஸை எடுத்துக்கொண்டு கிழவன் அருகில் சென்றான். அவன் சலனத்தை அவர்கள் விடாமல் கவனித்தார்கள். அந்தப் பெண் அவர்களைப் பார்த்தாள். தலை கலைந்த இளைஞன் ஒருவன் அவளைப் பார்த்துப் 'பளீர்' என்று பற்கள் தெரியச் சிரிப்பதைப் பார்த்துத் தலை குனிந்துகொண்டாள்.

"கித்னா?" என்றான் பிரேம்.

கிழவன் புரியாமல் "என்ன?" என்றான்.

"கித்னா? ஹௌ மச்?" என்று இளநீரைத் தொட்டுச் சாடை காட்டினான்.

கிழவன் அருகே நின்றவர்களைப் பார்த்தான். அவர்களில் தலையில் கர்ச்சீப் வைத்தவன், "வா" என்று மற்றொருவனை அழைத்தான்.

அவர்கள் அவனை மெதுவாக நெருங்கினார்கள்.

"தாத்தா, இவனுக்கு இளநீர் கொடுக்காதே."

அந்த இளைஞன், கிழவன் இருவரும் புரியாமல் விழித்தார்கள். மேலும் சிலர் அருகே வந்தார்கள்.

"நீ எந்த மாநிலத்தவன்?"

பிரேம் ஆங்கிலத்தில் "மன்னிக்கவும். எனக்கு உங்கள் பாஷை தெரியாது. ஆங்கிலத்தில் பேசுங்கள்" என்றான்.

"கோபால், இவனை இங்கிலீஷில் கேள்."

கோபால் என்பவன் ஆங்கிலத்தில் "நீ எந்த மாநிலம்?" என்றான்.

பிரேம், "நான் ஓர் இந்தியன்" என்றான்.

"பிரேம், இளநீர் வேண்டாம் வா, போகலாம்" என்று கலவரத்துடன் கூப்பிட்டாள் அந்தப் பெண். அவள் எதிரே ஒருவன் நின்றுகொண்டு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

பிரேமுக்கு அந்த இடத்தின் உஷ்ணம் திடீரென்று உறைத்தது. அந்த இளைஞர்களின் முகத்தில் விரோதம் தெரிந்தது. அந்த ரைஃபிள் தெரிந்தது. அந்தச் சலங்கைகள், அந்த ஜால்ரா, கம்புகள், அந்தக் கொடி...

"தேர் இஸ் நோ இண்டியா மிஸ்டர்."

"இவன் அவர்களைச் சேர்ந்தவன்தான்."

"ஆம், ஆம், ஆளைப் பார்த்தாலே தெரிகிறது."

"பிரேம், ப்ளீஸ். வந்துவிடு. எனக்குப் பயமாக இருக்கிறது."

இப்போது அவளை அவர்கள் சூழ்ந்திருந்தார்கள். அவன் சட்டையை அவர்களில் ஒருவன் தொட்டுத் துணியின் ஸன்னத்தைப் பரிசோதித்தான்.

“மீசை அழகாக வைத்திருக்கிறான் பார்?”

பிரேம் கிளம்ப முயற்சி செய்தான். அவர்களை நட்புடன் விலக்கினான். அவர்கள் வழி விடவில்லை.

“விடுங்களேன், அவனை. இளநீர் குடிக்கட்டும்” என்றான் கிழவன்.

கோபால், “உங்கள் மாநிலத்தில் எங்கள் ஆசாமியைக் கொன்றிருக்கிறார்கள்” என்றான்.

‘எனக்கு மாநிலம் கிடையாது. எனக்கு மாநிலம் கிடையாது.”

“தப்பிக்கப் பார்க்கிறான்.”

“நீ பேப்பர் பார்க்கவில்லையா? இன்று இந்த மாநிலம் முழுவதும் கதவடைப்பு. என்ன தைரியம் இருந்தால் நீ கார் ஓட்டிச் செல்வாய்?”

“மன்னிக்கவும், சென்ற மூன்று தினங்களாக நான் பேப்பர் பார்க்கவில்லை.”

“உன் சொந்த ஊர் எது?”

“பிரேம்.”

பிரேம் சற்றுப் பயத்துடன் புன்னகை செய்தான். “ப்ளீஸ், எனக்கு வழி விடுங்கள்.”

“இன்று கார் ஓட்டக் கூடாது.”

“சரி, சரி! நான் திரும்பச் சென்று ஓரத்தில் நின்றுவிடுகிறேன். எனக்கு வழி விடுங்கள்.”

“காலைத் தொட்டு வணங்கு. வழி விடுகிறோம்.”

“பிரேம். பிரேம்.”

“ஊரைச் சொல்லமாட்டேன் என்கிறான் பார்.”

சிலர் அவன் மனைவிக்கு முன் கிராமிய நடனம் ஆடிக்கொண்டி ருந்தார்கள்.

அவன் சற்றுத் தயங்கினான். சற்றுத்தான். அவன் நெற்றியில் வியர்வை முத்துக்கள் தெரிந்தன.

“என்ன செய்ய வேண்டும்?”

“வணங்கு.”

“சரி”, என்று அவன் குனிந்து தொட்டு நிமிர்ந்தான். “திருப்திதானே” என்றான்.

“அவளையும் கும்பிடச் சொல்.”

“உன் மனைவியையும் வணங்கச் சொல்.”



www.writersujatha.com

அவர்களில் சிலர் காரின் அருகே சென்று அதன் கதவைத் திறந்து, "வா வெளியே" என்று அவளிடம் கத்தினார்கள்.

அவள் பயந்து சீட்டின் ஓரத்தில் ஒதுங்க முற்பட அந்த ஜன்னல் வழியாக முகங்கள் தெரிந்து சிரித்தன. ஒருவன் அவளை மார்பில் தொட்டான்.

அப்போது அந்த இடத்தில் திடுமென எரிமலை வெடித்தது. அந்த இளைஞன் திமிறி விலக்கிக்கொண்டு, "விடு அவளை," என்று கார் அருகே ஓடி அவர்களைத் தள்ளினான். அவர்கள் அவன் சட்டையைப் பிடித்தார்கள். அந்தப் பெண் பீதியுடன் கதவைத் திறந்து அவனை அனுமதிக்க முயற்சி செய்ய, அவனால் உள்ளே செல்ல முடியவில்லை. காரின் பானெட்டில் மூன்று பேர் ஏறி உட்கார்ந்துகொண்டார்கள். இளைஞன் மிக மிக பலத்துடன் தன் காரில் நுழைந்து அதைக் கிளப்ப முயற்சி செய்தான். அவர்கள் அவனை முரட்டுத்தனமாகப் பிடித்து வெளியே இழுத்தார்கள். அவன் கண்மூடித்தனமாக 'மடேர் மடேர்' என்று யாரையோ அடித்தான். அவன் உடைகள் கிழிந்தன. அவர்கள் அவன் மேல் பரவினார்கள்.

இப்போது அந்தச் சிக்கலான கூட்டத்தில் அந்த இளைஞனும் பெண்ணும் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. காரின் உள்ளே இருந்த பொருட்கள் வெளியே சிதறின. A Marriage Manual, அந்தப் பிரதேசத்தின் ரோட் மாப், தண்ணீர் பாட்டில், வளையல்கள்... முத்து...

காரின் உச்சியில் ஒருவன் ஏறிக்கொண்டு நடனமாடினான். கார் சீராக ஆடியது.
பிரேமின் குரல் ஹீனமாகக் கேட்டது... "உங்களைப் போல் ஆயிரக்கணக்கில் அங்கே இருப்பதை நினைத்துப் பாருங்கள்... நான் ஓர் இந்தியன். நான்... "

"கோபால், ரைஃபிளை எடு."

அங்கிருந்து சற்றுத் தூரத்தில் சாலையில் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருந்த வற்றிப்போன பசு ஒன்று வெடிச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தது.

*1973*

www.writersujatha.com

# ஜன்னல்

அவன் நுழைந்தபோது அந்த இடத்தில் ஐந்தாறு பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நடுவே ஒரு பழைய வீக்லி கந்தலாக இருந்தது. அலமாரிக்குள் நிறைய மருந்துகள் அடுக்கி இருந்தன. பாதி கண்ணாடியும் பாதி மரமுமாக இருந்த தடுப்பின் கண்ணாடிப் பகுதியில் கன்ஸல்டிங் நேரம் மாலை ஆறிலிருந்து எட்டரை வரை என்றது. தடுப்புக்கு அந்தப் பக்கம் டாக்டர் “ ‘ஆ’ சொல்லு” என்று சொல்வது கேட்டது. ஒரு மின்விசிறி மிக மெதுவாகச் சுழன்றுகொண்டிருந்தது. அதன் நிழல் சுவற்றில், பெஞ்சின் மேல், அந்தப் பெண்ணின் மார்பின் மேல், புத்தகங்களின் மேல் என்று மடக்கியும் நிமிர்ந்தும் நெளிந்தும் சுழன்றுகொண்டிருந்தது.

புதிதாக வந்தவன் பெஞ்சில் இருந்த வெற்றிடத்தை உடனே அடைந்து உட்கார்ந்தான். எதிரே இருப்பவரைப் பார்த்து புன்னகைத்தான். அவர் மஃப்ளரின் நிழலில் பதில் புன்னகை செய்யவில்லை. அவர் அருகில் இருந்த பெண் தன் புடவையை இன்னும் சரிசெய்து மறைத்துக்கொண்டு இன்னும் நெற்றியைச் சுருக்கிக்கொண்டாள்.

புதிதாக வந்து உட்கார்ந்தவனுக்கு நாற்பது வயதிருக்கலாம் அல்லது அது நிஜ நாற்பதாக இல்லாமல் முப்பது வயது முதிர்ந்த நாற்பதாக இருக்கலாம். அவன் சிரிக்க முயன்றதில் பொதுவாக ஒரு சினேகிதம் விரும்பும் தன்மை இருந்தது. பக்கத்தில் இருப்பவரிடம் கேட்டான்.

“ரொம்ப நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறீர்களோ?”

“ம்?” என்றார் அவர்.

அவன் கேள்வியை மறுபடி கேட்க “பதினைந்து நிமிஷம்” என்றார்.

அந்த அம்மாள் அவனைப் பார்த்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு “குழந்தைக்கு மீஸில்ஸா?” என்று கேட்டான்.

குறிப்பிட்ட குழந்தை ஜுர வேகத்தில் தூங்கிக்கொண்டிருக்க, அதன் தாய் பதில் சொல்லவில்லை. அந்தப் பெண் இன்னும் அவனை வெறுத்தாள்.

அந்த அறைக் கதவு திறந்து உள்ளே ‘ஆ’ என்று சொல்லக் கேட்டதற்கு ‘ஆ’ என்று சொன்னவர், கையில் ஒரு புதிய, வெளுத்த காகிதத்துடன் வெளியே வந்தார். டாக்டர் தெரிந்தார். “குட் ஈவினிங் டாக்டர்” என்றான்.

டாக்டர் ஈவினிங் என்று பதில் சொன்னார். அவனைப் பார்க்கவில்லை. “நீங்க வாங்க அம்மா” என்றார். அந்தப் பெண் உள்ளே சென்றாள். உடனே எல்லோரும் மௌனமாக, சிரத்தையாக கண்ணாடிக்குப் பின் கேட்கப்போகும் வார்த்தைகளில் கவனமாக இருந்தார்கள்.

அவள் பேசுவது தெளிவாகக் கேட்கவில்லை. தாழ்வாக இருந்தது அவள் – டாக்டர் சம்பாஷணை.

புதிதாக வந்து உட்கார்ந்து சினேகிதம் தேடின ஆசாமி பக்கத்தில் இருப்பவரை “உங்களுக்கு என்ன?” என்று கேட்டான். “கையிலே கட்டி” என்று கையைக் காட்டினார். “பென்ஸிலின் நாலு இன்செக்ஷன் போட்டு நேற்றுதான் உடைஞ்சுது.” “அப்படியா!” சற்றுத் தாழ்ந்த குரலில் “இவர் நல்ல டாக்டர் ஸார். கைகாரர் ஸார். நல்ல காசு” என்றார். அவனும் தாழ்ந்த குரலில், “நான் இவரிடம் இப்பொழுதுதான் முதல்

தடவை வருகிறேன். இவரிடம் வந்ததே சரியா என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு உடம்பு சரியா இல்லையா என்பதுகூட எனக்குச் சொல்ல முடியாது. எனக்கு இவர் வைத்தியம் செய்ய முடியுமா என்பதுகூட எனக்குச் சரியாச் சொல்லமுடியாது...”

உனக்கு என்ன என்று அவர் கேட்கவில்லையே என்று வருத்தப்பட்டான். ‘அப்படியா’ என்று மட்டும் சொல்லியிருந்தார்.

அடுத்த தடவை டாக்டர் கதவைத் திறந்தபோது ‘டாக்டர் ஒரு நிமிஷம்’ என்று சற்று உரக்கவே சொன்னான். எல்லோரும் அவனையே பார்த்தார்கள்.

“டாக்டர் எனக்குக் கொஞ்சம் அவசரம். என்னைக் கொஞ்சம் சீக்கிரம் அனுப்பிவிட முடியுமா?”

“என்ன உங்களுக்கு ஜுரமா?” என்று கேட்டார் டாக்டர்.

“இல்லை!”

“பின் என்ன?”

“உள்ளே வந்து சொல்கிறேனே” என்று அசந்தர்ப்பமாகச் சிரித்தான்.

டாக்டர் “சற்று இருங்கள். இந்த பேஷன்டைப் பார்த்துவிட்டுக் கூப்பிடுகிறேன். ராமநாதன் வாங்க” என்றார்.

ராமநாதன் (கையில் கட்டி) உள்ளே சென்றார்.

மற்றவர்கள் அவனை, க்யூவை மீறப்போகும் அவனைப் புதிய வெறுப்புடன் பார்த்தார்கள். அவர்கள் மறுக்கமாட்டார்கள் எனத் தோன்றியது. டாக்டர் கோபக்காரராக இருக்கலாம். டாக்டர் பொதுவாகவே தீவிரமாக வரிசை முறையைப் பாதுகாப்பவராக இருக்கலாம். அவன் சினேகிதம் தேடும் முயற்சியை விட்டுவிட்டான். அந்த வீக்லியை அவன் எடுத்துப் பிரித்தான். அதைக் கவனிக்காமல் திருப்பினான். மற்றொரு பெண் நுழைந்தாள். அவளுடன் ஒரு நான்கு வயதுப் பையன் வந்தான். வந்த உடன் உட்கார்ந்திருந்தவர்களை எல்லாம் பார்த்தான். வீக்லியைப் புரட்டிக்கொண்டிருந்தவன் சற்று ஒதுங்கி அவனுக்கு இடம் தர, சின்னப் பையன் சுதந்திரமாக உட்கார்ந்து–கொண்டு அதில் ஏரோப்ளேன் படம் இருக்கா என்று கேட்டான். அவன் வீக்லியைத் தீவிரமாக ஆராய்ந்து ஏரோப்ளேன் படம் தேடினான். பையன் பக்கங்கள் புரட்டப்பட அது என்ன இது என்ன என்று கேட்டான்.

“நீங்க வாங்க ஸார்” என்று கதவு திறந்ததும் டாக்டர் கூப்பிட்டார். உள்ளே இருந்தவர் மெதுவாகப் பேசிக்கொண்டே வந்தார். விக்லியைப் பையனிடம் கொடுத்துவிட்டு அவர் கட்டியைப் பற்றி விசாரித்துவிட்டு அவன் உள்ளே சென்றான். அவன் உள்ளே வந்ததும் டாக்டர் கதவைச் சாத்தினார்.

டாக்டர் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு எதிரில் சிறிய மேஜை இருந்தது. அதில் எனாமல் தட்டில் இருந்த பஞ்சில் இருந்த ரத்தம் அவனைக் கவர்ந்தது. அதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

“உட்காருங்கள்” என்றார் டாக்டர்.

அவன் டாக்டர் அருகில் இருந்த ஸ்டூலில் உட்கார்ந்தான். டெலிபோன் இருந்தது. அந்த மின்விசிறியின் நிழல் கண்ணாடித் தடுப்பையும் அடிக்கடி வருடிக்–கொண்டிருந்தது.



www.writersujatha.com

“என்ன உங்களுக்கு?”

“டாக்டர் நான் உங்களுடன் பேசவேண்டும். என் பெயர் சீனிவாசன். சாதாரணப் பெயர்! எனக்கு ஏதும் **ஜுர**மில்லை. ஜலதோஷமில்லை. நான் பக்கத்து பில்டிங்கில் இருக்கிற பாங்கில் வேலை செய்கிறேன். அங்கே நான் ஒரு காம்ப்ட்டா மீட்டர் ஆப்பரேட்டர். எனக்கு ஒருவிதமான பயம் இருக்கிறது.”

டாக்டர் அவனையே பார்த்துக்கொண்டு அவன் மேலே பேசக் காத்திருந்தார்.

“காம்ப்ட்டா மீட்டர் என்கிறது கூட்டல் யந்திரம் மிஷின். சென்ற ஒன்பது வருஷங்களாக நான் அந்த யந்திரத்திலே கூட்டல் செய்திருக் கிறேன். அதுதான் என் வேலை. எண்கள் எண்கள் எண்கள். அனுமார் வால்போல அன்றன்றைக்கு ட்ரான்ஸாக்ஷன்களை எல்லாம் அதில் டைப் அடித்துக் கூட்டிக்கொண்டே இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம். ஒரு வாரம், ஒரு மாதம், ஒரு வருஷம், ஒன்பது வருஷம் எத்தனை எண்கள்! டாக்டர் எனக்கு எப்படி இதைச் சொல்வது என்று தெரியவில்லை. எனக்குக் கல்யாணம் ஆகி பத்து வருஷமாகிறது. எனக்குக் குழந்தை கிடையாது. என் மனைவி என் வீடு என் ஆபீஸ் என் காம்ப்ட்டா மீட்டர். தினம் மனைவியிலிருந்து விடுபட்டு ரயிலேறி எண்களாக எட்டு மணி நேரம் எண்ணிவிட்டு மனைவிக்குத் திரும்பி மனைவியுடன் பேசிவிட்டு சாப்பிட்டுவிட்டு உறங்கிவிட்டு மறுபடி விடுபட்டு மறுபடி எண்களைத் துரத்தி மறுபடி...”

டாக்டர் நான் உங்களிடம் வந்ததே சரியா என்பது எனக்குத் தெரியவில்லை. எனக்கு எப்படிப்பட்ட உதவி தேவை என்பதும் தெரியவில்லை. எந்த விதத்தில் உங்களைப் போன்ற ஜெனரல் ப்ராக்டிஷனர் எனக்கு உதவி செய்யக்கூடும் என்பதும் தெரிய வில்லை. இருந்தும் என்னிடம் ஏதோ தப்பு ஏற்பட்டிருக்கிறது டாக்டர். இன்று காலை 9:06 ட்ரெய்னில் நல்ல கூட்டம். வாயிற் பக்கம் கம்பியை இரண்டு கையாலும் தொத்திப் பிடித்துக்கொண்டு மற்றவர்களுடன் என் காம்ப்ட்டா மீட்டர் நோக்கி விரைந்து கொண்டிருந்தபோது விர் விர் என்று எலக்ட்ரிக் கம்பங்கள் அருகே அருகே கடக்கும்போது எனக்கு திடீர் என்று அந்த ஆசை–கவர்ச்சிகரமான ஆசை ஏற்பட்டது! கை எதற்காக பிடித்துக் கொண்டு எதற்காக இப்படித் தொத்திக்கொண்டு எங்கே போகிறேன்? ஏன், நான் கையை விட்டுவிட்டால் என்ன? அவ்வளவு தீவிரமாக அந்த ஆசை ஏற்பட்டது. அப்படியே கையை விட்டுவிட்டு அந்த வேகமான வண்டியிலிருந்து விலகி விழுந்துவிட ஒரு கணம் தோன்றியது. அந்த ஆசையின் தீவிரம் என்னை ஆட்கொண்டு என் கைகள் சக்தியில்லாமல் போக திடீரென்று சுதாரித்துக் கொண்டேன். ஒரே ஒரு கணம்தான் அந்த ஆசை இருந்தது. உடனே போய்விட்டது.

டாக்டர்! நான் உங்கள் நேரத்தை அதிகம் விரயம் பண்ண வில்லை என்று நம்புகிறேன். அந்த ஆசை மறுபடி சாயங்காலம் சற்றுமுன் எனக்கு ஏற்பட்டது. ஓவர் டைமில் என் ஆபீஸில் தனியாக இருந்தேன். மூன்றாவது மாடியில் இருக்கிறது அந்த அறை. நானும் என் காம்ப்ட்டா மீட்டரும் தரையில் புரண்டு புரண்டு சுருண்டிருந்த காகிதத் தொடரில் என் விரல்கள் பதிப்பித்த எண்களும்...

நிமிர்ந்து பார்த்தேன். பெரிய ஜன்னல் தெரிந்தது. வானம் தெரிந்தது. ஜன்னல் திறந்திருக்கு. காற்றில் ஆடின ஜன்னல் திரை என்னை வாவா என்று அழைத்தது. அந்த அழைப்பை என்னால் எதிர்க்க முடியவில்லை. நடந்து சென்று ஜன்னல் விளிம்பில் ஏறி நின்றுகொண்டு கீழே தங்கசாலையில் ஊர்ந்துகொண்டிருந்த வாகனங்களின் மத்தியில் சொத் என்று காக்கை எச்சம் போல் விழ எவ்வளவு ஆசையாக இருந்தது தெரியுமா? இப்பொழுதும் ஒரு கணம்தான். அதற்குள் கை நடுங்கி வியர்த்துக் கண்ணாடிக் கதவைப் பிடித்துக்கொண்டு சமாளித்துவிட்டேன். உடனே நான் தீர்மானித்துவிட்டேன். என்னில் ஏதோ தப்பு இருக்கிறது. உடனே நான் டாக்டரைப் பார்க்க வேண்டும் என்று தோன்றிவிட்டது. ஆபீசுக்கு மிக அருகில் இருக்கும் உங்களைத் தேடி வந்துவிட்டேன்!



www.writersujatha.com

டாக்டர், உங்களிடம் எவ்வளவோ சொல்ல வேண்டும் என்று நினைத்து வந்தேன். பாதிகூடச் சொல்லவில்லை. அந்த பயம் ரொம்ப உண்மையான பயம். அப்படியே ஒரு புயல் காற்றுபோல ஒரு போர்வைபோல என்னைச் சுற்றிக்கொள்கிறது. இன்று நிச்சயம் அந்த ஜன்னலிலிருந்து குதித்திருப்பேன், சமாளித்துக் கொண்டுவிட்டேன்... எப்படிச் சொல்வது... எப்படி...”

அவன் கை நடுங்கியது. சிரித்தான். டாக்டர் ‘புரிகிறது’ என்றார். அவன் சட்டைப் பித்தானை அவிழ்க்கச் சொன்னார். ஸ்டெதாஸ் கோப்பை வைத்து அவன் இருதயத்தைக் கேட்டார். அவன் இரத்த அழுத்தத்தை எடுத்தார். இரவில் சரியாகத் தூங்குகிறாயா என்று கேட்டார். அவன் தூங்குகிறேன் என்றான். காலை ஒழுங்காக மோஷன் ஆகிறதா என்றார். அவன் யோசித்து ஆமாம் என்றான். அவன் கவனம் அந்த ரத்தப் பஞ்சில் நின்றது. டாக்டர் சொன்னார்: “உன் ரத்த அழுத்தம் சரியாகத்தான் இருக்கிறது. எல்லோருக்கும் இந்த ஃபெடிக் வரும். இப்பொழுது என் கேஸையே எடுத்துக்கொள். நான் மாலை நேரம்கூட சுதந்திரமாக வெளியில் சென்றதில்லை. இந்த இடத்தில் 6லிருந்து 8–30வரை. வீட்டில் போனால் பேஷண்ட்கள். அதற்கு முன் பேஷண்ட்கள். காலை. மாலை. உனக்கு காம்ப்ட்டாமீட்டர். எனக்கு பேஷண்ட்கள். எனக்கும் ஒரு நாள் எல்லாவற்றையும் உதறி எறிந்து கிராமத்துக்குப் போய் விடலாமா என்று தோன்றும். எனக்கு முடியாது. பிழைப்புப் போய்விடும். உனக்கு முடியும். நாளைக்கு ஆபீசுக்கு போகாதே. அவசியம் லீவ் எடுத்துக்கொள். ஒரு மாதம் இல்லை இரண்டு மாதம். சர்டிபிகேட் வேண்டுமானால் தருகிறேன். உனக்கு வேண்டியது மாறுதல்.” டெலிபோன் மணி அடித்தது. எடுத்துக் கேட்டார். ம் ம் ம் என்றுதான் திரும்பத் திரும்பச் சொன்னார். கடைசியில் மட்டும் சரி என்று சொல்லிவிட்டு வைத்தார். “அது என் மனைவி” என்றார். டெலிபோனில் பேசிக்கொண்டிருக்கும்போதே காகிதத்தில் எழுதி முடித்துவிட்டார். சரக் என்று கிழித்தார். “இந்த டானிக்கை சாப்பாட்டுக்குப் பின் இரண்டு டீஸ்பூன் சாப்பிடு. ஒரு பாட்டில் சாப்பிட்டுவிட்டு என்னை மறுபடி வந்து பார்” என்று அவனிடம் அந்தக் காகிதத்தைத் தந்தார்.

அவன் அந்தக் காகிதத்தைப் பிரமிப்புடன் பார்த்துப் படிக்க முயன்றான்.

டாக்டர் அவன் எழுந்து செல்லக் காத்திருந்தார். “டாக்டர் நான் உங்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும்?”

“ஐந்து ரூபாய்” என்றார்.

அவன் தன் பையில் தடவி சில ரூபாய் நோட்டுக்கள் சில எட்டண நாலணா பத்து பைசா நாணயங்கள் என்று சேர்த்துக் கூட்டிப்பார்த்து, “என்னிடம் நாலு ரூபாய் 50 பைசாதான் இருக்கிறது” என்று மன்னிப்புக் கலந்த குரலில் பயத்துடன் சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு மேஜை மேல் அவ்வளவு பணத்தையும் வைத்தான். டாக்டர் சரி என்றார்.

அவன் அந்தக் கதவைத் திறந்துக்கொண்டு வெளியே சென்றான்... உடனே உள்ளே வந்த அந்தப் பெண் தன் கையில் போர்த்தி அணைத்திருந்த குழந்தையை ஜாக்கிரதையாகத் திறந்து, “காலையிலிருந்து விட்டுவிட்டு ஜுரம் அடிக்கிறது டாக்டர். ஒரு தடவை வாயிலெடுத்துவிட்டான். கண்ணைத் திறக்காமல் ஜுரம்.” அப்பொழுது டாக்டர் மறுபடி ஸ்டெதாஸ்கோப் அணிந்து கொண்டார். அந்தக் குழந்தையைப் பரிசோதித்தார். அதன் வயிற்றை அழுத்திப் பார்த்தார்.

“இருமல் இருக்கா?”

“இல்லை டாக்டர்!”

“பேர் என்ன?”



www.writersujatha.com

"சுரேஷ்... சுரேஷ் டேய். டாக்டர் மாமாடா!"

"வயசு?"

"நாலு."

டாக்டர் எழுதிக்கொண்டிருக்கையில் வெளியே சாலையில் அபஸ்வரமாக அந்த சப்தம், மிக அவசரமாக ப்ரேக் போடுவதால் டயர் தேயும் சப்தம் கேட்டது.

*1980*

www.writersujatha.com

# கால்கள்

பிரிகெட் ரோடிலிருந்து பிரியும் சந்தில் ஒரு ஆட்டோ ஒர்க் ஷாப்பைக் கடந்து (டேய் சோமாறி, டெல்கோவைக் கள்ட்டேன்டா) மரப்படிகள் முணுமுணுக்கும் மாடி ஏறி, அந்த வீட்டை அடைந்து கதவைத் தட்டினதில் நிறைமாசக் கர்ப்பிணியான ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண் திறந்தாள். நான் ஃபெர்னாண்டஸைப் பார்க்க வந்திருப்பதாகச் சொன்னேன். அவள், “உள்ளே வாருங்கள். இன்னும் அரை மணியில் வந்துவிடுவான்” என்று சொல்லி, ஒரு நாற்காலியின் மேல் இருந்த செய்தித்தாள்களை விலக்கி, எனக்கு இடம் காட்டினாள். ஒரு திரைக்குள் மறைந்தாள். வருகிற வெள்ளிக்கிழமை பிரசவம் ஆகிவிடும்.

நான் மேற்குறிப்பிட்ட நாற்காலியின் விளிம்பில் அமர்ந்து என் நேரத்தை வீணாக்கும் ஃபெர்னாண்டஸை மனத்தில் திட்டிக் கொண்டேன். அவனை நேரில் பார்த்தால் திட்ட மனம் வராது. அவ்வளவு தர்க்க ரீதியுடன் பொய் சொல்லுவான். அறை சிறிய அறைதான். ஒரு கறுப்பு நாய் – டாஷண்ட் என்று நினைத்தேன் – மேஜை அடியில் படுத்துக்கொண்டு, எனக்கு வேலை கொடுப்பதற்கு இண்டர்வியூ பண்ணியவர் பார்த்தாரே, அம்மாதிரி பார்த்துக் கொண்டிருந்தது. குரைக்கும் உத்தேசம் இருப்பதாகத் தெரியவில்லை. ரிடையர் ஆன நாற்காலிகளில் எம்பிராய்டரி உறைகளுடன் தலையணைகள் இருந்தன. சுவரின் மர்லின் மன்ரோ, ஜான் வேன், பிரிட்டிஷ் அரசி எலிசபெத் பிலிப் கோமகனுடன், ஒரு புலித்தலை, ஹேக் விஸ்கியின் 1938ஆம் வருஷக் காலண்டர், ஏசு கிறிஸ்து – அவர் கையிலிருந்து சூர்ய ஒளிபோல் ஏதோ ஒன்று... அறையில் ரேடியோ ஒன்று இருந்தது. மியூசியத்தில் கேள்வி கேட்காமல் வாங்கிக்கொள்வார்கள். ரேடியோ அருகில் அவர் உட்கார்ந்திருந்தார். என்னையே சென்ற இரண்டு நிமிடங்களாகப் பார்த்துக்கொண்டிருந்தார்... அந்த ஸ்வெட்டர் அணிந்த கிழவர்.

கலங்கிய வெண் பச்சைக் கண்கள், மெல்லிய உதடுகள், முகத்தில் வரிவரியாக சுமார் எண்பது வயதின் சுவடுகள், புருவம் இல்லை. புருவத்துக்குப் பதில் இரண்டு கீறல்கள், நரம்பு தெரியும் கைகள், வலது கையில் பூப்பூவாகப் போட்டு ‘லிஸ்’ என்று பச்சைக் குத்தி இருந்தார். அருகே குட்டை ஸ்டூலில் அவரது ஸோலா தொப்பி ஒன்று அவருடன் உட்கார்ந்திருந்தது.

“ஜானைப் பார்க்க வந்திருக்கிறாயா?” என்றார் ஆங்கிலத்தில். குரல் சற்று நெருடலான சன்னமான குரல்.

“ஆம்” என்றேன்.

“பணம் வாங்கி இருக்கிறானா?”

“ஆம்” என்றேன்.

“எல்லோரிடமும் பணம் வாங்கி இருக்கிறான். எல்லாருக்கும் வாக்குறுதி கொடுத்திருக்கிறான்... எத்தனை?”

எத்தனை என்பதனை நான் சொல்ல விரும்பவில்லை. “எங்கே போயிருக்கிறான்?” என்றேன்.

“ஜே.ஸி.ரோடு போயிருக்கிறான். எலக்ட்ரானிக்ஸிலிருந்து ஆள் வந்தால் உட்கார வைக்கச் சொன்னான். நீதானே?”

"ஆம்."

"உன் வேலையாகத்தான் போயிருப்பான், டீ சாப்பிடுகிறாயா?"

ஆங்கிலத்தில், வாக்கிய அமைப்பில், நீ நீங்கள் வித்தியாசம் கிடையாது. என்றாலும், அவர் பேசிய தோரணையில் ஒருமைதான் தென்பட்டது.

"இந்தப் பெரிய மனிதருக்கு டீ கொண்டுவா."

"எஸ் பப்பா!" என்றது அந்தத் திரை.

ஒரு பெண் குழந்தை திரையை விலக்கிவிட்டு எட்டிப் பார்த்து, "எஸ் பப்பா" என்றது. ஐந்து செகண்டுகளுக்குப் பின் அதைவிட சின்னக் குழந்தை ஒன்று எட்டிப் பார்த்து அதைவிட மழலையில் "எஸ் பப்பா" என்றது. நான் எதிரே பார்த்தேன். சுவரில் புலி என்னைப் பார்த்தது. தலை மட்டும்.

"நான்தான் சுட்டேன்" என்றார் ஃபெர்னாண்டஸ்.

அந்தப் புலியை நாங்கள் இருவரும் பார்த்தோம்.

"அவள் ஒரு பதினாலு அடி அழகி!" என்றார். பாக்கி பதின்மூன்று அடியையும் சுவருக்குப் பின் யோசிக்க முயன்றேன். "உன்னிடம் சிகரெட் இருக்கிறதா?"

"நான் சிகரெட் பிடிப்பதில்லை" என்றேன். "நான் போய் அரைமணியில் வருகிறேன்" என்று சற்று எழுந்தேன்.

"உட்கார் உட்கார்" என்று சற்று அழுத்தமாகவே சொன்னார். உட்காராவிட்டால் என்னைச் சுட்டுவிடுவாரோ என்கிற சம்சயம் ஏற்பட்டதால் உட்கார்ந்தேன்.

நான் மறுபடி அந்த அறையை ஆராய்ந்தேன். வேறு என்ன செய்வது? அலமாரிக்குள் கறைபடிந்த, தூசி படர்ந்த வெள்ளிக் கோப்பை ஒன்று இருந்தது. போலீஸ் உடையில் ஒரு ஃபெர்னாண்ட ஸின் படம் இருந்தது. நான் அதைப் பார்ப்பதைப் பார்த்த பெரியவர், "அது யார் தெரியுமா?" என்றார்.

"நீங்களா?" என்றேன்.

முதல் தடவையாக அவர் பல்லைப் பார்த்தேன். சிரித்து, "ஆம்! நான் ஒரு போலீஸ் ஆபீஸராக இருந்தேன்" என்றார்.

வினோதமான இரண்டும் கெட்டான் சமூகம். விசாகப்பட்டினம், பிட்ரகுண்டா, பெங்களூர், சென்னை, பரங்கிமலை, கல்கத்தா, பம்பாய் என்று சிற்சில இடங்களில் சிறிய சிறிய கும்பல்களாக வாழும் சமூகம். இவர்களிடம் என்ன தப்பு? ஏன் இவர்கள் சிறுகச் சிறுக மறைந்து வருகிறார்கள்... இவர்களை நாம் இப்போது இந்தி சினிமாவிலும் கிளப் டான்சுகளிலும் லோகா ஷெட்டுகளிலும் ரேடியோ சிலோனின் ஆங்கில நேயர் விருப்பத்திலும்தான் காண முடிகிறது... என் காலேஜ் தினத்தில் இருந்த எண்ணிக்கைகூட இப்போது இல்லையே? எங்கே அடையாளம் இழந்து, கரைந்து கொண்டிருக்கிறார்கள்?

"பிரிட்டிஷ் காலத்தில், 1947க்கு முன் நான் போலீஸ் ஆபீஸராக இருந்தேன். அந்த நாட்கள்... " என்றார். அவர் கண்கள் என்னை ஊடுருவி அந்த நாட்களைப் பார்த்தன. மார்ஜி முக்கால் கப் டீ கொண்டுவந்து என் முன் ஸ்டூலைப் போட்டு வைத்தாள்.

“நமக்கு சுதந்திரம் வந்திருக்கக்கூடாது மிஸ்டர். உங்கள் பெயர் என்ன?”

சொன்னேன்.

அது அவருக்குச் சரியாகக் கேட்கவில்லை. “மிஸ்டர் நாதன்! நமக்கு சுதந்திரம் வந்திருக்கக்கூடாது. கல்யாணம் ஆகாதவர்களுக்குப் பிறந்தவர்கள் எல்லாம் இந்தத் தேசத்தை நாசம் பண்ணுகிறார்கள். செய்தித்தாளைப் பார். எத்தனை குற்றங்கள். கொலை, கொள்ளை, பலாத்காரம்.

“இருபத்து ஐந்து வருஷ சுதந்திரத்துக்குப் பின் இந்த தேசம் எனக்கு என்ன செய்துவிட்டது? எண்பத்து ஏழு ரூபாய் பென்ஷன்! எண்பத்து ஏழு – ப்ளடி ரூபாய்கள்! என் பெண்ணை இரவு தனியாக அனுப்ப முடியாது. கதர் குல்லாய் அணிந்த யாராவது ஒருவன் நடுவீதியில் ஸ்கர்டைத் தூக்குவான்! தெருவில் நடமாட முடியாது. பத்திரம் கிடையாது. என்ன தேசம் இது! இந்தத் தேசத்துக்குத் தேவை ஒரு சர்வாதிகாரி. ஒரு ரைஃபிளுடன் ஒரு மனிதன்! ரொட்டி என்ன விலை விற்கிறது? முட்டை என்ன விலை விற்கிறது! மாமிசம்?”

“ரொம்ப மோசம்” என்றேன். ஃபெர்னாண்டஸ் எப்போது வருவான்?

“மாணவர்கள் ஸ்ட்ரைக், தொழிலாளர்கள் ஸ்ட்ரைக், பைலட்கள், ரெயில்வே ஊழியர்கள்... பிரிட்டிஷ் ராஜ்யத்தில் இந்த மாதிரி கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியாது.”

‘பிரிட்டனிலும் நிறைய வேலை நிறுத்தங்கள் நடக்கின்றன’ என்று சொல்ல நினைத்–தேன். சொல்லவில்லை.

“அவன் ஒரு பெரிய மனிதன். அவன் நம்மை ஆண்டதில் ஒரு குறை சொல்ல முடியாது. இங்கிலீஷ்காரன் இந்த மாதிரி எல்லாம் நிகழ அனுமதித்திருப்பானா?”

“மாட்டான்” என்றேன். ஓ பெர்னாண்டஸ்!

“இந்த மாதிரி இஷ்டத்துக்கு வேலை நிறுத்தம் செய்ய முடியுமா அப்போதெல்லாம்? என்ன செய்வான் தெரியுமா?”

நான் பதில் சொல்ல அவர் காத்திருந்தார். பதில் வராமற் போகவே, “சுடுவான்” என்றார்.

“ஓ எஸ்! அவன் சுடுவதில் நம்பிக்கை வைத்திருந்தான். சுதந்திரம் கேட்டவர்களை நிறையச் சுட்டிருக்கிறான். நானே சுட்டிருக்கிறேன்.” என்றார்.

“ஆட்களையா?”

“கால்களை” என்று சிரித்தார்.

“கால்! யூ மீன் கால்களையா!”

அவர் சிரிப்பு அவர் முகமெல்லாம் விரிந்தது. “நான் என் சர்வீஸில் ஒரு இருநூறு கால்களைச் சுட்டிருப்பேன்! ஜஸ்ட் லெக்ஸ்! முழங்கால், ஷின் எலும்பு, பாதங்கள், கணுக்கால். எனக்கு இன்னும் முப்பது வருஷங்களுக்குப் பின்னும் கார்டைட் வாசனை போகவில்லை!”

அவர் மறுபடி தூரப்பார்வை பார்த்தார்.

www.writersujatha.com

“என்ன செய்வது? என் கடமை அப்படி. வெள்ளைக்காரன் ஆளைக் கொல்ல மாட்டான். சாதாரண ஜனங்களைக் கொல்ல மாட்டான். அவன் ஒரு பெரிய மனிதன். ஆனால் முட்டியைப் பெயர்த்துவிடுவான். ஸிம்பிள்! அப்போது எல்லாம் மெட்ரோவில் பால் நடனம் நடக்கும். ஃப்ரெஞ்சு தேசத்து ஒயின் ஒழுகும். பெண்கள் ஏராளமான மார்புடன் இருப்பார்கள். (என்னைப் பார்த்துக் கண்ணடித்தார்.) என்னிடம் ஒரு ரெட் இண்டியன் மோட்டார் பைக் இருந்தது. பத்து குதிரை சக்தி. கியர் கையில் (மார்பைக் காட்டி). என் மார்பில் மெடல்கள் இருந்தன. பாலிஷ் செய்த பூட்ஸில் வானம் தெரியும். என் நரம்புகள் இரும்பு நரம்புகள். தடதடவென்று ஃபெர்னாண்டஸ் தெருவில் பைக்கில் போகும்போது சாலையே ஸ்தம்பித்துப் போய்விடும். ‘அதோ போகிறான் பெர்னாண்டஸ்’ வயசுக்கு வந்த பெண்கள் தம் மடிமேல் கைவைத்து அழுத்திக் கொண்டு உள்ளே மறைவார்கள்! இடிஇடிப்பதுபோல் செல்வேன். அப்போது டி.ஐ.ஜி. மக்டோனால்ட், அப்புறம் டயஸ், ஃபிட்ஸ் பாட்ரிச் எவ்வளவு பெரிய ஆசாமிகள்! மக்டோனால்ட் மாதிரி ஒரு ஆள் இருந்தால் இந்திய போலீஸ் நிமிர்ந்துவிடும். என்னை ஜோ என்றுதான் கூப்பிடுவார். “ஜோ! பாட்டம்ஸ் அப் மேன்!” என்பார். சாயங்காலம் ஐந்து மணியிலிருந்து இரவு பதினொன்று வரை குடிப்போம். நிறுத்தமாட்டோம். மகாராஜா ஒரு ஜென்டில் மேன். இந்த மாநிலத்தில் காங்கிரஸ் தொந்தரவு அதிகமில்லை. நான் மதறாஸ் ஸ்டேட் சர்வீஸில் இருந்தேன். திருநெல்வேலியில் ஒரு கலகத்தைச் சமாளித்ததற்கு மெடல் கொடுத்தார்கள்.

“மக்டோனால்டுக்கு ஒரு பெண் இருந்தாள். எலிசபெத், அவள் என்மேல் நெருப்பாக இருந்தாள். ‘ஜோ எனக்குப் பூப்பறித்துத் தா’ என்பாள். ‘ஜோ எனக்கு சைக்கிள் கற்றுத்தா’ என்பாள். அவள் மார்பு ஷாம்பேன் கிண்ணங்கள் போலிருக்கும். அவளுக்கு நான் நிறையக் கற்றுக்கொடுத்தேன். நாங்கள் இரண்டு பேரும் ஒன்றிரண்டு விஷயங்களைச் சேர்ந்து கற்றுக்கொண்டோம். மக்டோனால்ட் ஒரு தடவை பார்த்துவிட்டு, ‘ஜோ! நீ செய்த காரியத்திற்கு உன்னை நான் சுட்டிருக்க வேண்டும். உன்னை நான் சுடவில்லை. ஏன்? நீ ஒரு நல்ல போலீஸ் ஆபிஸர். எங்களுக்கு நீ தேவையாக இருக்கிறாய். இனி ஒரு தடவை இம்மாதிரி நிகழ்ந்தால் உன் மூளையை வெடி வைத்துத் தீர்த்துவிடுவேன்!’ என்று விஸ்கி கொடுத்தார். பெரிய மனிதன். அப்புறம் நாங்கள் ஜாக்கிரதையாக இருந்தோம். எலிசபெத் ஒரு டீ எஸ்டேட் சொந்தக்கார இங்கிலீஷ்காரனைக் கல்யாணம் செய்துகொண்டு திப்ருகரில் இருக்கிறாள். இன்னும் எனக்கு கிறிஸ்துமஸ் கார்டுகள் அனுப்புகிறாள்!”

பெரியவருக்கு இப்போது எதிரே கேட்க ஆள் தேவையில்லாமல் இருந்தது. பேசிக்கொண்டே சென்றார்.

“ஏதாவது அமளி என்றால் மக்டோனால்ட் என்னைத்தான் கூப்பிடுவார். அவர் போன இடம் எல்லாம் என்னை எப்படியாவது மாற்றிக்கொண்டு வந்துவிடுவார். எங்கே அது? ஞாபகமில்லை. ஜவஹர்லால் ஒரு தடவை ஒரு கூட்டத்தில் பேச இருந்தார். பெரிய பொதுக்கூட்டம். பக்கத்துக் கிராமங்களிலிருந்து சாரிசாரியாக காலையிலிருந்தே ஜனங்கள் வந்துகொண்டிருந்தார்கள். ‘ஜோ’ என்றார் மக்டோனால்ட் கவலையுடன். நான், ‘சார் கவலைப்படாதீர்கள். சமாளித்துவிடுவேன்’ என்றேன். நேரு வரவில்லை. அவர் அதற்கு முன்பே கைதாகிவிட்டார். இங்கே யாரோ கிளப்பி விட்டார்கள், நாங்கள்தான் அவரை நகரத்துக்கு வரும் முன்னே கைது பண்ணிப் பூட்டி வைத்திருக்கிறோம் என்று. டி.ஐ.ஜி. ஆபீஸிற்கு முன் எட்டாயிரம் பத்தாயிரம் பேர் கும்பல் அடைத்துக்கொண்டு நிற்கிறது. ரோடு பூரா கதர்க் குல்லாய், வெள்ளைச் சட்டை... மக்டோனால்ட் ஜன்னல் வழியாகக் கவலையுடன் பார்க்கிறார். கேட் பூட்டியிருக்கிறது. ‘கேட் தாங்காது ஜோ!’ என்றார். ‘நாம் என்ன செய்யப் போகிறோம்?’ என்றார். நான், ‘சார் கவலைப்படாதீர்கள். சமாளிக்கிறேன்’ என்றேன். மொத்தம் நாற்பது போலீஸ்காரர்கள்தான் இருந்தார்கள். நான் என் ரைஃபிளை எடுத்துக்–கொண்டேன். எக்ஸ்ட்ரா காரிட்ஜ்கள் எடுத்துக்கொண்டேன். நான் மட்டும் வெளியே வந்தேன். ‘என்ன வேண்டும் உங்களுக்கு? நேரு வரவில்லை. நேரு ஊருக்கே

வரவில்லை’ என்றேன். அவர்கள், ‘நேருதான் வேண்டும்’ என்று கேட்டார்கள். நான் கொடுத்தேன்.

“முதலில் வானத்தில் சுட்டேன். அப்புறம் கேட்டின் முனையின் மேல் சுட்டேன். ஹெல்மெட் அணிந்திருந்தேன். கல் பறக்கிறது. அப்புறம் அவர்கள் கால்களை நோக்கிச் சுட்டேன். முழங்காலுக்குக் கீழே வேஷ்டி சிவந்தது இன்னும் ஞாபகம் இருக்கிறது.

“மாஜிக்போல் அந்தக் கூட்டம் விலகியது. நான் கால்களைத்தான் குறி வைத்தேன். கணுக்கால்கள், முழுங்கால்கள், செருப்பு! அவர்கள் செருப்பைக் கையில் எடுத்துக்–கொண்டு நொண்டி நொண்டி ஓடியது வேடிக்கையாக இருந்தது. எவ்வளவு பேர் இருந்தார்களோ அவர்களில் ஒருவனைக்கூட கொல்லவில்லை. என் கான்ஸ்டபிள்–களிடமும் சொல்வேன். ‘கீழே அடி! கீழே! கால்களை கால்களை!’

“ஆம்! நான் நிறையக் கால்களைச் சுட்டிருக்கிறேன். வேட்டைக்குப் போகும்–போதும்கூட எனக்குக் கால்களைச் சுடுவதில்தான் இஷ்டம்! நீல்காய் மான்கள், காட்டுப்பன்றி ஏன், புலி! எல்லாம் ஓடும்போது முன்னங்கால்களைத்தான் குறிவைப்பேன். குண்டு பட்டதும் அவை அடிக்கும் குட்டிக் கரணத்தைப் பார்க்கவேண்டும். அப்புறம் அது ஓட முயற்சிக்கும். ஓட முடியாது. கால்கள்!”

பெரிய ஃபெர்னாண்டஸ், “இப்போதுகூட நன்றாக குறி வைத்துக் கால்களை மட்டும் அடிக்கக்கூடிய திறமை அதிகம் பேரிடம் இல்லை” என்று வருத்தப்பட்டார்.

எலிசபெத்தின் நினைவும் அவர் சேதப்படுத்திய கால்களின் நினைவும் அவர் முகத்தில் வெளிச்சம் ஏற்றி இருந்தன. அப்போது மேஜையடி நாய் திடீரென்று எழுந்து, வாலை மிக வேகமாக ஆட்டிக்கொண்டு வாயிற் கதவுப் பக்கம் ஓடியது.

“ஜான் வந்துவிட்டான்” என்றார் பெரியவர். ஃபெர்னாண்டஸ் உள்ளே வந்து, “ஹலோ! சாரி. ரொம்ப நேரம் காத்திருந்தாயா?” என்றான்.

“பரவாயில்லை. நான் உன் அப்பாவுடன் பேசிக்கொண்டிருந் தேன்” என்றேன்.

பெரியவர், “ஜான்” என்று மகனைக் கூப்பிட்டார்.

“உன் வேலை முடிந்துவிட்டது” என்றான் ஜான் என்னிடம். “அப்பா உளறிக்–கொண்டிருந்தாரா?” என்றான்.

“கால்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்” என்றேன்.

“ஜான்! ஜான்! நான் உனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன்” என்றார் பெரியவர்.

“எஸ் பப்பா” என்றான் ஜான்.

“எனக்கு பாத்ரூம் போக வேண்டும். மார்ஜியைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. உனக்காகத்தான் காத்திருந்தேன்” என்றார்.

“ஒன் மினிட் மிஸ்டர் ராஜன்!” என்று என்னிடம் சொல்லிவிட்டு, ஜான் தன் தந்தையை நாற்காலியிலிருந்து அலாக்காக ஆட்டுக்குட்டி போல் தூக்கிக்கொண்டான். “அவரால் நடக்க முடியாது... அவர் கால்கள்... Paralysed” என்றான்.

*1978*



www.writersujatha.com

# காரணம்

தலைமை ஆசிரியரின் அறையில் காந்தியும் நேருவும் இளமையாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் பள்ளியின் கரஸ்பாண்டெண்ட்டுக்கு வாசித்தளிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரம் அறுசீர் விருத்தத்தில் ஃப்ரேம் போட்டு மாட்டப்பட்டிருந்தது.

“உட்காருங்கள்” என்றார் தலைமை ஆசிரியர். மாணிக்கம் நாற்காலியின் விளிம்பில் உட்கார்ந்தார்.

“உங்கள் வகுப்பில் உள்ள வடிவேலு எப்படி?”

“எப்படி என்றால் புரியவில்லை, ஸார்.”

“எப்படிப்பட்ட பையன்? சாதுவா? முட்டாளா? விஷமக்காரனா? எப்படி?”

“அவன் சற்று வித்தியாசமான பையன், அவன் ஃபெயில் ஆகிவிட்டான்.”

“தெரியும். எந்த விதத்தில் வித்தியாசமான பையன்?”

“மன்னிக்கவும். நீங்கள் எதற்காக இதை என்னிடம் கேட்கிறீர்கள்? சீனிவாசாச்–சாரியைக் கேட்கலாம். சேது மாதவனைக் கேட்கலாம்.”

“அவர்களையும் கேட்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அவன் எந்த விதத்தில் வித்தியாசமானவன்?”

“படிப்பில் அக்கறை கிடையாது. மிக மௌனமானவன். அழுத்தமானவன். பேச–மாட்டான். ஆனால்... ”

“ஆனால்?”

“ஏதாவது புகார் வந்திருக்கிறதா அவனைப் பற்றி?”

“அவனைப்பற்றி இல்லை. உங்களைப் பற்றி.”

“என்னது?”

தலைமை ஆசிரியர் தன் மேசை அறையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து மாணிக்கத்திடம் கொடுத்தார்.

“மேன்மை தங்கிய தலைமை ஆசிரியர் அவர்களுக்கு, என் மகன் வடிவேலு உங்கள் பள்ளியின் ஆசிரியர் மாணிக்கம் என்பவரைப் பற்றி என்னிடம் வந்து சொன்ன ஒரு சம்பவத்தைப் பற்றி உங்களுக்கு எழுத வேண்டியது அவசியமாகிறது. சென்ற புதன்கிழமை என் மகனை மாணிக்கம் மதகருகே அழைத்துச் சென்றதாகவும் அங்கே என் மகனை... ”

மாணிக்கம் மேலே விரைவாகப் படித்தார். அவர் முகத்தில் உஷ்ணம் ஏறியது. படிக்கப் படிக்க நெற்றியில் ரத்தக் குழாய்களின் துடிப்பைத் துல்லியமாக உணர ஆரம்பித்ததால் உதட்டு ஓரங்களில் சற்று ஒடுக்கம் ஏற்பட்டது.

“சே, என்ன ஸார் இது?”

தலைமை ஆசிரியர் மௌனமாக இருந்தார். பேசேன் முட்டாளே. நான் இதை நம்பவில்லை. இது நிச்சயம் பொய் என்று சொல்லேன். ஏன் பேசாமல் இருக்கிறாய்? “ஸார், நீங்கள் இதைப் பற்றி வேறு ஆசிரியர்களிடம் கேட்டீர்களா?”

“இல்லை, இன்னும் இல்லை.”

“வேண்டாம். நானே இதற்குப் பதில் சொல்கிறேன். இது என்னைப் பற்றிய அபாண்டம்.”

“எட்டு வயதுப் பையன் இதை முழுவதும் கற்பனை பண்ணிக் கொண்டு தன் அப்பாவிடம் சொல்லியிருக்கிறான் என்கிறீர்களா?”

“இதில் சந்தேகமா? பெரிய பொய்.”

“பையன் பொய் சொல்கிறான் என்கிறீர்கள்.”

“ஸார், நீங்கள் கேட்கும் தோரணை சரியாக இல்லை. நீங்கள் என்னைச் சந்தேகிக்கிறீர்களா என்ன?”

“அப்படியில்லை. என்னிடம் ஒரு புகார் வந்திருக்கிறது. அதை முடிக்க வேண்டியது என் கடமையல்லவா?”

“புகார். புகாருக்கும் ஒரு தர்மம் இருக்க வேண்டாமா? ஒரு... ஒரு... விதிமுறை, நியாயம்?” மாணிக்கம் பயத்துடன் சிரித்தார்.

மாணிக்கத்துக்கு திடீர் என்று தலைமை ஆசிரியரின் தம்பி மகன் ஞாபகம் வந்தது. அவன் பி. டி. முடித்திருக்கிறான். வேலை இல்லாமல் காத்திருக்கிறான். ஆம். காத்திருக்கிறான். தற்போது பள்ளியில் காலி இல்லை.

“நீங்கள் அவனை அடித்தீர்களா?”

“ஸார், நான் அடிப்பதே இல்லை என்பது உங்களுக்குத் தெரியும்... நாற்பது பேருக்கு ட்யூஷன் சொல்லித் தருவதில்லை... பிள்ளைகளைக் கடைக்குச் சாமான் வாங்க அனுப்புவதில்லை...” யாவும் தலைமை ஆசிரியரின் பாவங்கள். அதை இப்போது சொல்லி இருக்க வேண்டாம்.

“அவன் உங்கள்மேல் பழி சுமத்துவதற்கு என்ன காரணம் இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? அவனை ஃபெயில் ஆக்கியது நீங்கள் இல்லை. உங்கள் பாடத்தில் அவன்... முப்பத்தாறு வாங்கி இருக்கிறான்... (அதையும் பார்த்துவிட்டாயா?) காரணமே இல்லாமல் அவன் ஏன் உங்களைப் பற்றி அப்படிச் சொல்ல வேண்டும்?”

காரணம் இருக்கிறது. ஒன்றென்ன, கையும் களவுமாகப் பிடித்த பல காரணங்கள். அதை இப்போது அவரிடம் சொல்லலாமா?

“மிஸ்டர் மாணிக்கம், நீங்கள் அவனை அன்று அழைத்துச் சென்றீர்களா?”

“ஆம்.”

“தனியாக?”



www.writersujatha.com

“ஆம்.”

“எதற்கு?”

“அவனுக்குப் புத்திமதி சொல்வதற்கு... அவனுடன் பேசுவதற்கு. அவனுக்கு ராமகிருஷ்ணரின் வாழ்க்கையிலிருந்து ஒரு கதை சொன்னேன். அந்தப் பையன் ஒரு... ஒரு... ” வேண்டாம் வேண்டாம். சொல்ல வேண்டாம். சொன்னால் இவர் நம்பப் போவதில்லை. நான் பொய் சொல்கிறேன் என்று எடுத்துக்கொள்வார்.

“மிஸ்டர் மாணிக்கம், உங்களை பர்ஸன்லாக ஒரு கேள்வி கேட்கலாமா?”

“என்ன?”

“நீங்கள் ஏன் கல்யாணம் செய்துகொள்ளவில்லை?” மாணிக்கத்திற்கு நெற்றி நரம்புகள் வெடிக்கும் அளவுக்கு கோபம் வந்தது. “இட்ஸ் நன் ஆஃப் யுவர் பிஸினஸ்” என்றார் அழுத்தமாக.

தலைமை ஆசிரியர் அயர்ந்துவிட்டார்... மாணிக்கம் அவ்வளவு உரக்க அதுவரை பேசியதில்லை...

“ஸார், ஒரு நல்ல பள்ளியின் தலைமை ஆசிரியர் என்கிற ரீதியில் உங்களுக்கு உங்கள் ஸ்டாஃபிடம் கொஞ்சம் நம்பிக்கை, மரியாதை, பண்பான பழக்கம் வேண்டாம்?”

“நான் என்ன மரியாதைக் குறைவாக நடந்துவிட்டேன் என்று சொல்ல முடியுமா?” – அவர் குரலும் உயர்ந்தது.

“இந்தக் கடிதத்தைக் கிழித்துக் குப்பையிலே போட்டிருக்க வேண்டாம்? இந்த மாதிரி ஒருத்தன் கடிதம் எழுதிக் கொடுக்கிறான் என்றால் அதை அவன் முகத்தில் எறிந்திருக்க வேண்டாம்? என்ன ஆசாமி நீ... நீங்கள்... ”

“இப்போது மரியாதைக் குறைவாகப் பேசுவது நீரா, நானா?”

“மரியாதையுடன்தான் சொல்கிறேன் அய்யா. தலைமை ஆசிரியரே, மேன்மை தங்கியவரே, உங்கள் சதி எனக்குப் புரிகிறது. என்னை எப்படியாவது வேலை–யிலிருந்து நீக்கிவிட விரும்புகிறீர்கள் நீங்கள்.”

“மிஸ்டர் மா...ணிக்கம், உங்களை வேலையிலிருந்து நீக்குவது பற்றி யாராவது பேசினார்களா?”

“உங்கள் தம்பி மகனை என் இடத்தில் வைக்கத்தானே அந்தச் சதி?”

“தட்ஸ் இனஃப். உங்களுடன் எனக்கு மேலே பேச விருப்பமில்லை. நீங்கள் போகலாம்.”

“எனக்கு விருப்பம் மாஸ்டரே. எனக்கு விருப்பம். ரைட்டர் பணம் திருடியது எனக்குத் தெரியாதா? அதை அமுக்கியது யார் என்பது எனக்குத் தெரியாதா? புதிய கட்டிட காண்ட்ராக்டர் யார்? அவன் என்ன யாருக்குக் கொடுத்தான்?”

“கெட் அவுட். கெட் அவுட்.”



www.writersujatha.com

மாணிக்கம் தன் எதிரே இருந்த அந்த ரிஜிஸ்தரிலிருந்து ஒரு காகிதத்தைச் சரேல் என்று கிழித்தார். நடுங்கும் கரங்களுடன் அதில் தன் பேனாவால் நாலு வரி கிறுக்கினார். அந்தக் காகிதத்தைத் தலைமை ஆசிரியரின் முகத்தின் முன் பறக்க விட்டுவிட்டு வெளியே வந்தார்.

பி.எஸ்.கே. இடைநிலைப்பள்ளி ஆர்ச் வளைவின் கீழ் நின்றார். அருகே தண்ணீர்த் தொட்டியில் குளிர்ந்த நீரை முகத்தில் இறைத்துக் கொண்டு முகத்தைத் துடைத்துக்கொண்டார். கோபம் சற்றுத் தணிந்ததா? அவ்வளவுதான். பி.எஸ்.கே. அவ்வளவுதான். இந்த ஊர் பிடித்திருந்தது அவருக்கு. ஸ்திரமாக இங்கே இருக்கலாம் என்றுதான் நினைத்தார். முனிசிபாலிட்டி நூலகத்தில் சில நல்ல புத்தகங்கள் இருந்தன. பூப்பந்து ஆட சமயம் இருந்தது. ஆற்றில் குளிக்க வாய்ப்பிருந்தது. அந்த விதவை செய்து போட்ட சாப்பாட்டில் ருசி இருந்தது. எல்லாம் அவ்வளவுதான். இனி வேறு ஊர், வேறு பள்ளி, வேறு தலைமை ஆசிரியர்... வேறு வடிவேலுக்கள்.

வடிவேலு, எப்படி உன் அத்தனை இளம் மனம் இத்தனை விகாரமாக முடியும்? எப்படி... எப்படி இத்தனை பெரிய வயது வந்த பொய்யை உன்னால் ஜோடிக்க முடியும்?

வடிவேலு எட்டு வயதுப் பையன். மௌனமாக என்னைப் பழிவாங்கிவிட்டான். பென்சில் திருடினால் பரவாயில்லை. வீட்டுப் பாடங்கள் செய்யாவிட்டால் பரவாயில்லை. எட்டு வயதில் சமூகப் புஸ்தகத்துக்குள் அந்தப் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு பொம்மை பார்த்துக் காட்டிக்கொண்டிருந்தது... அது சின்னப் பாவமா? மைனர் பாவமா? அப்புறம்...

“ஸார், என்னவோ பண்ணான் ஸார்” என்ற அந்த அறியாச் சிறுமியின் குரல் அவர் மனதில் எதிரொலித்தது. “இல்லை ஸார், இல்லை ஸார், இவதான் என்னை வடிவேலு மாங்கா பறிச்சுத் தாடான்னா... வித்தை காட்டறேன் வாடான்னு... ”

நான் பி.டியில் படித்த சைக்காலஜி போதாது. அந்த சைகாலாஜி சொன்னதெல்லாம் அறியாத இளம் மனங்களைப் பற்றி... முகுந்தன் எதிரே வந்துகொண்டிருந்தான். அவரைப் பார்த்ததும் மரியாதையாக ஒதுங்கிக்கொண்டான்.

“முகுந்தா, இங்கே வா.”

சந்தோஷத்துடன் அருகே வந்தான். அவருடன் நடந்தான்.

“வடிவேலு வீடு எங்கே இருக்கு தெரியுமா?”

“மெயின் ரோடிலே போனிங்கன்னா போஸ்ட் ஆபீஸ் இருக்கிற தெருவில இடது பக்கம் திரும்பி நாலாவது சந்திலே கடைசி வீடு, பால் டிப்போவுக்கு எதிர்த்தாப்பலே. அங்கே போகணுமா? நான் காட்டவா ஸார்?”

“வேண்டாம் நீ போ.”

எதற்காக அங்கே போகிறேன்... ?

வடிவேலுவைப் பார்ப்பதற்கா? இல்லை. அவன் அப்பாவைப் பார்த்து ‘அய்யா, உங்கள் அன்பு மகன் அவ்வளவு அறியாதவன் அல்ல. அவனை நீங்கள் உடனே கவனிக்க வேண்டும்... இவனைத் திருத்த முயன்ற எனக்குச் சேதம் விளைந்தது பரவாயில்லை. ஆனால் உங்கள் மகனுக்கு உடனே தேவை... ’

பால் டிப்போ மூடி இருந்தது.

அந்த வீடு தனியாக இருந்தது. தாழ்வான வீடு. ஜன்னலைத் திரை மறைந்திருந்தது. வீட்டு வாசற்கதவு அரைகுறையாக மூடி இருந்தது. வாசலில் கோலமில்லை. உள்ளே இருட்டாக இருந்தது.

தட்டலாமா கூப்பிடலாமா என்று தயங்கினார்... அப்போது உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. வளையல் ஒலி கேட்டது.

“விடுங்க.”

“என்னடி வெக்கம்?”

“அவன் பாத்துடறப்போறான்.”

“யாரு?”

“உங்க மகன்.”

“வடிவேலுப் பயலா? அவன் சோடா வாங்கிண்டுவரப் போயிருக்கான்... என்ன உனக்கு இன்னிக்கு சீட்டுப் பேசுது... ”

“ஆமா, நீங்கதான் எல்லாம் பாத்துட்டிங்களே.”

“இன்னும் நீ காட்ட வேண்டியது நிறைய இருக்கு.”

அப்புறம் அருவருப்பான சிரிப்பு. வெளியே வந்து நடந்த மாணிக்கத்திற்கு வடிவேலுவின் மேல் அளவில்லாத இரக்கம் ஏற்பட்டது.

*1973*

www.writersujatha.com

# நகரம்

> “பாண்டியர்களின் இரண்டாம் தலைநகரம் மதுரை. பண்டைய தேசப் படங்களில் ‘மட்ரா’ என்று காணப்படுவதும், ஆங்கிலத்தில் ‘மதுரா என்று சொல்லப்படுவதும், கிரேக்கர்களால் ‘மெதோரா’ என்று குறிக்கப்படுவதும் இத்தமிழ் மதுரையேயாம்.”
>
> – *கால்டுவெல் ஒப்பிலக்கணம்*

சுவர்களில் ஓரடி உயர எழுத்துக்களில் விளம்பரங்கள் விதவிதமாக ஒன்றி வாழ்ந்தன. நிஜாம் லேடி புகையிலை – ஆர்.கே.கட்பாடிகள் – எச்சரிக்கை! புரட்சித் தீ! சுவிசேஷக் கூட்டங்கள் – ஹாஜி மூசா ஜவுளிக்கடை (ஜவுளிக்கடல்) – 30.9.73 அன்று கடவுளை நம்பாதவர்கள் சுமக்கப்போகும் தீச்சட்டிகள்.

மதுரையின் ஒரு சாதாரண தினம். எப்போதும் போல ‘பைப்’ அருகே குடங்கள் மனிதர்களுக்காக வரிசைத் தவம் இருந்தன. சின்னப் பையன்கள் ‘டெட்டானஸ்’ கவலை இன்றி மண்ணில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்கள் தேசியம் கலந்த டீஸல் புகை பரப்பிக்கொண்டிருந்தன. விறைப்பான கால்சராய் சட்டை அணிந்த, ப்ரோட்டீன் போதா போலீஸ்காரர்கள் ‘இங்கிட்டும் அங்கிட்டும்’ செல்லும் வாகன–மானிட போக்குவரத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தார்கள். நகரின் மனித இயக்கம் ஒருவித ப்ரௌனியன் இயக்கம்போல் இருந்தது (பௌதிகம் தெரிந்தவர்களைக் கேட்கவும்.) கதர் சட்டை அணிந்த மெல்லிய, அதிக நீளமில்லாத ஊர்வலம் ஒன்று சாலையின் இடதுபுறத்தில் அரசாங்கத்தை விலைவாசி உயர்வுக்காகத் திட்டி கொண்டே ஊர்ந்தது. செருப்பில்லாத டப்பாக்கட்டு ஜனங்கள், மீனாட்சி கோயிலின் ஸ்தம்பித்த கோபுரங்கள், வற்றிய வைகை, பாலம் – மதுரை!

நம் கதை இந்த நகரத்துக்கு இன்று வந்திருக்கும் ஒரு பெண்ணைப் பற்றியது. வள்ளியம்மாள் தன் மகள் பாப்பாத்தியுடன் மதுரை பெரியாஸ்பத்திரியில் ஓ.பி. டிபார்ட்மெண்டின் காரிடாரில் காத்திருந்தாள். முதல் தினம் பாப்பாத்திக்கு சுரம். கிராம ப்ரைமரி ஹெல்த் சென்ட்டரில் காட்டியதில் அந்த டாக்டர் பயங்காட்டி விட்டார். “உடனே பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போ” என்றார். அதிகாலை பஸ் ஏறி...

பாப்பாத்தி ஸ்ட்ரெச்சரில் கிடந்தாள். அவளைச் சூழ்ந்து ஆறு டாக்டர்கள் இருந்தார்கள். பாப்பாத்திக்குப் பன்னிரண்டு வயது இருக்கும். இரண்டு மூக்கும் குத்தப்பட்டு ஏழைக் கண்ணாடிக் கற்கள் ஆஸ்பத்திரி வெளிச்சத்தில் பளிச்சிட்டன. நெற்றியில் விபூதிக் கீற்று. மார்புவரை போர்த்தப்பட்டுத் தெரிந்த கைகள் குச்சியாய் இருந்தன. பாப்பாத்தி **ஜு**ரத் தூக்கத்தில் இருந்தாள். வாய் திறந்திருந்தது.

பெரிய டாக்டர் அவள் தலையைத் திருப்பிப் பார்த்தார். கண் இரப்பையைத் தூக்கிப் பார்த்தார். கன்னங்களை விரலால் அழுத்திப் பார்த்தார். விரல்களால் மண்டையோட்டை உணர்ந்து பார்த்தார். பெரிய டாக்டர் மேல்நாட்டில் படித்தவர். போஸ்ட் கிரா**ஜு**வேட் வகுப்புக்கள் எடுப்பவர். ப்ரொஃபஸர். அவரைச் சுற்றிலும் இருந்தவர்கள் அவரின் டாக்டர் மாணவர்கள்.

“Acute case of Meningitis. Notice the...”

வள்ளியம்மாள் அந்தப் புரியாத சம்பாஷணையினூடே தன் மகளையே ஏக்கத்துடன் நோக்கிக்கொண்டிருந்தாள். சுற்றிலும் இருந்தவர்கள் ஒவ்வொருவராக வந்து ஆஃப்தல்மாஸ்கோப் மூலம் அந்தப் பெண்ணின் கண்ணுக்குள்ளே பார்த்தார்கள். டார்ச்

அடித்து விழிகள் நகருகின்றனவா என்று சோதித்தார்கள். குறிப்புகள் எடுத்துக் கொண்டார்கள்.

பெரிய டாக்டர், "இவளை அட்மிட் பண்ணிடச் சொல்லுங்கள்" என்றார்.

வள்ளியம்மாள் அவர்கள் முகங்களை மாற்றி மாற்றிப் பார்த்தாள். அவர்களில் ஒருவர், "இத பாரும்மா, இந்தப் பெண்ணை உடனே ஆஸ்பத்திரியில் சேர்க்கணும். அதோ அங்கே உட்கார்ந்திருக்காரே, அவர்கிட்ட போ. சீட்டு எங்கே?" என்றார்.

வள்ளியம்மாளிடம் சீட்டு இல்லை.

"சரி, அவரு கொடுப்பாரு. நீ வாய்யா இப்படி பெரியவரே!"

வள்ளியம்மாள் பெரிய டாக்டரைப் பார்த்து, "அய்யா, குளந்தைக்குச் சரியாய்டுங்களா?" என்றாள்.

"முதல்லே அட்மிட் பண்ணு. நாங்க பார்த்துக்கறோம். டாக்டர் தனசேகரன், நானே இந்தக் கேஸைப் பார்க்கிறேன். ஸீ தட் ஷி இஸ் அட்மிட்டட். எனக்கு கிளாஸ் எடுக்கணும். போயிட்டு வந்ததும் பார்க்கறேன்."

மற்றவர்கள் புடைசூழ அவர் ஒரு மந்திரிபோல் கிளம்பிச் சென்றார். டாக்டர் தனசேகரன் அங்கிருந்த சீனிவாசனிடம் சொல்லிவிட்டுப் பெரிய டாக்டர் பின்னால் விரைந்தார்.

சீனிவாசன் வள்ளியம்மாளைப் பார்த்தான்.

"இங்கே வாம்மா. உன் பேர் என்ன...? டேய் சாவு கிராக்கி! அந்த ரிஜிஸ்தரை எடுடா!"

"வள்ளியம்மாள்."

"பேஷண்ட் பேரு?"

"அவரு இறந்து போய்ட்டாருங்க."

சீனிவாசன் நிமிர்ந்தான்.

"பேஷன்ட்டுன்னா நோயாளி... யாரைச் சேர்க்கணும்?"

"என் மகளைங்க."

"பேரு என்ன?"

"வள்ளியம்மாளுங்க."

"என்ன சேட்டையா பண்றே? உன் மக பேர் என்ன?"

"பாப்பாத்தி."

"பாப்பாத்தி!... அப்பாடா. இந்தா, இந்தச் சீட்டை எடுத்துக்கிட்டுப் போயி இப்படியே நேராப் போனின்னா அங்கே மாடிப் படிக்கிட்ட நாற்காலி போட்டுக்கிட்டு ஒருத்தர் உட்காந்திருப்பார். வருமானம் பாக்கறவரு. அவருகிட்ட கொடு."

“குளந்தைங்க?”

“குளந்தைக்கு ஒண்ணும் ஆவாது. அப்படியே படுத்திருக்கட்டும். கூட யாரும் வல்லையா? நீ போய் வா... விஜயரங்கம் யாருய்யா?”

வள்ளியம்மாளுக்குப் பாப்பாத்தியை விட்டுப் போவதில் இஷ்டமில்லை. அந்த க்யூ வரிசையும் அந்த வாசனையும் அவளுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. இறந்து போன தன் கணவன்மேல் கோபம் வந்தது.

அந்தச் சீட்டைக் கொண்டு அவள் எதிரே சென்றாள். நாற்காலி காலியாக இருந்தது. அதன் முதுகில் அழுக்கு இருந்தது. அருகே இருந்தவரிடம் சீட்டைக் காட்டினாள். அவர் எழுதிக்கொண்டே சீட்டை இடது கண்ணின் கால்பாகத்தால் பார்த்தார். “இரும்மா, அவரு வரட்டும்” என்று காலி நாற்காலியைக் காட்டினார். வள்ளியம்மாளுக்குத் திரும்பித் தன் மகளிடம் செல்ல ஆவல் ஏற்பட்டது. அவள் படிக்காத நெஞ்சில், காத்திருப்பதா... குழந்தையிடம் போவதா என்கிற பிரச்சினை உலகளவுக்கு விரிந்தது.

‘ரொம்ப நேரமாவுங்களா?’ என்று கேட்கப் பயமாக இருந்தது அவளுக்கு.

வருமானம் மதிப்பிடுபவர் தன் மருமானை அட்மிட் பண்ணி விட்டு மெதுவாக வந்தார். உட்கார்ந்தார். ஒரு சிட்டிகைப் பொடியை மூக்கில் மூன்று தடவை தொட்டுக்கொண்டு கர்ச்சீப்பைக் கயிறாகச் சுருட்டித் தேய்த்துக்கொண்டு சுறுசுறுப்பானார்.

“த பார். வரிசையா நிக்கணும். இப்படி ஈசப்பூச்சி மாதிரி வந்தீங்கன்னா என்ன செய்யறது?”

வள்ளியம்மாள் முப்பது நிமிஷம் காத்திருந்தபின் அவள் நீட்டிய சீட்டு அவளிடமிருந்து பிடுங்கப்பட்டது.

“டாக்டர்கிட்ட கையெழுத்து வாங்கிக்கிட்டு வா. டாக்டர் கையெழுத்தே இல்லையே அதிலே!”

“அதுக்கு எங்கிட்டுப் போவணும்?”

“எங்கேருந்து வந்தே?”

“மூனாண்டிப்பட்டிங்க!”

கிளார்க் “ஹத்” என்றார். சிரித்தார். “மூனாண்டிப்பட்டி! இங்கே கொண்டா அந்தச் சீட்டை.”

சீட்டை மறுபடி கொடுத்தாள். அவர் அதை விசிறிபோல் இப்படித் திருப்பினார்.

“உன் புருசனுக்கு என்ன வருமானம்?”

“புருசன் இல்லீங்க.”

“உனக்கு என்ன வருமானம்?”

அவள் புரியாமல் விழித்தாள்.

“எத்தனை ரூபா மாசம் சம்பாதிப்பே?”

“அறுப்புக்குப் போனா நெல்லாக் கிடைக்கும். அப்புறம் கம்பு, கேவரகு!”

“ரூபா கிடையாதா!... சரி சரி. தொண்ணூறு ரூபா போட்டு வெக்கறேன்.”

“மாசங்களா?”

“பயப்படாதே. சார்ஜு பண்ணமாட்டாங்க. இந்தா, இந்தச் சீட்டை எடுத்துக்கொண்டு இப்படியே நேராப் போய் இடது பக்கம் – பீச்சாங்கைப் பக்கம் திரும்பு. சுவத்திலே அம்பு அடையாளம் போட்டிருக்கும். 48ஆம் நம்பர் ரூமுக்குப் போ.”

வள்ளியம்மாள் அந்தச் சீட்டை இரு கரங்களிலும் வாங்கிக் கொண்டாள். கிளார்க் கொடுத்த அடையாளங்கள் அவள் எளிய மனதை மேலும் குழப்பியிருக்க, காற்றில் விடுதலை அடைந்த காகிதம்போல் ஆஸ்பத்திரியில் அலைந்தாள். அவளுக்குப் படிக்க வராது. 48ஆம் நம்பர் என்பது உடனே அவள் ஞாபகத்திலிருந்து விலகி இருந்தது. திரும்பிப் போய் அந்த கிளார்க்கைக் கேட்க அவளுக்கு அச்சமாக இருந்தது.

ஒரே ஸ்ட்ரெச்சரில் இரண்டு நோயாளிகள் உட்கார்ந்துகொண்டு, பாதி படுத்துக்கொண்டு மூக்கில் குழாய் செருகி இருக்க அவளைக் கடந்தார்கள். மற்றொரு வண்டியில் ஒரு பெரிய வாயகன்ற பாத்திரத்தில் சாம்பார் சாதம் நகர்ந்து–கொண்டிருந்தது. வெள்ளைக் குல்லாய்கள் தெரிந்தன. அலங்கரித்துக்கொண்டு, வெள்ளைக் கோட் அணிந்து கொண்டு, ஸ்டெதாஸ்கோப் மாலையிட்டு, பெண் டாக்டர்கள் சென்றார்கள். போலீஸ்காரர்கள், காபி டம்ளர்காரர்கள், நர்ஸ்கள் எல்லோரும் எல்லாத் திசையிலும் நடந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அவசரத்தில் இருந்தார்கள். அவர்களை நிறுத்திக் கேட்க அவளுக்குத் தெரியவில்லை. என்ன கேட்பது என்றே அவளுக்குத் தெரியவில்லை. ஏதோ ஒரு அறையின் முன் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு ஆள் அவள் சீட்டுப் போலப் பல பழுப்புச் சீட்டுக்களைச் சேகரித்துக்கொண்டிருந்தான். அவன் கையில் தன் சீட்டைக் கொடுத்தாள். அவன் அதைக் கவனமில்லாமல் வாங்கிக்கொண்டான். வெளியே பெஞ்சில் எல்லோரும் காத்திருந்தார்கள். வள்ளியம்மாளுக்குப் பாப்பாத்தியின் கவலை வந்தது. அந்தப் பெண் அங்கே தனியாக இருக்கிறாள். சீட்டுக்களைச் சேகரித்தவன் ஒவ்வொரு பெயராகக் கூப்பிட்டுக்கொண்டிருந்தான். கூப்பிட்டு வரிசையாக அவர்களை உட்கார வைத்தான். பாப்பாத்தியின் பெயர் வந்ததும் அந்தச் சீட்டைப் பார்த்து, “இங்க கொண்டு வந்தியா! இந்தா,” சீட்டைத் திருப்பிக் கொடுத்து, “நேராப் போ,” என்றான். வள்ளியம்மாள், “அய்யா, இடம் தெரியலிங்களே” என்றாள். அவன் சற்று யோசித்து எதிரே சென்ற ஒருவனைத் தடுத்து நிறுத்தி, “அமல்ராஜ், இந்த அம்மாளுக்கு நாற்பத்தி எட்டாம் நம்பரைக் காட்டுய்யா. இந்த ஆள் பின்னாடியே போ. இவர் அங்கேதான் போறார்” என்றான்.

அவள் அமல்ராஜின் பின்னே ஓடவேண்டியிருந்தததது.

அங்கே மற்றொரு பெஞ்சில் மற்றொரு கூட்டம் கூடியிருந்தது. அவள் சீட்டை ஒருவன் வாங்கிக்கொண்டான். வள்ளியம்மாளுக்கு ஒன்றும் சாப்பிடாததாலும், அந்த ஆஸ்பத்திரி வாசனையினாலும் கொஞ்சம் சுற்றியது.

அரைமணி கழித்து அவள் அழைக்கப்பட்டாள். அறையின் உள்ளே சென்றாள். எதிர் எதிராக இருவர் உட்கார்ந்து காகிதப் பென்சிலால் எழுதிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தன் அவள் சீட்டைப் பார்த்தான். திருப்பிப் பார்த்தான். சாய்த்துப் பார்த்தான்.

“ஓ.பி. டிபார்ட்மெண்டிலிருந்து வரியா?”

இந்தக் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

“அட்மிட் பண்றதுக்கு எளுதி இருக்கு. இப்ப இடம் இல்லை. நாளைக் காலையிலே சரியா ஏழரை மணிக்கு வந்துடு. என்ன?”

“எங்கிட்டு வரதுங்க?”

“இங்கேயே வா. நேரா வா, என்ன?”

அந்த அறையைவிட்டு வெளியே வந்ததும் வள்ளியம்மாளுக்கு ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் தனியாக விட்டு வந்துவிட்ட தன் மகள் பாப்பாத்தியின் கவலை மிகப் பெரிதாயிற்று. அவளுக்குத் திரும்பிப் போகும் வழி தெரியவில்லை. ஆஸ்பத்திரி அறைகள் யாவும் ஒன்றுபோல் இருந்தன. ஒரே ஆசாமி திரும்பத் திரும்ப பல்வேறு அறைகளில் உட்கார்ந்திருப்பதுபோல் தோன்றியது. ஒரு வார்டில் கையைக் காலைத் தூக்கி, கிட்டி வைத்துக் கட்டி, பல பேர் படுத்திருந்தார்கள். ஒன்றில் சிறிய குழந்தைகள் வரிசையாக முகத்தைச் சுளித்து அழுதுகொண்டிருந்தன. மிஷின்களும், நோயாளிகளும், டாக்டர்களுமாக அவளுக்குத் திரும்பும் வழி புரியவில்லை.

“அம்மா” என்று ஒரு பெண் டாக்டரைக் கூப்பிட்டு தான் புறப்பட்ட இடத்தின் அடையாளங்களைச் சொன்னாள். “நிறைய டாக்டருங்க கூடிப் பேசிக்கிட்டாங்க. வருமானம் கேட்டாங்க, பணம் கொடுக்க வேண்டாம்னு சொன்னாங்க. எம் புள்ளையை அங்கிட்டு விட்டுட்டு வந்திருக்கேன் அம்மா!”

அவள் சொன்ன வழியில் சென்றாள். அங்கே கேட்டு கதவு பூட்டியிருந்தது. அப்போது அவளுக்குப் பயம் திகிலாக மாறியது. அவள் அழ ஆரம்பித்தாள். நட்ட நடுவில் நின்றுகொண்டு அழுதாள். ஒரு ஆள் அவளை ஓரமாக ஒதுங்கி நின்று அழச் சொன்னான். அந்த இடத்தில் அவள் அழுவது அந்த இடத்து அஸெப்டிக் மணம்போல் எல்லோருக்கும் சகஜமாக இருந்திருக்க வேண்டும்.

“பாப்பாத்தி! பாப்பாத்தி! உன்னை எங்கிட்டுப் பாப்பேன்? எங்கிட்டுப் போவேன்!” என்று பேசிக்கொண்டே நடந்தாள். ஏதோ ஒரு பக்கம் வாசல் தெரிந்தது. ஆஸ்பத்திரியை விட்டு வெளியே செல்லும் வாசல். அதன் கேட்டைத் திறந்து வெளியே மட்டும் செல்லவிட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த வாசலைப் பார்த்த ஞாபகம் இருந்தது அவளுக்கு.

வெளியே வந்துவிட்டாள். அங்கிருந்துதான் தொலைதூரம் நடந்து மற்றொரு வாசலில் முதலில் உள் நுழைந்தது ஞாபகம் வந்தது. அந்தப் பக்கம் ஓடினாள். மற்றொரு வாயிலை அடைந்தாள். அந்த மரப்படிகள் ஞாபகம் வந்தது. அதோ வருமானம் கேட்ட ஆசாமியின் நாற்காலி காலியாக இருக்கிறது. அங்கேதான்!

ஆனால் வாயில்தான் மூடப்பட்டிருந்தது. உள்ளே பாப்பாத்தி ஒரு ஓரத்தில் இன்னும் அந்த ஸ்ட்ரெச்சரில் கண்மூடிப் படுத்திருப்பது தெரிந்தது.

“அதோ! அய்யா, கொஞ்சம் கதவைத் திறவுங்க. எம்மவ அங்கே இருக்கு.”

“சரியா மூணு மணிக்கு வா. இப்ப எல்லாம் க்ளோஸ்.” அவனிடம் பத்து நிமிஷம் மன்றாடினாள். அவன் பாஷை அவளுக்குப் புரியவில்லை. தமிழ்தான், அவன் கேட்டது அவளுக்குப் புரியவில்லை. சில்லறையைக் கண்ணில் ஒத்திக்கொண்டு யாருக்கோ அவன் வழிவிட்டபோது அந்த வழியில் மீறிக்கொண்டு உள்ளே ஓடினாள். தன் மகளை வாரி அணைத்துக்கொண்டு தனியே பெஞ்சில் போய் உட்கார்ந்துகொண்டு அழுதாள்.

பெரிய டாக்டர் எம்.டி. மாணவர்களுக்கு வகுப்பு எடுத்து முடிந்ததும் ஒரு கப் காப்பி சாப்பிட்டுவிட்டு வார்டுக்குச் சென்றார். அவருக்குக் காலை பார்த்த மெனின்ஜைடிஸ்

கேஸ் நன்றாக ஞாபகம் இருந்தது. B.M.J.யில் சமீபத்தில் புதிய சில மருந்துகளைப் பற்றி அவர் படித்திருந்தார்.

“இன்னிக்குக் காலையிலே அட்மிட் பண்ணச் சொன்னேனே மெனின்ஜைடிஸ் கேஸ். பன்னிரண்டு வயசுப் பொண்ணு எங்கேய்யா?”

“இன்னிக்கு யாரும் அட்மிட் ஆகலையே டாக்டர்?”

“என்னது? அட்மிட் ஆகலையா? நான் ஸ்பெஸிஃபிக்காகச் சொன்னேனே! தனசேகரன், உங்களுக்கு ஞாபகம் இல்லை?”

“இருக்கிறது டாக்டர்!”

“பால்! கொஞ்சம் போய் விசாரிச்சுட்டு வாங்க. அது எப்படி மிஸ் ஆகும்?”

பால் என்பவர் நேராகக் கீழே சென்று எதிர் எதிராக இருந்த கிளார்க்குகளிடம் விசாரித்தார்.

“எங்கேய்யா! அட்மிட் அட்மிட்னு நீங்க பாட்டுக்கு எழுதிப் புடறீங்க. வார்டிலே நிக்க இடம் கிடையாது!”

“ஸ்வாமி! சீஃப் கேக்கறார்?”

“அவருக்குத் தெரிஞ்சவங்களா?”

“இருக்கலாம். எனக்கு என்ன தெரியும்?”

“பன்னண்டு வயசுப் பொண்ணு ஒண்ணும் நம்ப பக்கம் வரலை. வேற யாராவது வந்திருந்தாக்கூட எல்லாரையும் நாளைக்குக் காலை 7.30க்கு வரச் சொல்லிட்டேன். ராத்திரி ரெண்டு மூணு பெட் காலியாகும். எமர்ஜன்ஸின்னா முன்னாலேயே சொல்லணுமில்லை. பெரியவருக்கு அதிலே இண்ட்ரஸ்ட் இருக்குன்னு ஒரு வார்த்தை! உறவுக்காரங்களா?”

வள்ளியம்மாளுக்கு மறுநாள் காலை 7–30 வரைதான் என்ன செய்யப்போகிறோம் என்பது தெரியவில்லை. அவளுக்கு ஆஸ்பத்திரியின் சூழ்நிலை மிகவும் அச்சம் தந்தது. அவர்கள் தன்னைப் பெண்ணுடன் இருக்க அனுமதிப்பார்களா என்பது தெரியவில்லை. வள்ளியம்மாள் யோசித்தாள். தன் மகள் பாப்பாத்தியை அள்ளி அணைத்துக்கொண்டு மார்பின் மேல் சார்த்திக்கொண்டு, தலை தோளில் சாய, கைகால்கள் தொங்க, ஆஸ்பத்தியைவிட்டு வெளியே வந்தாள். மஞ்சள் நிற சைக்கிள் ரிக்ஷாவில் ஏறிக்கொண்டாள். அவனை பஸ் ஸ்டாண்டுக்குப் போகச் சொன்னாள்.

“What nonsense! நாளைக்குக் காலை ஏழரை மணியா? அதுக்குள்ள அந்தப் பெண் செத்துப்போய்டும்யா! டாக்டர் தனசேகர், நீங்க ஓ.பியிலே போய்ப் பாருங்க. அங்கேதான் இருக்கும்! இந்த ரெச்சட் வார்டிலே ஒரு பெட் காலி இல்லைன்னா நம்ம டிபார்மெண்ட் வார்டிலே பெட் இருக்குது. கொடுக்கச் சொல்லுங்க. க்விக்!”

“டாக்டர், அது ரிஸர்வ் பண்ணி வெச்சிருக்கு!”

“I don’t care. I want that girl admitted now. Right now!”

பெரியவர் அம்மாதிரி இதுவரை இரைந்ததில்லை. பயந்த டாக்டர் தனசேகரன், பால், மிராண்டா என்கிற தலைமை நர்ஸ் எல்லோரும் வள்ளியம்மாளைத் தேடி ஓ.பி. டிபார்ட்மெண்டுக்கு ஓடினார்கள்.

‘வெறும் சுரம்தானே? பேசாமல் மூனாண்டிப்பட்டிக்கே போய்விடலாம். வைத்தியரிடம் காட்டிவிடலாம். கிராம ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டாம். அந்த டாக்டர்தான் பயங்காட்டி மதுரைக்கு விரட்டினார். சரியாகப் போய்விடும். வெள்ளைக்கட்டி போட்டு விபூதி மந்திரித்து விடலாம்.’

சைக்கிள் ரிக்ஷா பஸ் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. வள்ளியம்மாள், பாப்பாத்திக்குச் சரியாய்ப் போனால் வைதீஸ்வரன் கோயிலுக்கு இரண்டு கை நிறையக் காசு காணிக்கையாக அளிக்கிறேன் என்று வேண்டிக்கொண்டாள்.

*1972*